உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ-வித்தியாரண்ணியசுவாமிகள்

அருளிச்செய்த

பஞ்சதசப்பிரகரணம்.

இஃது,

சமிவனக்ஷேத்திரமென்னுங் கோயிலூர்,

ஸ்ரீ-முத்துராமலிங்கசுவாமிகளின்

ஆதீனத்திற்குரிய

ஸ்ரீ-சிதம்பரஸ்வாமிகள்

மாணாக்கர்களிலொருவராகிய

அ-இராமசாமி சுவாமிகள்

பதிப்பித்தப் பிரதிக்கிணங்க,

சிலமூலசுலோக ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு

திருமூலர் மரபில் சுத்தாத்வைத வேதாந்த சித்தாந்த சமரச

ஞானசாரியராய் எழுந்தருளியிருந்த

முத்துகிருஷ்ணபிர்ம்மம் அவர்கள்

மாணாக்கராகிய,

ஞானசுந்தரபிர்ம்மம் அவர்களால்

பார்வையிட்டபிரதிக்கிணங்க

சிலவித்துவான்கள் முன்னிலையில்

பிழையறப்பரிசோதிக்கப்பட்டு

சென்னை,

ஜீவகாருண்யவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1904.

இதன் விலை ரூபா—1.

திருச்சிற்றம்பலம்.

பஞ்சதசப்பிரகரண அட்டவணை.

		பக்கம்.	சங்கை உத்தரத் தொகை.
௧.	சித்திரதீபம்.	௧	௧௨௬
௨.	திருப்திதீபம்.	௩௫	௧௧௪
௩.	கூடஸ்த தீபம்.	௬௭	௪௫
௪.	தியானதீபம்.	௮௦	௮௨
௫.	நாடகதீபம்.	௱	௩௪
௬.	தத்துவவிவேகம்.	௧௦௭	௨௩
௭.	பஞ்சபூதவிவேகம்.	௧௧௫	௩௯
௮.	பஞ்சகோசவிவேகம்.	௧௨௬	௧௨
௯.	துவிதவிவேகம்.	௧௩௦	௯
௧௦.	மகாவாக்கியவிவேகம்.	௧௩௮	௫
௧௧.	யோகாநந்தம்.	௧௪௧	௩௧
௧௨.	ஆத்மாநந்தம்.	௧௫௧	௨௪
௧௩.	அத்துவிதாநந்தம்.	௧௬௦	௪௭
௧௪.	வித்தியாநந்தம்.	௧௭௪	௨
௧௫.	விஷயாநந்தம்.	௧௭௭	௧௨

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௫.	௧௮.	சொல்லுகிறாற்போல.	சொல்லுகிறாப்போல.
௧௧.	௧௫.	மனதாமலிக்கிற.	மனஞ்சலிக்கிற.
௨௬.	௧௫.	அந்தபிராந்தி.	அந்தப்பிராந்தி.
௨௬.	௧௬.	செய்துக்காட்டின.	செய்துகாட்டின.
௬௪.	௧௮.	போத.	போது.
௭௪.	௮.	பட்டவனுக்கு.	பட்டவனுக்குச்.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

பஞ்சதசப்பிரகரணம்.

குருஸ்துதி.

அநேகவித லக்ஷண விஸ்தாரத்துடனே கூடியிராநின்ற மஹா மாயாமோஹத்தை எந்நேரமும் எடுத்து விழுங்குகிறதே வேலையாயிருக்கின்ற ஸ்ரீ சங்கராசாரிய குருமூர்த்திகளினது பாதாரவிந்தங்களுக்கு நமஸ்காரம்.

நூல் ஆரம்பம்.

முதலாவது

சித்திரதீபம்.

வித்தியாரண்ணிய ஸ்வாமிகள்: உலோகாநுக்கிரக நிமித்தமாக வேதாந்தத்தினுடைய சகலபொருட்களெல்லாம் மனதிலே சேகரித்துக்கொண்டு வேதாந்தவிஷயமெல்லாம் அதிகரிக்கமாட்டாதபேருக்கும் வேதாந்தமனைத்தும் படித்தாலும் அதன் அர்த்தந்தெளிந்தறியக்கூடாத சகலருக்கும் எளிதாக வேதாந்தத்தினுடைய உண்மைப்பொருள்களைக் கண்டநுபவித்து மோக்ஷமடையத்தக்கதாக வேதாந்த சம்மதப்படிக்குத் தம்முடைய மனதிலேயிருக்கின்ற பிரமாநுபவத்தைப் பஞ்சதசப் பிரகரணத்தினாலே வெளிப்படுத்தவேண்டுமென்று பதினைந்து பிரகரணத்திற்குள் முந்தினபிரகரணத்தினாலே

அத்தியாரோபம் அபவாதம் என்கிற இரண்டுநியாயத்தையுஞ் தழுவிக்கொண்டு பரமாத்மாவினிடத்திலே ஆரோபிக்கப்பட்டிருக்கிற ஜகத்தினுடைய இலக்ஷணஞ் சித்திரமேயல்லாமல் உண்மையல்லவென்கிறதைச் சித்திரபட திருஷ்டாந்த முன்னிலையாக வெளிசெய்ததுபோல:—

புடவையினிடத்திலே சித்திரம் ஆரோபிக்கப் பட்டாற்போலப் பரமாத்மாவாகவிருக்கின்ற தன்னுடைய சொரூபத்திலே ஜீவன் ஜகத்து ஈஸ்வரன் என்கின்ற சித்திரம் ஆரோபிக்கப் பட்டதென்றறிக.

(க) சித்திரப்படந் தானே தானாகவிருந்தால் வெளுத்த படமென்றும், கஞ்சிபூசினால் பசைப்படமென்றும், கரியாலே சித்திரம் அச்சுக்கட்டினால் அஞ்சனப்படமென்றும், வர்ணமடைத்துத் தீர்ந்தால் இரஞ்சித படமென்றும் கண்டாற்போல; பரமாத்மாவிற்கு நாலவஸ்தையேது, அதற்கு உபாதியேதென்கிற சங்கைக்கு:—

பரமாத்மா, ஒருபாதியுமற்றுத் தாமாயிருக்கும்போது சித்தென்றும், மாயையினுடனே கூடினால் அந்தரியாமியென்றும், சமஷ்டி சூக்ஷ்மபூத சூக்ஷ்மசரீரத்துடனே கூடினால் இரண்யகர்ப்பன் என்றும், சமஷ்டி ஸ்தூலபூத ஸ்தூலசரீரத்துடனே கூடினால் விராட்புருஷன் என்றுஞ்சொல்லப்படு மென்றுத்தரம்.

(உ) பரமாத்மாவே சித்திரபடமானால், அதைப்பற்றி யிருக்கிற சித்திரபேதங்களேதென்கிற சங்கைக்கு:—

பிரமாதி ஸ்தம்ப பரியந்தம் உத்தமம் மத்திமம் அதமமாய்க் காணப்படுகிற பிராணிகளும் மலை ஆறு கோபுரமுதலான ஜடங்களும் சுபாவசைதன்னியத்தினிடத்திலே மாயையாகிற வர்ணத்தினாலே கற்பிக்கப்பட்ட சித்திரமென்றே உத்தரம்.

(ங) இதுவே சித்திரமானால், சேதனம் அசேதனம் என்று இருவகுப்பா யிருப்பானேனென்கிற சங்கைக்கு:—

படத்துச் சித்திரசரீரங்களிலே அநேக படாபாசமெழுதி யிருக்கின்றனபோல் சைதன்னிய சித்திரத்திலே பிராணிகண் மாத்திரத்திற்குச் சிதாபாசர்கள் கற்பிக்கப்பட்டார்கள். இவர்கள் சாக்ஷாத் சைதன்னிய மல்லவென்றுத்தரம்.

(௪) மலை ஆறு கோபுரமுதலானவைகட்குச் சிதாபாசர்கள் ஏனில்லையென்கிற சங்கைக்கு:—

சித்திரத்திற் பர்வதமுதலானவைகட்கு வஸ்திராபாசந் தேவையற்றதுபோலச் சிருஷ்டியிலே யகப்பட்ட மண்முதலானவைகட்குச் சிதாபாசர்கள் தேவையில்லையென்றுத்தரம்.

(௫) பிராணிகண் மாத்திரத்திற்குச் சிதாபாசர்கள் கற்பனைக்குப்பிரயோசன மேதென்கிற சங்கைக்கு:—

நால்வகைச் சரீரங்களையடைந்து ஜனனமரணாதிசம்சாரத்தைப் பாவிக்கிறதே பிரயோசனமென்றுத்தரம்.

(௬) இப்படிச் சிதாபாசனுக்கே சம்சாரமானாற் சகலவாதிகளும் இலௌகீகரும் ஆத்மாவிற்கே சம்சாரமென்று சொல்லக் காரியமேதென்கிற சங்கைக்கு:—

ஆபாசப்புடவையின் வர்ணத்தை அதிஷ்டானப் புடவையின் வர்ணமாகச் சொல்லுகிறாற்போல ஆபாசன் சம்சாரத்தை அதிஷ்டானத்திலே சுமத்துகிறதற்கு அஞ்ஞானமே காரணமென்று[த்]தரம்.

(௭) அந்த அஞ்ஞானத்திற்கு இலக்ஷணமேது அதைப்போக்குதற்குபாயமேதென்கிற சங்கைக்கு:—

தன்னிடத்திற் கற்பிக்கப்பட்ட சிதாபாசனையும் அவன் சம்சாரத்தையுந் தன்னுடைய சுபாவமாக எண்ணுகிறமயக்கமே அஞ்ஞானம். தனக்கொருக்காலுஞ் சம்சாரமில்லை சம்சாரமுஞ் சம்சாரியுங்

கற்பிதமென்றறிகிற விவேகமே அஞ்ஞானத்தைத் தள்ளுகிற உபாய மென்றுத்தரம்.

(அ) அந்தவிவேகம் எதுசெய்தால் வருமென்கிற சங்கைக்கு:—

ஜீவன் ஜகத்து பரமாத்மாக்களைக் குருசந்நிதானத்திலே பலப்படவிசாரித்தால் விவேகம்வருமென் றுத்தரம்.

(கூ) மோக்ஷாவஸ்தையிற் பலமாக மிஞ்சப்போகிற பரமாத்மாவைமாத்திரம் விசாரிக்கவேண்டுமே யல்லாமல் வந்தியாபுத்திரனைப் போல விருக்கிற ஜீவனையும் ஜகத்தையும் விசாரிக்கக் காரியமேதென்கிற சங்கைக்கு:—

சொரூபமாயிருக்கிற ஏகீபாவம் பரமாத்மாவினிடத்திலே ஒரு விசாரமுமில்லை. விசாரமெல்லாம் ஜீவன் ஜகத்துக்களிற்றானே நுண்மையாகவிசாரிக்கில் இருவகையும் வாதிக்கப்பட்டவுடனே பரமாத்மாவே தானாக மிஞ்சுமென்றுத்தரம்.

(க0) விசாரித்த ஞானிகட்கு ஜீவன் ஜகத்து வாதிக்கப்பட்டாற் றிரும்பவும் விவகாரந் தோன்றுவானேனென்கிற சங்கைக்கு:—

சுழுத்தியிலே ஜீவன் ஜகத்து தோற்றாமலிருக்கையிலும், முத்தியில்லாம விருக்கையினாலே தோற்றாமற்போகிறது வாதையல்ல; இந்த இருவகையும் மித்தையென்கிற நிச்சயமே வாதையென் றுத்தரம்.

(கக) இந்த இருவகையுந் தோற்றுமானால் பரமாத்மா மாத்திர மிஞ்சப்போகிறதெப்படியென்கிற சங்கைக்கு:—

பரமாத்மாமாத்திரமே அழிவற்ற உண்மைப்பொருளென்கிற நிச்சயமே மிஞ்சுகிறது, ஜகத்து மறைகிறதல்ல ஜகத்தில்லாதிருந்தால் ஜீவன் முத்திகூடாதென்றுத்தரம்.

(கஉ) இந்த இருவகையும் எத்தனைகாலம் விசாரிக்கவேண்டுமெ ன்கிற சங்கைக்கு:—

விசாரத்தினாலே வந்த ஞானம் பரோக்ஷக்ஞானம் என்றும், அபரோக்ஷக்ஞானமென்றும் இருவகையாகவிருக்கும் இதில் அப ரோக்ஷக்ஞானம்வந்தால் விசாரத்திற்கு முடிவென்றுத்தரம்.

(கங) இந்த இருவகை ஞானத்திற்கும் இலக்ஷணமேதென்கிற சங்கைக்கு:—

பிரமமொன்றுண்டென்கிறது பரோக்ஷக்ஞானம், நானே அந் தப் பிரமமென்கிற துணிவு அபரோக்ஷக்ஞானம் என்றுத்தரம்.

(கச) இந்த அபரோக்ஷக்ஞானத்தை வருவிக்கிற விசாரமேதெ ன்கிற சங்கைக்கு:—

கடாகாசம் மஹாகாசம் ஜலாகாசம் மேகாகாசம் போலக் கூட ஸ்தனையும் பிரமத்தையும் ஜீவனையும் ஈசுரனையும் பகுத்தறிகிற தே விசாரமென்றுத்தரம்.

(கரு) கடாகாசமும் மஹாகாசமுங் கண்டோம் ஜலாகாசத்திற் கும் மேகாகாசத்திற்கும் இலக்ஷணமேதென்கிற சங்கைக்கு:—

கடஜலத்திற் பிரத்தியக்ஷமாக மேகநக்ஷத்திரங்களுடனே காண ப்படுகிற ஆகாசம் ஜலாகாசம்; மஹாகாசத்தின் மேகஜலத்திலே அநுமானத்தினாற் கண்டபிரதிவிம்பமே மேகாகாசம்.என்றுத்தரம்.

(கசு) கூடஸ்தர்முதலான நாலுசைதன்னியத்தையும் பகுத்து க்காட்டவேண்டுமென்கிற சங்கைக்கு:—

நிர்விகாரமாக விருக்கின்ற அதிஷ்டான சைதன்னியமே சரீர த்தில்வளைபட்டது கூடஸ்தமென்றும், மற்றது பிரமமென்றும், கூ டஸ்தரிடத்திற் கற்பிதமான அந்தக்கரணபிரதிவிம்பன் ஜீவனென்

றும், பிரமத்திற் கற்பிதமான மாயாபிரதிவிம்பம் ஈசுரன் என்றுமுத்தரம்.

(கஎ) சரீரத்திலே நானென்று விவகரிக்கிற ஜீவனைத்தவிர வேறே கூடஸ்த ரெங்கே யென்கிற சங்கைக்கு:—

ஜலாகாசத்தினாலே கடாகாச மறைப்பட்டாற்போல ஜீவனாலே கூடஸ்தருமறைப்பட்டு இரண்டும் ஒன்றாகத் தோற்றுகிறதென்றுத்தரம்.

(கஅ) இந்தஜீவன் கூடஸ்தனை யேன்பகுத்தறிய வில்லையென்கிற சங்கைக்கு:—

இதுவே மூலாஞ்ஞானம் என்றுத்தரம்.

(கசு) இந்த மூலாஞ்ஞானமாகிற அவித்தை யெத்தனை விதமாயிருக்குமென்கிற சங்கைக்கு:—

ஆவரணமென்றும், விக்ஷேபமென்றும் இரண்டுவகையாயிருக்கு மென் றுத்தரம்.

(உ0) இந்த இருவகைக்கும் இலக்ஷணமேதென்கிற சங்கைக்கு:—

நான் கூடஸ்தனைக்காணேனென்கிற அறிவாகவிருந்துங் கூடஸ்தர்தோற்றவில்லையென்கிற மயக்கமே ஆவரணம்; கிளிஞ்சிலைவெள்ளியென்று பார்க்கிறாற்போலச் சுபாவ சைதன்னியமாயிருக்கிற தன்னைக் கற்பிதமாயிருக்கிற அகங்காரியாய்க் காண்கிறதே விக்ஷேபம் என்றுத்தரம்.

(உக) ஆதித்தனிடத்திலே இருளிராததுபோலச் சுயம்பிரகாசமாயிருக்கிற ஆத்மாவினிடத்திலே அப்பிரகாசமாயிருக்கிற அஞ்ஞானம்வரக்கணக்கில்லையே இதுநமக்குச்சம்மதமென்றாலும் அஞ்ஞானகாரியமான ஆவரண மெப்படிவந்தது; இதுவுமில்லை யென்றால் ஆவரணத்தைப் போக்குகிற வேதாந்தத்தைப் படிக்கவுங் கணக்கில்லையேயென்கிற சங்கைக்கு:—

நான் அஞ்ஞானியென்கிற அநுபவம் ஜடத்தினிடத்திலே காணப்படாமல் சித்தி னிடத்திலே காணப்படுகிற திருஷ்டம் என்றே யுத்தரம்.

(உஉ) அநுபவங்கண்டாலும் யுத்திகூடாதென்கிற சங்கைக்கு:—

திருஷ்டமாய்க் கண்டகாரியத்திற்கு யுத்திதேவையில்லை, காணாத காரியத்திற்கே யுத்திவேண்டுமென் றுத்தரம்.

(உங) தூணைகனந்நியாயம்போலச் சங்கித்தாலல்லவோ புத்தியிலே திடப்படுமென்கிற சங்கைக்கு:—

அநுபவத்தைக்கடந்து சங்கிக்கலாகாது ஆகையினாலே கூடஸ்தருக்கும் அஞ்ஞானத்திற்கும் விரோதமில்லைக் கூடியிருக்கலாமென் றுத்தரம்.

(உச) ஆனாலிந்த அஞ்ஞானத்தைத் தள்ளுகிற விரோதியெது? அதெங்ஙனே காணலாமென்கிற சங்கைக்கு:—

சாஸ்திரவிசாரக்ஞானமே அஞ்ஞானத்திற்கு விரோதி; இதை ஞானிகளிடத்திலே காணலாமென் றுத்தரம்.

(உரு) விக்ஷேப மென்னப்பட்ட அகங்காரியாவதார்? இவனெதினாற் கற்பிக்கப்பட்டான் இவனுக்கதிஷ்டானமேதென்கிற சங்கைக்கு:—

காரணகாரிய சரீரத்தை யுடைத்தான சைதன்னியமே அகங்காரி. அஞ்ஞானகாரியமான விக்ஷேபத்தினாலே கற்பிக்கப்பட்டான். இவனுக்கு அதிஷ்டானங் கூடஸ்த சைதன்னியம் என்றுத்தரம்.

(உசு) இப்படி கற்பிதமாயிருக்கிற அகங்காரிக்கும் சுபாவமாயிருக்கிற தனக்கும் சுபாவசித்தமாயிருக்கிற பேதமெப்படி பிராந்தி சித்தமாயிருக்கிற அபேத மெப்படியென்கிற சங்கைக்கு:—

ஈதென்னப்பட்ட அதிஷ்டானக்கிளிஞ்சில் உண்மை வெள்ளியென்கிற ஆரோபம் மித்தையென்கிறதுபோலச் சுபாவசித்தபேதம் இது வெள்ளியென்கிற ஒருமை மயக்கம்போல நான்தானென்கிற ஒருமை மயக்கமே பிராந்தி சித்தமாயிருக்கிற அபேதம் என்றுத்தரம்.

(உஎ) ஈதென்கிற சாமான்யம்போலவும் வெள்ளியென்கிற விசேஷம்போலவும் ஆத்மாவும் அகங்காரியும் எங்குங் காணப்படவில்லையே யென்கிற சங்கைக்கு:—

தேவதத்தன்தான் போனவன் யக்ஞதத்தன்தான் கண்டவன் நீதான் சொன்னவன் நான்தான் கேட்டவனென்கிற விவகாரத்திலே இது வெள்ளி, இது புடவை, இதுகடமென்றாற்போலச் சாமான்ய விசேஷமிரண்டுங் காணப்படுகிற தென்றுத்தரம்.

(உஅ) இந்தப்பேதக்ஞானத்தி லுமக்குப் பிரயோசன மேதென்கிற சங்கைக்கு:—

தானென்கிற சொல்லுக்கர்த்தம் நானென்கிற அகங்காரிக் கன்னியரான கூடஸ்தரென்றே சித்தாந்தமென்றுத்தரம்.

(உகூ) கடந்தான் படந்தான் கோபுரந்தா னென்னுமிடத்தில் அசேதனத்தினிடத்திலே தானென்கிற சொல்வரலாமோ வென்கிற சங்கைக்கு:—

சிதாபாச னில்லாதபடியினால் ஜடமென்று சொல்லப்பட்ட கடபடாதிகளும் சிதாபாசனுண்டானபடியினாற் சேதனமென்று காணப்படுகிற பிரமாதிஸ்தம்ப பரியந்தமான பிராணிகளும் ஆத்மா ஒருவரிடத்திலே இருவகைக்கற்பிதங்களானபடியினாலே எல்லாவற்றிலுந் தானென்று வழங்குகிறசொல் எங்கும் ஆத்மாவுண்டென்கிறதைக் காட்டுகின்றது, ஆகையினாற் றானென்கிறசொல் எங்கும் வரலாமென்றே யுத்தரம்.

(௩௦) தானென்கிற சொற்போல இது அது வென்கிற சொல்லும் எல்லாவற்றிலுஞ் சாமான்யமாக விருக்கையினால் இவைகளும் ஆத்மாவாக விருக்கட்டுமென்கிற சங்கைக்கு:—

இது அது வென்கிறசொல் நல்லது பொல்லாததென்கிற சொற்போலப் படிபாதியிலே படுபாதி சாமான்யங் கண்டதே யல்லாமல் முற்றுங்காணவில்லை ஆகையினால் இதுதான் அதுதான் நல்லதுதான் பொல்லாதது தானென்று சர்வத்திரசாமான்யமாகத் தோற்றுகிறதுதானே ஆத்மாவென்றும், மற்றவிசேஷமெல்லாம் மாயாகற்பிதமென்றுஞ் சித்தாந்தமென்றுத்தரம்.

(௩௧) இது எல்லார்க்கும் என்தெரியவில்லை யென்கிறசங்கைக்கு:—

முன்சொன்ன அஞ்ஞானத்தினாலே தாதான்மி யாத்தியாசத்தையடைந்த அஞ்ஞானிகள் சாமான்ய விசேஷமிரண்டும் வெட்டவெளியாய் வேறுபட்டிருக்கினும் ஒன்றாய்க்கண்டார்களென் றுத்தரம்.

(௩௨) இந்த அத்தியாசமெப்படிப் போமென்கிற சங்கைக்கு:— விசாரக்ஞானத்தினாலே அஞ்ஞானமும் ஆவரணமும்போமென்று முன்சொன்னதே யுத்தரம்.

(௩௩) இந்த ஞானிக்குக் காரணமான அஞ்ஞானம் விலகியுங் காரியமான விக்ஷேப மிருப்பானேனென்கிற சங்கைக்கு:—

விக்ஷேபத்திற்குக்காரணம் அஞ்ஞானமென்றுங் கர்மமென்றும் இருவகுப்பு; அவற்றில் அஞ்ஞான நசித்தும் கர்ம நசியாதபடியினால் பிராரத்தகர்மந் தொலையுமட்டும் இருக்குமென் றுத்தரம்.

(௩௪) காரணநஷ்டமாயுங் காரியம் இருக்குமென்கிறது நியாயமல்லவே யென்கிற சங்கைக்கு:—

உங்கள் தர்க்கமதத்திலே காரணநஷ்டமாயுங் காரியஞ் சற்றுப் போ திருக்குமென்றது நமக்குஞ் சரியல்லவோவென்றுத்தரம்.

(௩௫) அப்படியானாலுங் காரணத்திற்குப்பின் காரியஞ் சற்று நேரமல்லவோ இருக்கவேண்டும்; ஒரு புருஷாயுளுள்ளமட்டு மிருக்குமென்கிறது கூடாதென்கிற சங்கைக்கு:—

இரண்டொருநாளி லுண்டான காரணத்திரவிய மென்னப்பட்ட நூல் வெந்தும் ஒருசாமங் காரியசாமதமுண்டென்றால் அநந்த கற்பத்திலே யிருக்கிற அஞ்ஞானப்பிராந்தி நஷ்டமானாலும் அதன் காரியமானவிக்ஷேபம் பிராரத்தோடே போமென்றது சொற்பமல்லாமல் விஸ்தாரமல்லவென் றுத்தரம்.

(௩௬) இப்படி வாயடி கையடி யடிக்கிறதே யல்லாமல் இதற்கு ப்பிரமாண மில்லையோவென்கிற சங்கைக்கு:—

வாயடி கையடி யடிக்கிறது உங்கள் தர்க்கமதத்திலேயே யல்லாமல் நமக்குச் சுருதி யுத்தி அநுபவம் மூன்றுமுண்டென்றே யுத்தரம்.

(௩௭) தார்க்கிகன்: சண்டைபோதும் சித்தாந்தமேதென்கிற சங்கைக்கு:—

அஞ்ஞானிகள் நான்தானென்கிற இருவரையும் ஒருவனாகக்கண்டு கலங்கிச் சம்சாரத்திலே யடிபடுவார்களென்றும், இந்த இருவரையும் வேதாந்தக்ஞானிகள் பகுத்தறிந்து முத்தராவார்களென்கிறதே சித்தாந்தமென்றுமுத்தரம்.

(௩௮) வேதாந்தமல்லாத சாஸ்திரத்தினாலே முத்தியில்லையோ வென்கிற சங்கைக்கு:—

மற்ற சாஸ்திரமெல்லாம் பிராந்தர்களாலே உண்டாக்கப்பட்ட சாஸ்திரமானபடியினாலே குழப்பத்தின்மேற் குழப்பமாய்க் கலகப்படுமே யல்லாமற் பிராந்தியைத் தெளிவிக்கமாட்டாதென்றுத்தரம்.

(௩௧) இன்ன இன்ன சாஸ்திரக்கர்த்தாக்கள் இன்ன இன்னப் பொருளென்று கலங்கினார்களென்கிறதையும், இவர்களுக்குப் பரம் பரையாகத் தெளிவுவரும் வழியையும்இன்னபடியென்று பகுத்துரை க்கவேண்டுமென்கிற சங்கைக்கு:—

பாமரரும், உலோகாயதரும்-விரோசனன்சொன்ன சித்தாந்த யுத்தியினாலேஸ்தூலசரீரமே ஆனமாவென்பார்கள்.

சார்வாகன் - சீவன்போனவுடனே சரீரமரித்துப் போகிறபடி யால் நான் கண்டேன் கேட்டேனென்கிற யுத்தியினால் தேகம் ஆத் மாவல்ல இந்திரியமே ஆத்மாவென்றுசொல்லுவன்.

ஹிரண்யகர்ப்ப வுபாசிகளான பிராணாத்மவாதிகள் - பிராண ன்போனால் இந்திரியங்க ளிராதபடியினாலே பிராணனே ஆத்மாவெ ன்பார்கள்.

‡ உபாசகர்-மனதில்லாதபோது பிராணன்றெரியாதபடியினாலே மனதே ஆத்மாவென்பார்கள்.

க்ஷணிகவாதிகள்-புத்தி யில்லாவிட்டால் மனதாரலிக்கிற படி யினாலே புத்தியே ஆத்மாவென்பார்கள்.

பௌத்தர்களான மாத்தியமிகர்-சுழுத்தியிலே புத்திமுதலாக ஒன்றுங் காணாதபடியினாலே சூன்யமே ஆன்மாவென்பார்கள்.

பட்டர் † முதலினோர் - சுழுத்தியிலே சூன்யமாயிருந்ததென்று கண்டுசொல்ல வருகிறபடியினாலே ஆத்மா சத்தென்பார்கள்.

[இவ்வா றத்மநிர்ணயஞ் செய்து இனி ஆத்ம
பரிமாணத்தில் விவாதம்.]

அந்தராளர் - சூக்ஷமநாடிவழியே சஞ்சரிக்கிறபடியினாலே ஆத் மா அணுவென்பார்கள்.

‡ உபாசகரென்றது - நாரத பாஞ்சராத்திர வநுசாரிகள்.

† முதலினோரென்றது - பிரபாகரரையும், தார்க்கிகரையும்.

திகம்பரர் - பாத மஸ்தகபரியந்தம் அறிவுகலந்திருக்கிறபடியி ஞலே ஆத்மா புருஷப்பிரமாண மென்பார்கள்.

பிரபாகரநும், தார்க்கீகநும் - ஆத்மா பரிச்சின்னமாயிருந்தால் அழிந்துபோமென்று பரிபூரணமாய் ஜடமா யிருக்குமென்பார்கள்.

பட்டர் மதத்திலே - சுழுத்தியிலே சடமாயும் ஜாக்கிரத்திலே அறிவாயுங் காணப்படுகிறபடியினுலே ஆத்மா ஜட சித்தாயிருவகையு மாயிருக்குமென்பார்கள்.

சாங்கியர் - பரிபூரணத்திற்கு இரண்டிலக்ஷணங்கூடாது ஆத் மாசித்தாய்ப் பரிபூரணமாயிருக்கும். அவரவர்களிடத்தில் சுழுத்தி யிற் காண்கிற ஜடம் அந்த ஆத்மாக்களுக்குச் சுகதுக்கங் கொடுக்க வந்த பிரகிருதி யென்பார்கள்.

யோகி - பிரகிருதிதானும் புருஷனெருவனில்லாவிட்டால் சே ஷ்டிக்கமாட்டாது அடக்கி யாளுவாரில்லாதிருந்தால் ஆத்மாக்களுக் குப் பந்தமோக்ஷமில்லையென்கிறபடியினுலே இந்த ஆத்மாக்களைத் தவிர ஈசுரனெருவனுண்டென்பன்.

[இனி இதில் உளதாகுங் கலக்கங்களைக் கூறுகின்றர்.]

பதஞ்சலிபகவான் § கிலேச ‡ கர்ம + விபாகங்களோடும் அவ ற்றின் ⁂ ஆசயங்களோடுங்கூடாத புருடவிசேடனே ஈசனும்; அவ ன் ஜீவன்போலும் அசங்க சித்தாகுமென்று சொல்லுவர்.

---

§ கிலேசம் என்றது - அவித்தை, அஸ்மிதை, இராகம், துவே ஷம், அபினிவேசம், என்பனவாம்.

‡ கர்மம் என்றது - அசுக்ல கிருஷ்ணகர்மம்; யோகிக்கு இத ரர்க்குப் புண்ணியபாவமிசிரம்; அசுக்ல கிருஷ்ணமென்றது சகாமரூ பசுபகர்மம் அசுபகர்மம்; இரண்டின் விலட்சணமான யோகானந் தத்திற்கு ஏதுவான புண்ணியவிசேஷம். + விபாகம் என்றது ஜாதி, ஆயுள், போகம் என்னும் பலவிசேஷங்கள். ⁂ ஆசயம் என் றது-சம்ஸ்காரம்.

தார்க்கீகன் - அசங்கனுகிய ஈசுரனுக்கு நியந்திருத்துவங் கூடாது நித்தியமான இச்சாஞானக்கிரியைகளை உடைத்தாயிருப்பனென்று சொல்லுவன்.

ஹிரண்யகர்ப்பஉபாசகர்-ஈசுரன் நித்தியஞானுதிகளையுடையனேல் சதாசிருட்டியுளதாதல்வேண்டும், ஆதலின் ஹிரண்யகர்ப்பனே ஈசுரனென்பார்கள்.

விஸ்வநபமதம்-ஸ்தூலசரீரத்தைவிட்டுச் சூக்ஷ்மசரீரந் தனியேயில்லை கிருஷ்ணன் விஸ்வரூபங் காட்டுகிறபோது எங்குங் கால் எங்குங் கையாகக்காட்டினபடியினுலே விராட்புருஷனே ஈசுரன் ஹிரண்யகர்ப்ப னல்லவென்றுசொல்லும்.

பிரஜாபத்தியமதம்-எங்குங்கால் எங்குங் கையாகவிருக்கிறதே ஈசுரனுல் மாவட்டையும் ஈசுரனுகவேண்டும். ஆகையினுலே பிரம்மாவே ஈசுரனல்லாமல் மற்றது ஈசுரனல்லவென்று சொல்லும்.

வைஷ்ணவமதம்-இந்தப்பிரம்மாவும் விஷ்ணுவினுடைய திருநாபியிலே பிறந்தபடியினுலே விஷ்ணுவே ஈசுரனென்றுசொல்லும்.

சைவாகமம்-சிவனுடையபாதம் விஷ்ணுமூர்த்திகாணுதபடியினுலே சிவனே ஈசுரனென்று சொல்லும்.

காணுதிபத்தியமதம் - திரிபுரசங்காரத்திலே சிவனும் கணபதியைப் பூஜைபண்ணியபடியினுலே விக்நேசுரனே ஈசுரனென்று சொல்லும்.

புராணிகமதம் - இப்போதுசொல்லப்பட்ட தேவதைகளெல்லாம் புண்ணியஸ்தலங்களிலே விளங்குகையினுலே திருத்தலங்களே ஈசுரனென்று சொல்லும்.

தர்மசாஸ்திரன்-திருத்தலங்களும் மரங்களினுலே விளங்குகையினுலும் மூங்கில் அரசு எருக்கு முதலானவைகளை அவரவர் குல

தேவதைகளாகப் பூசைபண்ணுகையினாலும் மரங்களே ஈசுரனென்று சொல்லுவன்.

இப்படி இன்னம் அநேகம் மதவாதிகள், தங்கள் தங்கள் மதாபிமானத்தினாலே மந்திரவாதம் ரசவாத முதலான சாஸ்திரங்களைத் தொடுத்துக்கொண் டலைந்தார்கள்; இப்படி அஞ்ஞானசாஸ்திரகர்த்தாக்களலைந்த வழிசொன்னோமென்றுத்தரம்.

(௬0) இப்படி எல்லாச்சாஸ்திர கர்த்தாக்களும் வஸ்துநிர்ணயம் பண்ணமாட்டாம லலைந்தார்களானால் வஸ்துநிர்ணயம் பண்ணப் போகிற தெப்படியென்கிற சங்கைக்கு:—

பிரமமொன்றே பொருள், மற்றுள்ளவெல்லா மாயாமயமென்கிறவேதாந்த விசாரத்தினாலே வஸ்து நிர்ணயம் பண்ணவேண்டுமென்றுத்தரம்.

(௬க) அப்படியானால் இந்த வாதிகளுக் கெல்லாம் விரோதமல்லவோ வென்கிற சங்கைக்கு:—

ஒன்றே பொருளென்கிற வேதாந்தத்திற்கும், அதைத்தானே குருடர் யானைகண்டாற்போலக் கண்டிருக்கிற இந்தவாதிகளுக்குஞ் சற்றும் விரோதமில்லையென்றேயுத்தரம்.

(௬உ) பிரமமொன்றே உண்மைப்பொரு ளென்கிறதற்கும், மற்றுள்ளவெல்லா மாயாமய மென்கிறதற்கும் பிரமாணமேதென்கிற சங்கைக்கு:—

இப்படிச் சொல்லுகிற முப்பத்திரண் டுபநிஷத்துமே பிரமாணமென்றுத்தரம்.

(௬ங) இவ்வளவுஞ் சித்துலக்ஷணம் வேதாந்தத்திலே மாயைக்கு இலக்ஷண மெப்படியென்கிற சங்கைக்கு:—

மோகலக்ஷணம் ஜடலக்ஷணமுமா யிருக்குமென் றுத்தரம்.

(௪௪) இந்தப்பிரபஞ்சத்திலே மாயாலக்ஷண மிருவகையும் பகுத்துக் காட்டவேண்டுமென்கிற சங்கைக்கு:—

கடமுதலான பூதபௌதிகமெல்லாம் ஜடமாயிருக்கக் கண்டோம் சத்தென்றும் அசத்தென்றும் பகுத்தறியப் படாதபடியினாலே மோகமாயிருக்கக் கண்டோமென்றுத்தரம்.

(௪௫) ஜீவன் ஜகத்து ஈசுரனென்பவை எல்லாரும் உண்மையாகக்கண்டு வருகிறதை மாயையென்கிற தெப்படியென்கிற சங்கைக்கு:—

இந்த மாயாகற்பிதமெல்லாம் இலௌகிகதிருஷ்டியிலே உண்மையாகவும் யுக்தியினாலே அநிர்வசநீயமாகவும் வேதாந்தஞானிக்குக்காலத்திரயத்திலும் இல்லாததாகவும் இப்படி மூன்றுவிதமா யிருக்குமென்றுத்தரம்.

(௪௬) இந்தமாயாகற்பிதப் பிரபஞ்சமெல்லாம் எக்காலத்தில் உண்டு எக்காலத்தில் இல்லையென்கிற சங்கைக்கு:—

ஜாக்கிரத்திலும் சொப்பனத்திலும் விரித்த சித்திரபடம் போலே உண்டாயிருக்கிற காலமென்றும், சுழுத்தி மூர்ச்சை சமாதிகளிலே சுருட்டின சித்திரபடம்போலே இல்லாதகாலமென்று முத்தரம்.

(௪௭) இந்த மாயை சுதந்தரையோ பராதீனமோ வென்கிற சங்கைக்கு:—

சைதன்னியத்தை யன்றியிலே விளங்கமாட்டாத படியினாற் பராதீனமுமாம்; அசங்கமாயிருக்கிற கூடஸ்த சைதன்னியத்தை ஜடமாயிருக்கிற ஜகத்தாகவும் சிதாபாசர்களாயிருக்கிற ஜீவேசுரர்களாகவும் பண்ணுகையினாற் சுதந்தரையுமா யிருக்குமென்றுத்தரம்

(௪௮) இப்படியானால் மாயையினாலே பிரமத்திற்குச் சொரூப விலக்ஷணங் கெட்டதென்கிற சங்கைக்கு:—

மாயை கூடஸ்தனைத்தொடாமற்றானே ஜீவன் ஜகத்தையுண்டாக்குகையினால் சொரூபவிலக்ஷணங் கெடவில்லையென்றுத்தரம்.

(சகூ) முன்பிரமத்தைத்தானே ஜீவன் ஜகத்தாய்ப்பண்ணிற்றென்கிறீர், பின்பிரமத்தைத் தொடாமற் பண்ணிற்றென்கிறீர் இந்த இருவகையுங் கூடாதென்கிற சங்கைக்கு:—

கூடாததைக் கூட்டுவிக்கிறதே மாயைக்குச் சுபாவமென்று வேதஞ்சொன்னபடியினாலே நீ இதிலே மயங்கவேண்டாமென்றுத்தரம்.

(ருO) இப்படி மாயைகற்பித்ததெல்லாங் கூடாததைக் கூட்டுவித்ததாக விருக்குமோ இப்படிக்கொத்த சத்தி இந்தமாயைக்கெங்கேயிருந்து வந்ததென்கிற சங்கைக்கு:—

ஒருமாயையினிடத்திலே பிறந்தபூதங்களிலே ஒன்றிலே வெளியும் ஒன்றிலே சலனமும் ஒன்றிலே சூடும் ஒன்றிலே குளிரும் ஒன்றிலே கடினமுங் கண்டபடியினாலே, இந்தமாயை கூடாததைக் கூட்டுவிக்கிறது சுபாவம், இந்தச்சத்திமாயைக்குச் சுபாவமேயல்லாமல் ஒன்றினால் வந்ததல்லவென் றுத்தரம்.

(ருக) இந்த ஜகத்து மாயா மயமென்கின்றதை யெல்லாரும் ஏனறிய வில்லையென்கிற சங்கைக்கு:—

இந்திரஜாலக்காரனைக் காணுமளவு மிந்திரஜால முண்மையாகத்தோற்றுகிறதுபோல மாயைக்கதிஷ்டானத்தை யறியுமளவு மாயையுண்மையாகத்தோற்றும், அதிஷ்டானத்தையறிந்தாற் பொய்யாய்ப் மோமென்றுத்தரம்.

(ருஉ) சகலவாதிகளு மாயையிற்குள்ளேதானே இது பொருள் அது பொருளென்று சங்கிக்கக் காரியமேதென்கிற சங்கைக்கு:—

சந்தேகசொரூபமாயிருக்கிற மாயைக்குப் பரிகாரந் தேடாமல் சங்கைக்குட் சங்கைபண்ணுகிறதற்குஅஞ்ஞானமேகாரணமென்றுத் தரம்.

(நுரு) ஆனல் இந்தமாயைக்குப் பரிகாரமேதென்கிற சங்கைக்கு:—

இது பொருளல்ல மாயையென் றறிகிறதே பரிகாரமென் றுத் தரம்.

(நுச) கண்ணுரக்கண்டும் நிர்ணயமாகாத இந்திரஜாலம்போல இந்தஜகத்து மாயாமயமாயிருக்கவில்லையே உண்மையாகவல்லவோ விருக்கிறதென்கிற சங்கைக்கு:—

சத்தசத்தென்றிருவகை நிர்ணயத்திலு மகப்படாத ஜகத்து உண்மையென்கிறது உன்னுடைய பக்ஷபாதமேயல்லாமல் ஜகத்து மாயைதான் என்றுத்தரம்.

(நுரு) நீர் சொன்னதேயல்லாமல் வேதம் ஜகத்து மாயையென்று சொன்னவருண்டோ வென்கிற சங்கைக்கு:—

ஜடமாய்க் கர்ப்பவாசஞ்செய்த சுக்கிலமுஞ் சேதனம்போலே புறப்பட்டுப் பெரியவன் சிறியவனென்று உண்டுடுத்திக் கண்டு கேட்டுத் திரிகிறதைப்பார்க்க வேறே இந்திரஜாலமேதென்று வசிஷ்டர் சொல்லியிருக்கிறார். இந்தத்தேகம்போலே ஆலமரமுதலானவைகளும் விதை யெங்கேவந்தது மரமெங்கேவந்ததென்று மயங்கவேண்டாம்; சகலமுமாயையென்றே காணவேண்டுமென்று வியாசர் சொல்லியிருக்கிறார். மனதினலேசிந்திக்கில் நிர்ணயமாகாத பொருளைத் தர்க்கிக்கவொண்ணுதென்றும் நிர்ணயப்படாத ஜகத்திலே இதுபொருள் அதுபொருளென்று சங்கிக்கத் தேவையில்லை. சகலமும் மாயை என்றே காணவேண்டுமென்று யாக்கியவல்கியர் சொன்

ஞர். இன்னபடியென்று சிந்திக்கப்படாததை யுண்டாக்குகிற சத்தி, மாயை யென்றெல்லாருஞ் சொல்லியிருக்கிறார்களென் றுத்தரம்.

(ருசு) இந்த மாயைக்கு விதை யெங்கே காணலாமென்கிற சங்கைக்கு:—

மரத்தையடக்கியிருக்கிற பீஜம் போலச் சாக்கிரசொப்பனப் பிரபஞ்சத்தையடக்கியிருக்கிற மாயாபீஜம் சுழுத்தியிலே யெல்லாருங்காணவில்லையோ வென்றுத்தரம்.

(ருஎ) சகலபுத்திவாசனையும் மாயையிலே யடங்கியிருக்கிறதற் கடையாளமேதென்கிற சங்கைக்கு:—

மாயாப்பிரதிவிம்பர் மாயையிலே சகலவாசனையுங்கண்டு சர்வக்ஞரா யிருக்கிறதே அடையாளமென் றுத்தரம்.

(ருஅ) ஈசுரவுபாதி யெப்படியிருக்கும் ஜீவவுபாதியெப்படியிருக்கும் ஜீவேசுரர்க ளெப்படியிருப்பார்கள் ஈசுரனையறிகிற வழியெப்படியென்கிற சங்கைக்கு:—

மேகம்போலவிருக்கும் மாயை மேகத்தின் திவலைபோல விருக்கும் புத்திவாசனைகள். திவலையிற் பிரதிவிம்பித்த ஆகாசம்போல விருப்பர் சிதாபாசர்கள். மேகாகாசம்போல ஈசுரனை அநுமானத்தினு லறியவேண்டுமென் றுத்தரம்.

(ருகூ) இந்தப்புத்திவாசனையிலே பிரதி விம்பித்த சிதாபாசனையும் மாயாப்பிரதி விம்பனுயிருக்கிற ஈசுரனையும் எந்தவடைவிலே பகுத்துக்காண்கிறதென்கிற சங்கைக்கு:—

வாசனையானது சிதாபாசனுடனேகூடிப் புத்திரூபமாய் முளைக்கிறபோது சிதாபாசனை வெட்டவெளியாய்க் காணலாம். ஈசுரனைச் சர்வக்ஞன் அந்தரியாமி சர்வேசுரன் என்று வேதஞ் சொல்லக்கேட்டறியலாமென் றுத்தரம்.

(சுO) இரண்டுபேருஞ் சிதாபாசர்களானால் இவர்களுக்குத் தாரதன்மிய மேதென்கிற சங்கைக்கு:—

ஜீவர்கள் மாயையின் வசமாயிருக்கிற பேர்களென்றும் ஈசுரன் மாயையைத் தன்வசம் பண்ணிக்கொண்டிருக்கிறவனென்றுந் தாரதன்மியங் காணலாமென் றுத்தரம்.

(சுக) ஈசுரனைச் சர்வக்ஞன் அந்தரியாமி சர்வேசுரனென்பதெதனாலென்கிற சங்கைக்கு:—

இவருக்குபாதியான மாயையி னிடத்திலே சகலமு மிருக்கிறபடியினாற் சர்வக்ஞன் என்பதும் சகலஜீவர்களுடைய புத்திகளுக்குள்ளுமிருந்து ஆட்டுகிறபடியினால் அந்தரியாமி யென்பதும் இவருண்டாக்குகிற பிரபஞ்சத்தை யொருவராலுந் திருப்பப்படாதது கொண்டு சர்வேசுரன் என்று முத்தரம்.

(சுஉ) ஈசுரனுக்குச் சர்வக்ஞத்துவமுண்டானால் எல்லாராலும் ஏன் அநுபவிக்கப் படவில்லை என்கிற சங்கைக்கு:—

வாசனைகளெல்லாம் பரோக்ஷமானபடியினா லநுபவிக்கப்படவில்லை யென்றுத்தரம்.

(சுங) ஆனால் அந்தச் சர்வக்ஞத்தன்மையின் ஞானம் எப்படியுளதா மென்னுஞ் சங்கைக்கு:—

சர்வபுத்திகளினும் அந்தச்சர்வக்ஞத்தன்மையைக்கண்டு வாசனையின்கண்ணே அநுமானிக்கத்தக்கதென் றுத்தரம்.

(சுச) அந்தரியாமிக் கித்தனைகுணமுண் டென்கிறதற்குப் பிரமாணமேது இவர்க்குச் சரீரமேது இவர்கற்பித்ததே பிரபஞ்சத்திற்கு வழியென்கிறதற்குப் பிரமாணமேதென்கிற சங்கைக்கு:—

அந்தரியாமிக்கு வெகுகுணமுண்டென்கிறதற்கு அந்தரியாமிப் பிராமணமென்கிற வேதம் பிரமாணம் புடவையினிடத்திலே நூலு

பாதானமாயிருப்பதுபோலச் சகலத்திலுமிவர் உபாதானமாக விருக்கிறபடியினாலே சகலமும் இவர்க்குச் சரீரம். ஈசுரன் சகல பூதங்களிலுமிருந்து தேகாதிப்பாவைகளை அபிமானக் கயிற்றைப்பூட்டி விதிநிஷேதவழியே ஆட்டுவிக்கிறாரென்கிற கீதாவசனமும், இதுதர்மமென்றறிவேன். இதிலே மூளவுமில்லை. இது அதர்மமென்றறிவேன் இதைவிட்டுத் திரும்பவுமில்லை. ஆரோ ஒருவ ராட்டுவிக்கிறாரென்கிற பாண்டவகீதையும் கற்பித்ததே வழியென்றதற்குப் பிரமாணமென் றுத்தரம்.

(௬௫) சகலமுமிப்படி ஈசுரனேஆட்டுகிறதானாற் புருஷனுடைய முயற்சி தேவையில்லையோ வென்கிற சங்கைக்கு:—

முயற்சியும் அவரவர் கர்மத்திற்கீடாக ஈசுரசங் கற்பமே யானபடியினால் முயற்சியே செய்யவேண்டுமென் றுத்தரம்.

(௬௬) கர்மத்தின்வழியேமுயற்சியானால் ஈசுரசங்கற்பந் தேவையில்லையென்கிற சங்கைக்கு:—

ஈசுரப்பிரசாதங்கொண்டு தான் அசங்கனென்கிற ஞானம் வரவேண்டியபடியினால் ஈசுரானுக்கிரகமும் வேண்டுமென் றுத்தரம்.

[இஃது இரண்டாவது சங்கை உத்தரசமாதானம் மூலசுலோகப்படி தவறினசங்கை.]

[புருடப்பிரயத்தனம் ஈசுரரூபமானால் ஆரோ ஒருவர் ஆட்டுவிக்கிறாரென்கிற அந்தரியாமிப் பிரேரணை வியர்த்தமா மென்னுஞ் சங்கைக்கு:—

ஈசன் புருடமுயற்சி வடிவாயிருக்கிறானென்றும் ஞானத்தால் தான் அசங்கனென்னும் ஞானம்வருவதால் அந்தரியாமிப் பிரேரணை வியர்த்தமல்லவென் றுத்தரம்.]

(கூஎ) ஈசுரானுக்கிரகங்கொண்டு தான் அசங்கனென்கிற ஞானம் வந்ததனாற் பிரயோசன மேதென்கிற சங்கைக்கு:—

அவ்வளவுகொண்டு முத்தியென்று வேதஞ் சொல்லுகிறதென்றுத்தரம்.

(கூஅ) அந்த அந்தரியாமி சிருஷ்டிக்கிற அடைவேது, அழிக்கிற அடைவேதென்கிற சங்கைக்கு:—

சித்திரபடத்தை விரித்தாற்போலத் தம்மிடத்திற் பிரபஞ்சத்தை அவரவர் கர்மவசத்திலே தோற்றுவிக்கிறதே சிருஷ்டியென்பது சுருட்டின சித்திரபடம்போல அவரவர் கர்மத்தின்வழியே பிரபஞ்சத்தைத் தம்மிடத்திலே அடக்குகிறதே பிரளயம் என்றுத்தரம்.

(கூகூ) ஓர் ஈசுரவரனே ÷ சித்துக்கும் ஜடத்துக்குங் காரணமெப்படி யாவரென்கிற சங்கைக்கு:—

† சைதன்னிய மானபடியினாலே சித்திற்குங் காரணமாவர். தம்முடைய வுபாதியைத்தொட்டே ஜடத்திற்குங் காரணமாவரென்றே யுத்தரம்.

(எ0) இப்படியானாற் பிரமந்தானே ஜகத்காரணமென்று சுரேசுராசாரியர் சொல்லுவா னேனென்கிற சங்கைக்கு:—

கூடஸ்தனையுஞ் சீவனையுஞ் அன்னியோன்னியாத்தியா சத்தினாலே ஒருமைப்பாடாய்க்கண்டாற்போல ஈசுரனையும் பிரமத்தையும் ஒன்றாகக்கண்டு சொன்னாரென்றுத்தரம்.

(எக) அன்னியோன்னி யாத்தியாசமெப்படிக் கூடுமென்கிற சங்கைக்கு:—

÷ சித்து என்றது சிதாபாசர்கள்.

† சைதன்னியமானபடியினால் என்பது சிதாபாச அம்சத்தினால்.

ஈசுரனுடைய ஜகத்காரணத்வம் பிரமத்தினிடத்திலும் பிரமத்தினுடைய சச்சிதாநந்த இலக்ஷணம் மாயாப் பிரதிவிம்பரிடத்திலும் அத்தியாசம் பண்ணப்பட்டுக் கஞ்சிபூசின படம்போலே ஒன்ருயிற்றென் றுத்தரம்.

(எஉ) இந்தவுளவு நீரறிந்தவகை யெப்படி யென்கிற சங்கைக்கு:—

ஆறு லிங்கத்தாலும் வேதாந்தவிசாரத்தாலும் பிரமம் அசங்கமென்றும் மாயாப்பிரதிவிம்பரே சிருஷ்டிக்கிறவரென்றும் அறிந்தோமென் றுத்தரம்.

(எங) சிருஷ்டித்த அடைவெப்படி யென்கிற சங்கைக்கு:—

சுழுத்தியினிடத்திலே சொப்பனமுண்டாகிறதுபோல ஆநந்தமயராயிருந்த ஈசுரனும் மாயையை விரியப்பார்த்து இரண்ணிய கர்ப்பராஞரென் றுத்தரம்.

(எச) ஒரு வேதத்திலே ஒன்றிலே ஒன்றுண்டாயிற் றென்கிற கிரமசிருஷ்டி சொல்லுகிறது. ஒருவேதத்திலே ஒருமித்த சிருஷ்டி சொல்லுகிறது. இஃதிலேது பிரமாணமென்கிற சங்கைக்கு:—

இந்த இரண்டுவகைச் சிருஷ்டியாகிய சொப்பனமும் உண்மையானபடியிஞலே இரண்டும் பிரமாணமென் றுத்தரம்.

(எரு) இரண்யகர்ப்ப சொரூப மெப்படி யிருக்குமென்கிற சங்கைக்கு:—

சூக்ஷமசரீர சமஷ்டி யபிமானியாகப் படத்திலே சூத்திரமிருக்கிறுற்போல எங்கு மிருக்கிறவராய் இச்சாஞானக் கிரியையென்று சொல்லப்பட்ட மூன்றுசத்திகளை யுடையவர் இரண்யகர்ப்பர் என் றுத்தரம்.

(எசு) இந்த இரண்யகர்ப்பம் எப்படிக்காணப்படுமென்கிற சங்கைக்கு:—

சந்தியாகாலத்து இருட்டிலே காணப்படுகிற உலோகம்போலவும் கரியினு லச்சுக்கட்டின சித்திரபடம்போலவும் எங்குமொக்கக் குறுமுளையாயிருக்கிற பயிர்வகைபோலவும் ஈசுரனுடைய சூக்ஷமசரீரமும் அழகாகவெங்கும் ஒக்கலாஞ்சனை பண்ணப்பட்டுத் தோற்றுமென்றுத்தரம்.

(எஎ) இந்த சூக்ஷம சரீரந் தூலாவஸ்தையை யடைந்து தோற்றுகிறதெப்படி, இதற்குப் பிரயாணமேது, இவர்க்கு அவயவங்களேது, அந்த அவையவங்களைப் பூசித்தாற் பலனேதென்கிற சங்கைக்கு:—

பஞ்சீகரணம் பண்ணப்பட்டு வெய்யிலிலே விளங்குகிற உலோகம்போலவும் தீர்ந்த சித்திரபடம்போலவும் பழுத்த பயிர்வகைபோலவும் வெட்டவெளியாகக் காண்கிற ஸ்தூல சரீராதிப்பிரபஞ்சமே விராட்டென்பது விஸ்வரூப அத்தியாயமும் புருஷசூக்தவேதமும் பிரமாணம் பஞ்சமூர்த்திகள் வர்ணாச்சிரமமுடையபேர்கள் தேவாசுராதிகள் சராயுஜாதிகள் மயிலார்மாரி வாச்சி உளி முதலான வெல்லாம் ஈசுரனுடைய அவயவங்களானபடியினால் உபாசித்தமூர்த்தியதிகாரிக்குத்தக்கதாய்ப் பலனும்வருமென் றுத்தரம்.

(எஅ) எல்லாரும் பூசிக்கிறது ஈசுர அவயவமானால் எல்லாருக்கும் மோக்ஷமேன் வரவில்லையென்கிற சங்கைக்கு:—

மாயீகத்தை யுபாசித்தால் மாயீகபலமே யல்லாமல் மோக்ஷம் வாராதென் றுத்தரம்.

(எகூ) பின்னை யெதனால் மோக்ஷம் வரவேண்டுமென்கிற சங்கைக்கு:—

பிரமத்துவ விசாரத்தினுல் மோக்ஷம் வரவேண்டுமே யல்லாமல் மற்றொன்றினுலும் வாராதென் றுத்தரம்.

(அ0) பிரமக்ஞான மன்றியிலே மற்றொன்றினுலுஞ் சம்சாரம் போகாதோவென்கிற சங்கைக்கு:—

தான்விழித்தா லல்லாமற் றன்னுடைய சொப்பனம்போகாதது போல அத்துவிதப் பிரமத்துவத்தில் அஞ்ஞானகற்பிதமான ஜீவேசுர ஜகத்தென்கிற சொப்பனமும் அதிஷ்டானக்ஞானத்தினுற் போகவேண்டுமென் றுத்தரம்.

(அக) பிரமத்திற் கபின்னமாயிருக்கிற ஜீவேசுரர்களையுங் கற்பித ஜகத்துடனே கூட்டலாமோவென்கிற சங்கைக்கு:—

அவர்களும் மாயாகற்பிதமானபடியினுற் கூட்டலாமென்றுத்தரம்.

(அஉ) இவர்களாற் கற்பிதமேதென்கிற சங்கைக்கு:—

ஈக்ஷணமுதற் பிரவேசாந்தம் வரைச் சிருஷ்டியெல்லாம் ஈசுரன் கற்பித்தது சாக்கிரமுதல் மோக்ஷபரியந்தமுள்ள சம்சாரமெல்லாஞ் சீவன் கற்பித்ததென் றுத்தரம்.

(அங) இப்படிப் பிரமமாத்திரமே யுண்மைப் பொருளானுல் வாதிகளெல்லாஞ் ஜீவேசுரவிஷயத்திலே வாதம் பண்ணி மாயக்காரண மேதென்கிற சங்கைக்கு:—

அவர்களைப்பிடித்த அஞ்ஞானமே காரணமாக வீணிலேமாய்கிறுர்களென் றுத்தரம்.

(அச) நீரொருத்தரிருக்க இந்தவாதிகள் கெட்டுப்போகலாமோ இந்தத்தத்துவத்தை அவர்களுக்கு ஏன் போதிக்கலாகாதென்கிறசங்கைக்கு:—

பிராந்தர்களுக்குப் பக்குவம் வாராததற்கு முன்னேபோதித்தால் இளைப்புமாத்திரமே மிச்சமல்லாமல் அவர்கள்புத்தியிலேயேறாதென் றுத்தரம்.

(அரு) எந்தவாதிகள் எதனாலே பிராந்தர்களா யிருக்கிறார்களென்கிற சங்கைக்கு:—

லோகாயதன்முதல் சாங்கியன்பரியந்தஞ் சீவப்பிராந்தியிலே யலைந்தபேர்கள் யோகிமுதல் விருக்ஷார்ச்சனன்பரியந்தம் ஈசுரப்பிராந்தியிலே யலைந்தபேர்களென் றுத்தரம்.

(அசு) பெரியோர்களாயிருக்கிற சாஸ்திரகர்த்தாக்களையும் பிராந்தர்களென்று சொல்லலாமோவென்கிற சங்கைக்கு:—

அத்வைதபிரமத்தை அறியாதபடியினாலே * இவர்களும் பிராந்தர்களே * இவர்களுக்கு இக பரம் இரண்டு மில்லையென்றுத்தரம்.

(அஎ) சீவவாதிகளோடே ஈசுரவாதிகளையும் பிராந்தர்களென்று சொல்லலாமோவென்கிற சங்கைக்கு:—

சொப்பனத்திலே பிக்ஷையெடுக்கிறவனிலும் இராஜாவாயிருக்கிறவன் அதிகமானாலும் விழித்தபின்பு இரண்டுசொப்பனமும் பொய்யாய்ப் போகின்றனபோல் இந்த விருவகை வாதிகளுங் கற்பிதத்திலே தாரதன்மியமானாலும் ஞானம்வந்தவனைக் குறித்து இருவரும் பிராந்தர்களே என் றுத்தரம்.

(அஅ) மோக்ஷங்கிடைக்கவேண்டு மென்கிறவன் இந்தவாதங்களை விசாரிக்கத் தேவையில்லையோ வென்கிற சங்கைக்கு:—

பூர்வபக்ஷமாய் விசாரித்துத் தள்ளவேண்டுமே யல்லாமற் சித்தாந்தமாய் விசாரிக்கப்படுவன வேதாந்தமென் றுத்தரம்.

---

* அவர்களும் என்றூஉம் பாடம்.

(அ௯) சாங்கியம் யோகம் இந்த இருவகையிலுஞ் சொன்ன சீவனும் ஈசுரனும் சுத்த சைதன்னிய மானபடியினல் இந்த இரு வகையும் தள்ளப்படாது வேதாந்தத்திற் கூட்டலாமென்கிற சங்கைக்கு:—

சீவேசுரர்களுக்குப் பேதஞ் சித்தமானபடியினல் நம்முடைய சித்தாந்தத்திற்குக் கூடாதென் றுத்தரம்.

(௯0) உம்முடைய சித்தாந்தத்திலே தொம்பதத்திற்குந் தற்பதத்திற்கும் பேதமில்லையோ வென்கிற சங்கைக்கு:—

அத்துவிதத்தைப் போதிக்கவேண்டுமென்கிறதற்காக ஒருபகுப்புப் பகுத்துக்காட்டினதே யல்லாமல் அர்த்தபேதமில்லையென் றுத்தரம்.

(௯க) இப்படியானல் இலக்ஷணையினற் பதார்த்தசோதனைசெய்வா னேனென்கிற சங்கைக்கு:—

அஞ்ஞானத்தினற் சீவேசுரர்களை வேருகக்கண்டிருந்த பிராந்தர்களுக்கு அந்த பிராந்தியைப் போக்கவேண்டிப் பதார்த்தசோதனைசெய்துக் காட்டினதென் றுத்தரம்.

(௯உ) பதார்த்தசோதனையின விருவரையும் ஒருவராய்க்காண்கிற தெப்படியென்கிற சங்கைக்கு:—

உபாதி கற்பிதமாயிருக்கிற ஜலாகாசத்தையும் மேகா காசத்தையும் விட்டு இவைகளுக் கதிஷ்டானமாயிருக்கிற கடாகாசத்தையும் மஹாகாசத்தையும் ஒன்றென்று காண்கின்றனபோல் தொம்பத தற்பதங்களிலும் உபாதிகற்பிதமான ஜீவேசுரர்களைத் தள்ளி இவர்களுக் கதிஷ்டானமான கூடஸ்தனையும் பிரமத்தையும் ஒன்ருகக்காண்கிறதே இலக்ஷணையினற் பதார்த்தஞ் சோதிக்கிறதென் றுத்தரம்.

(கூங) இந்தப்படிக்குச் சாங்கியமதத்தில் ஜீவனையும் யோகமதத்தில் ஈசுரனையும் இரண்டு பதங்களுக்கும் அர்த்தமாக்கலாமோ வென்கிற சங்கைக்கு:—

இப்படியானல் வேதவிரோதிகளாயிருக்கிற லோகாயதன் பரியந்தங் கூட்டலாமென் றுத்தரம்.

(கூச) அப்படி சாங்கிய யோக மதத்திலே விரோதமேதென்கிற சங்கைக்கு:—

ஆத்மா அநேகமென்கிறதும், ஜகத்துசத்தியமென்கிறதும், ஈசுரன் ஒருவனுண்டென்கிறதும், அத்துவிதத்திற்கு விரோதமென்றுத்தரம்.

(கூரு) அத்துவிதத்திற்கு ஒத்து வராவிட்டா லென்ன ஜீவன் அசங்க சைதன்னியமென் றறிந்ததுகொண்டு முத்தியில்லையோ வென்கிற சங்கைக்கு:—

ஜகத்தும் ஈசுரனு நித்தியமென்றதனல் தான் அசங்கனென்றறிந்தாலு முன்போலப் பிரகிருதியுந் திரும்பவுங் கூட்டும், பின்பிருக்கிற ஈசுரனுஞ் சிக்ஷைபண்ணுவன். ஆகையால் மோக்ஷமெப்படிவருமென் றுத்தரம்.

(கூசா) அசங்கனயிருக்கிற ஆத்மாவிற்கு அவிவேகத்தினற் பிரகிருதி சங்கம்வந்தது விவேகம்வந்தபிற்பா டிவனை யெப்படிக்கூட்டுவிக்கு மென்கிற சங்கைக்கு:—

இப்படியானல் உன்னுடைய சித்தாந்தங்கெட்டு மாயாவாதத்தினலே வேதாந்தத்தில் பிரவேசித்தாயென் றுத்தரம்.

(கூஎ) உம்முடைய அத்துவிதத்திற்கு ஆத்மாக்கள் நானவிதமாகாதபோது இவன்முத்தன் இவன்பெத்தன் என்கிற நிர்ணயமெப்படிவந்ததென்கிற சங்கைக்கு:—

இந்த நிர்ணயமெல்லாம் மாயைதானே கற்பிக்குமென் றுத்தரம்.

(கூஅ) ஆத்மாஒன்றேயொழிய இரண்டல்லாதவிடத்தில் மாயை எப்படி விகற்பத்தைக் கற்பிக்குமென்கிற சங்கைக்கு:—

கூடாததைக் கூட்டுவிக்கிறதே மாயைக்குச்சுபாவமாகையினாற் சகலத்தையும் கற்பிக்கும் சுபாவத்திலே பெந்தம் முத்தி பெத்தன் முத்தன் இல்லையென்று வேதஞ்சொல்லுகிறதென் றுத்தரம்.

(கூகூ) இஃதெல்லாஞ் சுபாவத்திலே யில்லாவிட்டாற் பிறகெவ்வாறுண்டாகுமென்கிற சங்கைக்கு:—

மாயையாகிற காமதேனுவுக்குச் சீவேசுரர்களென்று இரண்டு கன்றுகளுண்டு, வேண்டியபடி தொய்தப்பாலுங் கறக்கும் ஆகையினால் அத்துவிதம் ஒன்றொழிய இரண்டில்லையென் றுத்தரம்.

(க00) இப்படிப் பேதமெல்லா மித்தையென் றறிந்து பரமாத்மா ஒருவரே உள்ளபொருளென் றறிந்திருக்கிற ஞானிகளும் விவகாரம் பண்ணக்கண்டோம். அதுகூடுமோவென்கிற சங்கைக்கு:—

முன்போலப் பரமார்த்தமாக விவகாரம் பண்ணுமல் மித்தையென்று காண்பார்களென் றுத்தரம்.

(க0க) அஞ்ஞானியெப்படி விவசரிப்பன், ஞானியெப்படி விவகரிப்பனென்கிற சங்கைக்கு:—

இகபரவியாபாரங்களெல்லாம் உண்மையென்றும் அத்துவிதம் இல்லையென்றும் விவகரிப்பவன் அஞ்ஞானி. அத்துவிதமாத்திரம் உண்மைப் பொருளென்றும் மற்றுள்ளவெல்லா மித்தையென்றுங் கண்டு விவகரிப்பவன் ஞானி. அந்தந்த நிர்ணயப்படிக்கு பலனும்வருமென் றுத்தரம்.

(கOஉ) அத்துவிதம் பிரத்தியக்ஷமாமோ வென்கிற சங்கைக்கு:—

நீ ஞானவடிவா யிருக்கிருயோ இல்லையோ வென்றுத்தரம்.

(கOஙு) ※ உள்ளபடி தோற்றவில்லையென்கிற சங்கைக்கு:—

அது துவிதத்திலுஞ் சரியல்லவோ துவிதத்தில் † ஸ்தாலி ‡ புலாக § நியாயப்படிக்கு அத்துவிதமுஞ் சித்திக்குமென் றுத்தரம்.

(கOச) துவிதமழிந்தல்லவோ அத்துவிதஞ் சித்திக்கவேண்டு மென்கிற சங்கைக்கு:—

துவிதமிருக்கையிலே துவிதத்தைக்காண்கிற அறிவாகத்தானே அத்துவிதஞ் சித்திக்குமென் றுத்தரம்.

(கOரு) ஞானம்வந்தும் இரண்டும் நிற்கின்றவைதானே வென்கிற சங்கைக்கு:—

அவற்றையறிந்துஞ் சாக்ஷிமாத்திரமாக மிஞ்சுகிறபடியினலே துவிதம் மாயாமயம் அத்துவிதமே நித்தியம் என் றுத்தரம்.

(கOசு) திரும்பவு மொருவேளையிலே துவிதஞ் சத்தியமாய்த் தோற்றினல் எப்படியென்கிற சங்கைக்கு:—

திரும்பவும் அத்துவிதத்தைப் பரிசீலனம் செய்யவேண்டுமென் றுத்தரம்.

(கOஎ) எத்தனைகாலம் பரிசீலனம் செய்யவேண்டு மென்கிற சங்கைக்கு:—

※ உள்ளபடி என்றது-சம்பூரணமாக.
† ஸ்தாலி என்றது-பானை.
‡ புலாகம் என்றது-சோறு.
§ நியாயம் என்றது-திருஷ்டாந்தம்.

இந்தத் துக்கத்தைத் துவிதத்திலேசெய்யும். அத்துவிதத்திலே செய்ய வேண்டாமென் றுத்தரம்.

(க0அ) பசிதாகமுதலானது முன்போலவே காணப்படுகின்றனவே யென்கிற சங்கைக்கு:—

எனக்கென்கிற வகங்காரிக்கேயல்லாமல் சாக்ஷியாகிற நமக்கில்லையென்று பகுத்தறியென் றுத்தரம்.

(க0௯) அத்தியாசத்தினாலே சித்துரூபத்திலுங் காணப்படுகிறதென்கிற சங்கைக்கு:—

இன்றுமுதல் அத்தியாசத்தைக் கைவிட்டு ஆத்மா வகங்காரங்களை வேறுகண்டிருவென் றுத்தரம்.

(கக0) அத்தியாசஞ் சீக்கிரத்தில்வருவானேன் விவேகம் என்னுரிதத்தில் வரவில்லையென்கிற சங்கைக்கு:—

அத்தியாசம்போலே விவேகத்தையுந் திடப்படுத்தினால் வாராதோவென் றுத்தரம்.

(கக௧) துவிதம் மித்தையாய்ப் போகிறதுபோல அத்துவிதமும் மித்தையாய்ப் போகாதோவென்கிற சங்கைக்கு:—

இன்னபடிவரும் இன்னபடி போமென்று நிர்ணயப் படாமல் மாயாமயமாயிருக்கிறது துவிதமோ அத்துவிதமோவென் றுன்னநுபவத்தைப் பாரென் றுத்தரம்.

(கக௨) துவிதம்போலே அத்துவிதமும் அநித்தியமென்கிற சங்கைக்கு:—

துவிதம் முன்னில்லையென்கிறதை அத்துவிதங் கண்டாற்போல அத்துவிதம் முன்னில்லையென்கிறதை யொன்றினாலுங் காணப்படாதபடியினாலே அத்துவிதமே நித்தியாபரோக்ஷமென் றுத்தரம்.

(ககங) இப்படி யறிந்துஞ் சிலபேர்கள் திருப்தியடைந்து கவலைகெட்டுச் சந்தோஷியாமலிருப்பானே னென்கிற சங்கைக்கு:—

சாஸ்திரார்த்தத்தைத் தனக்காக்கிக்கொண்டு விசேஷித்து நம்பாமல் மேலெழுந்தபுத்தியினலென் றுத்தரம்.

(ககச) யாதொருக்கால் இருதயத்திலிருக்கிற ஆசையெல்லாம் பற்றறவிட்டுப் போயிற்ரே அன்றைக்கிவன் முத்தனென்று வேதஞ்சொல்லுகிறது ஞானிகளிடத்திற் காணேமென்கிற சங்கைக்கு:—

அகங்காரத்தையும் ஆத்மாவையும் ஒன்ருகக் கண்டு வருகிற ஆசையாகா தென்று அந்தவேதத்திற் கர்த்தம். அகங்காரக்கிரந்தி விட்டு ஆத்மாவை வேறுகண்டிருக்கிறவனுக்கு அகங்காரத்தினிடமாய்க் கோடியாசை வந்தாலும் ஹானியில்லையென் றுத்தரம்.

(ககரு) அகங்காரக்கிரந்தி விட்டுப்போனபின்பு அகங்காரத்தினிடமாய் ஆசை வரலாமோவென்கிற சங்கைக்கு:—

பிராரத்தபலத்தினல் வருமென் றுத்தரம்.

(ககசு) ஞானிக்கும் அஞ்ஞானிக்கும் பிராரத்தபலஞ்சரியானல் இருவருக்கும் பேதமேதென்கிற சங்கைக்கு:—

இவன் வித்துவான் இவன் மூடனென்கிறதை வேதப்பரீக்ஷையினலே காண்கிறதே யல்லாமல் சொரூபங்கொண்டு காணுதது போல அகங்காரக்கிரந்தி விட்டுப்போனதுகொண்டு ஞானியென்றறிகிறதே யல்லாமற் பிராரத்தசேட்டையினலே பேதந்தெரியாதென் றுத்தரம்.

(ககஎ) அகங்காரக்கிரந்தி போகாதிருந்தாலும் ஆத்மாவுக்குச் சம்சாரமில்லையென்கிற சங்கைக்கு:—

இப்படி யறிந்தபோதே நீயேகிருதார்த்தனென் றுத்தரம்.

(௧௧௮) அகங்காரக்கிரந்தி விட்டுப்போனவனுக்கு அடையாள மேதென்கிற சங்கைக்கு:—

பிரவிருத்தி நிவிருத்திகளிலே ஒன்றைத் துவேஷிக்கிறதுமி ல்லை ஒன்றை வாஞ்சிக்கிறதுமில்லையென்கிற கீதாவசனப்படியேயிரு ப்பதென் றுத்தரம்.

(௧௧௯) ஆனால் உபேக்ஷைபண்ணுகிறதே ஞானமென்கிற சங் கைக்கு:—

கை கால் செத்துப்போனாற் கர்மத்தி லுபேக்ஷைவரும் இப்படி வியாதியே தத்துவக்ஞானமென்றால் உன்புத்தியல்லவோ தெளிவெ ன்கிற பரியாசமே யுத்தரம்.

(௧௨௦) இப்படிப் பரியாசம்பண்ணத் தேவையில்லை சடபரதர் முதலானபே ருபேக்ஷையாயிருந்தது புராணத்திற்கேட்டோமென் கிற சங்கைக்கு:—

பெண்கள் வாகனங்களோடேகூடி விளையாடினாலும் ஞானி சரீ ரத்தை தானென்றெண்ணானென்று சாமவேதஞ் சொல்லுகிறதென் றுத்தரம்.

(௧௨௧) சடபரதர் காட்டிற்போனது ஞானநிமித்தமல்லவோ வென்கிற சங்கைக்கு:—

அஞ்ஞானிகளுடைய சங்கத்தைத்துறந்ததே யல்லாமல் கற் கள் மரங்கள்போலப் பிரவிருத்தியற் றிருக்கவில்லை யென்றுத்தரம்.

(௧௨௨) இப்படி ஒவ்வொரு குணங்களைப் பிடித்து இதுவே ஞானமென்று உலோகத்தார் சொல்லுவானேனென்கிற சங்கை க்கு:—

சாஸ்திரசித்தாந்த மறியாதமூடர்கள் ஒன்றுகிடக்க ஒன்று சொ ல்லுவார்கள். அறிந்தவன் அப்படிச் சொல்லானென் றுத்தரம்.

(௧உ௩) சாஸ்திர சித்தாந்தந்தான் ஏதென்கிற சங்கைக்கு:—

சகல சன்மார்க்கமுங்கூடி வைராக்கியம் உபரதி ஞானம் என்று மூன்றுவிதமாயிருக்கும் இந்தமூன்று வகைக்கும் ஏது, சொரூபம், காரியம், அவதி, பலம் என்கிற ஐந்தும் வெவ்வேறாயிருக்கும் இவைகளை இன்னதின்னபடியென்று பகுத்தறியாத அவிவேகி எல்லாவற்றையும் ஞானமென்று தடுமாறிச் சொல்லுவன். பகுத்தறிந்தவன் அப்படிச்சொல்லானென் றுத்தரம்.

(௧உ௪) வைராக்கியமுதலான மூவகைக்கும் ஏது முதலான ஐந்தவஸ்தையும் எப்படியென்கிற சங்கைக்கு.—

வைராக்கியத்திற்கு ஏது-விஷயத்திலே தோஷதிருஷ்டி. சொரூபம் ஓக்காளம். காரியம்-திரும்ப ஆசைவராமலிருக்கிறது. அவதி-பிரமலோகபரியந்தந் துரும்பாயெண்ணுதல். பலம்-பிரமலோகம்.

உபரதிக்கு ஏது - அஷ்டாங்கயோகம். சொரூபம் - சித்தநிரோதம். காரியம்-விவகாரக்ஷயம். அவதி-சுழுத்தியைப்போலச் சரீரத்தை மறத்தல். பலம்-பிரமலோகசாமீபம்.

ஞானத்திற்கு ஏது - சிரவண மனன நிதித்தியாசனம். சொரூபம்- + தத்வமித்தியாபாவனை. காரியம் - திரும்ப அகங்காரக்கிரந்தி வாராமலிருக்கிறது. அவதி-முன்தேகமே தானென்று நின்றாற்போல பிரமமே தானென்கிற திடம். பலம்-மோக்ஷமென் றுத்தரம்.

(௧உ௫) இந்தமூன்றும் ஒருமிக்க வேண்டாமோ வென்கிற சங்கைக்கு:—

+ தத்வமித்தியாபாவனை என்கிறது கூடஸ்த அகங்காரங்களின் பேதஞானம்.

இந்தமூன்றுங்கூடினால் திடசௌக்கிய முண்டென்கிறதே யல்லாமல் மோக்ஷத்திற்கு ஞானமாத்திரம் போதும் கர்மவசத்தினாற் சிலபேரிடத்திற் கூடியிருக்கும் சிலபேரிடத்திற் பிரிந்திருக்கும் கலங்கத்தேவையில்லையென் றுத்தரம்.

(கஉ௬) இப்படிக்கலங்காமல் நிலைநின்றவனுக்குச் செய்காரியமேதென்கிற சங்கைக்கு:—

சின்மாத்திரமாயிருக்கிற தன்னிடத்திலே மாயை கற்பித்த ஜகமாகிய சித்திரத்தை யுபேக்ஷித்துச் சதாகாலமுஞ் சின்மாத்திரமாகவே காண்பன்.

இந்தச்சித்திரதீபிகையை அநுசந்தானம் பண்ணிவருகிறவன் ஜகத்தைச் சித்திரமாகவே காண்பனல்லாமல் முன்போல உண்மையென்று மயங்கான்.

முதலாவது சித்திரதீபம் முற்றிற்று.

ஆகச்சங்கை - கஉ௬.

சிவசண்முகன்றுணை.

இரண்டாவது.

திருப்திதீபம்.

சகலலோகங்கட்குஞ் வேதார்த்தமனைத்தும் பிரசித்தப் படுத்தி ஞனும் புருஷார்த்தத்தைப் பூரியிட்ட ஸ்ரீவித்யாரண்ணிய ஸ்வாமி களுக்கு நமஸ்காரம்.

புருஷனானவன் ஆத்மாவை யிவரே தானென்றறிந்தாற் பின்னை யாருக்குப் போகநிமித்தமா யெந்தப் போகத்தைவேண்டிச் சரீரதா பப்படுவனென்கிற பிரகதாரண்ணிய உபநிஷத்திற் கர்த்தஞ்சொல்லு கிறோம்.

(௧) இந்த உபநிஷத்து எதைச் சொல்லுகிறதென்கிற சங்கை க்கு:—

சித்திர தீபிகையிலே சொன்னபடி ஜகத்து மித்தையென்றும் உண்மையான சின்மாத்திரமே தானென்றுந் திடப்பட்ட சீவன்முத் தனுடைய திருப்தியைச் சொல்லுகிறதென்றுத்தரம்.

(௨) இந்தவேதத்திலே புருஷன்நான் அவன்என்கிற சொல்லுக் கர்த்தமேதென்கிற சங்கைக்கு:—

சுபாவத்திலே சித்தைத்தவிர வேறுபொருளில்லாவிட்டாலும் விவகாரத்திலே மாயாகற்பிதமாகச் சீவேசுரர்களென்றிரண்டுபேரு ண்டு; இவர்களிற் சிருஷ்டிமுதலானவைகளை யியற்றுகிறவன் ஈசுர

ரன் சாக்கிரமுதல் மோக்ஷபரியந்தமுள்ள சம்சார நிருவகிக்கிறவன் சீவன் இதில் அதிஷ்டான சைதன்னியத்துடனே கூடச் சீவனைப் புருஷனென்று சொல்லுகிறதென் றுத்தரம்.

(௩) அதிகாரியைச் சொல்லுகின்ற புருஷசத்தத்திற்கு அதிஷ்டானத்தையுங் கூட்டி யர்த்தமாக்கலாமோ வென்கிற சங்கைக்கு:—

அதிஷ்டானத்தைத்தவிர ஆரோபத்திற்கு வேறுசொரூபமில்லாதபடியினுலும் விவகாரத்தி லிருவரும் ஒருவராகத் தோற்றுகையினுலும் முத்தியிலே ஆரோபமும் அதிஷ்டானமாத்திரமாய்ப் போகிறபடியினுலும் இரண்டையுங் கூட்டிச் சொன்னேமென் றுத்தரம்.

(ச) இந்தப்புருஷன் அதிஷ்டானப்பிரதானமா யெப்படி பேசுவான் ஆரோபப்பிரதானமா யெப்படிபேசுவா னென்கிற சங்கைக்கு —

அதிஷ்டானம் ஆரோபத்தி லடங்கியிருக்குங்காலத்தில் ஒருமைப்பாடாக நான் சம்சாரியென்றே பேசுவான் ஆரோபத்தைத்தள்ளி அதிஷ்டானமே தானுய்க் காணும்போது நான் அசங்கன் சின்மாத்திர மென்றே பேசுவானென் றுத்தரம்.

(ரு) நான் அசங்கனென்னும்போது அசங்கனிடத்திலே அகங்காரங்கூடுமோ வென்கிற சங்கைக்கு:—

முக்கியவகங்காரம் அமுக்கியவகங்காரம் முக்கியா முக்கியவகங்காரம் என மூன்றுண்டு அதிஷ்டான வகங்காரங்களைப் பகுத்துக் காணுதமூட ரொருமைப்பாடாக நான்வந்தேன் போனேனென்று சிதாபாசனுகப் பேசுகிறது முக்கியவகங்காரம். இலக்ஷணுவிருத்தியினுலே பகுத்துக் கண்ட ஞானி நான் அசங்கன் சின்மாத்திரமென்றே பேசுகிறதும் விவகாரத்தில் நான்வந்தேன் போனேனென்று சிதாபாசனுகப் பேசுகிறதும் அமுக்கிய வகங்காரமாம். ஆகலின் இல

க்கஸேயால் அகஞ்சத்தார்த்தமாக நானென்னு முணர்ச்சிக்கு இட மாதலால் அசங்கனாகின்றேனென்னும் ஞானங்கூடுமென் றுத் தரம்.

(சு) அஞ்ஞானி ஞானியென்று மிருவருஞ் சிதாபாசரல்லவோ இவர்களில் ஞானி தனக்கன்னியமாயிருக்கிற சாக்ஷியைநானென்னக் கூடுமோவென்கிற சங்கைக்கு:—

முகாபாசத்திற்கெப்படியானால், கண்ணாடியிலே பிரதிவிம்பிக் கிற முகஞ்சுபாவமல்ல அதைப்பார்க்கிற முகமேசுபாவமானாற்போ லச் சிதாபாசனுக்குஞ் சிதாபாசனாயிருக்கிற தான் மித்தையானபடியி னாலும் சாக்ஷியாக மிஞ்சுகிற தான் சுபாவமானபடியினாலும் தன் னுடைய சுபாவ சைதன்னியத்தை நானென்னக் கூடுமென் றுத் தரம்.

(எ) சிதாபாசனாகவிருக்கிற சிதாபாசன் மித்தையானால் அவன் அனுசந்தானம்பண்ணுகிற ஞானமு மித்தையாகவேண்டும் அது சம் சாரத்தைப் போக்கமாட்டாதென்கிற சங்கைக்கு:—

இந்த ஞானமித்தையானாலும் இதனாற்சிதாபாசனுக்கு முன்னி ருந்த சம்சாரம் பொய்யானபடியினாலே அதைப்போக்குதற் கிந்த ஞானமே போதுமென் றுத்தரம்.

(அ) புருஷசத்தத்திற் கர்த்தங்கேட்டோம். இனி ஆத்மாவை யிவரே நானென்றறிகிற தெப்படியென்கிற சங்கைக்கு:—

சந்தேக விபரீதமறத் தேகமே தானென்றிருந்தாற் போலச் சாக்ஷியே தானென்றறிகிற திடஞானமே இவரே தானென்கிற தென் றுத்தரம்.

(கூ) இவரே தானென்கிற சொற்பிரத்தியக்ஷத்தை யல்லவோ சொல்லுகிறது அவர் கெதத்திற்குப் பரோக்ஷமா யிருக்கக்கூடுமோ வென்கிற சங்கைக்கு:—

பத்தாமவனுக்குத் தன்னிடத்திலேதானே அஞ்ஞானம், ஆவரணம், விக்ஷேபம், பரோக்ஷம், அபரோக்ஷம், துக்கநிவர்த்தி தடையற்ற வானந்தம் என்கிற ஏழவஸ்தையுங்கண்டாற்போல ஆத்மாவினிடத்திலும் ஏழவஸ்தையுங் கூடுமென் றுத்தரம்.

(க0) தசமனிடத்திலும் ஆத்மாவினிடத்திலும் இந்த ஏழவஸ்தையும் அநுபவமாகக் காட்டவேண்டுமென்கிற சங்கைக்கு.—

தசமன் ஒன்பதுபேரையும் எண்ணினவுடனே பத்தாமவனைக் காணாமற் றிடுக்கிட்டுக் கலங்கினதே அஞ்ஞானம்.

பத்தாமவனைக்காணோம் அவனெங்கே போனானோவென்கிற பராமரிசையே ஆவரணம்.

ஆற்றோடேபோனானென்றழுகிறதே விக்ஷேபம்.

ஆப்த னுபதேசத்தினாற் சுவர்க்காதி லோகம்போலப் பத்தாமவன் இருக்கிறானென்கிறது பரோக்ஷஞானம்.

நீயே பத்தாமவனென்று ஆப்தனெண்ணிக் காட்டவறிந்ததே அபரோக்ஷஞானம்.

முன்செத்தானென்றழுத வழுகைபோனதே துக்கநிவர்த்தி.

பத்தாமவனைத் தானாகக்கண்ட சந்தோஷமே தடையற்ற ஆநந்தம்; இப்படிபோல ஆத்மாவினிடத்திலேயுங் காட்டும்படி.

சிதாபாசன் அநாதிசம்சாரத்திலழுந்தித் தன்னுடைய சுபாவத்தை விசாரியாமலுபேக்ஷித்திருக்கிறதே அஞ்ஞானம்.

அமார்க்கத்திலே விசாரித்து ஆத்மாவுண்டானாற் றோற்றாரோ இல்லையென்கிறதே ஆவணரம்.

சரீரத் திரயத்தையுஞ் சிதாபாசனையுந் தானாகக் கண்டதே விக்ஷேபம்.

ஆப்தனுபதேசத்தினுற் பிரமமுண்டென் றறிகிறதே பரோக்ஷக்ஞானம்.

வேதாந்தவிசாரத்தினு லந்தப்பிரமம் நாமென்றறிகிறதே அபரோக்ஷக்ஞானம்.

நான் கர்த்தா போக்தா வல்லவென்று போனதே துக்கநிவர்த்தி.

செய்யத்தக்கதெல்லாஞ் செய்துமுடிந்தது அடையவேண்டியதெல்லாமடைந்து முடிந்ததென்கிற சந்தோஷமே தடையற்ற ஆநந்தம்; இப்படிச் சிதாபாசனுக்கு ஏழவஸ்தையுண்டென் றுத்தரம்.

(கக) இதிலே பந்தப்படுத்துகிற அவஸ்தையேது மோக்ஷத்தைக் கொடுக்கிற அவஸ்தை யேதென்கிற சங்கைக்கு:—

முந்தின மூன்றும் பந்தத்தைக்கொடுக்கும் பிந்தின நான்கும் மோக்ஷத்தைக்கொடுக்குமென் றுத்தரம்.

(கஉ) முந்தின மூன்றிற்கு ளெந்தெந்த அவஸ்தை யெந்தெந்த வநர்த்தங்கொடுக்குமென்கிற சங்கைக்கு.—

ஆத்மாவை நானறியேனென்கிற வுதாசீனமே அஞ்ஞானத்தில் வந்த அநர்த்தம்.

அமார்க்கத்திலே விசாரித்துக் கூடஸ்தரிருந்தாற் ருேற்ருரோ இல்லையென்கிற விபரீதவார்த்தையே ஆவரணத்தில்வந்த அநர்த்தம்.

இகபரத்தைக் குறித்துச் செய்தொழிலெல்லாம் நம்முடைய தொழில்தானே புண்ணியபாவபலமும் நம்மைவிடாதென்கிற நடுக்கமே விக்ஷேபத்தில் வந்த வநர்த்தம்.

இப்படி யிந்த மூன்றவஸ்தையும் அநர்த்தங்கொடுக்கு மென் றுத்தரம்.

(கங) அஞ்ஞானமும் ஆவரணமும் விக்ஷேபத்திற்கு முந்தின தானபடியினால் ஏழவஸ்தையுஞ் சிதாபாசனுக்கென்று சொல்லக் கூடாது, விக்ஷேபங் காரியப்படுகிறதற்குமுன் காரணரூபமாய்ப் பிர மத்தினிடத்திலே யிருந்ததென்கிற சங்கைக்கு:—

பிரமம் நிருவிகாரம் அதனிடத்திலே யிருக்குமென்னற்கூடாது சிதாபாசனிடமாய்த் தானே முந்தின இரண்டவஸ்தையும் வாசனா ரூபமாயிருந்தது ஆகையினால் ஏழவஸ்தையுஞ் சிதாபாசனுக்கே ஆத் மாவுக்கில்லையென் றுத்தரம்.

(கச) பூர்வாசாரிகளெல்லாரும் அஞ்ஞானத்திற்காதாரஞ் சிதா பாசனென்று சொல்லாமற் பிரமமென்று சொல்வானேனென்கிற சங்கைக்கு:—

ஆரோபத்திற் கதிஷ்டானம் பிரமமானபடியினாலே யெல்லாம் பிரமத்தி லாரோபமென்று சொன்னார்கள் நாமனுபவத்தினாலே அவ ஸ்தையெல்லாஞ் சிதாபாசனுக்கென்று சொன்னோமென் றுத்தரம்.

(கரு) இந்த ஏழவஸ்தையுஞ் சிதாபாசனிடத்திலே யநுபவமா ய்க் காட்டவேண்டுமென்கிற சங்கைக்கு:—

நான் சம்சாரி நான் பரோக்ஷக்ஞானி நான் விக்ஞானி நான் துக்கமற்றவன் நான் கிருதகிருத்தியன் என்கிறவிக்ஷேபமுத லைந்த வஸ்தையுஞ் சிதாபாசனே யநுபவிக்கக் கண்டாற்போல நான் அஞ் ஞானி யென் திருஷ்டிக்குப் பிரமமில்லையென்கிற முந்தின இரண் டவஸ்தையுஞ் சிதாபாசனேயநுபவிக்க அநுபவங் கண்டோமென் றுத்தரம்.

(கசு) இனி, மேலவஸ்தை நாலும் மோக்ஷங்கொடுக்கிற தெப் படியென்கிற சங்கைக்கு:—

பரோக்ஷக்ஞானத்தினால் அசத்தாவரணமும் அபரோக்ஷக்ஞா னத்தினால் அசித்தாவரணமும் மூலாக்ஞானத்துடனே நஷ்டமான

படியினுற் பிரமமே நாமென்று வெட்டவெளியாய்த் தோற்றுகையி ஞல் ஆரோபிக்கப்பட்ட ஜீவத்துவம் நஷ்டமானவுடனே கர்த்தத் துவமுதலான சகலதுக்கமும் விட்டுப்போம் சகலசம்சாரமும் நிவர்த் தியானவுடனே நான்நித்தியமுத்தனென்கிற கெம்பீரங் கொண்டு தடையற்ற வானந்தம்வரும். இப்படி நாலவஸ்தையும் மோக்ஷங்கொ டுக்கிற வடைவென் றுத்தரம்.

(௧௭) பிரமம் சுயம்பிரகாசமாகுற் பரோக்ஷக்ஞான விஷயமா யெப்படி யிருந்ததென்கிற சங்கைக்கு:—

பிரமமுண்டென்று பிரகாசிக்கையினுற் குற்றமில்லையென் றுத் தரம்.

(௧௮) சுயம்பிரகாசமானுல், தானுல் விளங்கவேண்டுமேயல்லா மல் பிரமமுண்டென்று விளங்கலாவதேது ஆகையினுலே அந்தப் பரோக்ஷக்ஞானம் பிரமாணமல்ல வென்கிற சங்கைக்கு:—

முந்தினநிர்ணயத்திற் கழிவுவந்ததுகொண்டும் கண்ணுரக்காணு ததுகொண்டும் தாறுமாருயறிந்ததுகொண்டும் ஏகதேசமாய்க் கண் டது கொண்டும் அப்பிரமாண மென்ருல் இந்த நாலுவகையிலே ஒன்ருகிலுங் கண்டு அப்பிரமாணமென்னல்வேண்டும். ஆகையினுற் பரோக்ஷக்ஞானத்திற்கு இந்த நாலுவகையு மில்லையென் றுத்தரம்.

(௧௯) இந்த நாலுவகைத் தூஷணமு மில்லையென்கிற தெப்படி யென்கிற சங்கைக்கு:—

பிரமமில்லையென்ெருரு பிரமாணங் காணுதபடியினுலே முந் தின நிர்ணயத்திற்கழிவில்லை, கண்ணுரக் காணுததுகொண்டு பரோ க்ஷக்ஞானம் அப்பிரமாணமென்ருல் சுவர்க்காதிக்ஞானமும் அப்பிர மாணமாகவேண்டும் பிரத்தியக்ஷமாகப் போகிறதைப் பரோக்ஷமென் றதுகொண்டு பிராந்தியென்பதுகூடாது, ஏகதேசங்கண்டதுகொ

ண்டு அப்பிரமாணமென்றால் கடக்ஞானமுதலாகப் பிராந்தியாகவே ண்டும் ஆகையினுற் பரோக்ஷக்ஞானத்திற் கொருதூஷணமுமில்லை யென் றுத்தரம்.

(உ0) நிரம்ஸ வஸ்துவினிடத்திலே அம்ஸகற்பனை யெப்படி வந்ததென்கிற சங்கைக்கு:—

தன்னைத் தொட்டில்லாவிட்டாலுந் தள்ளப்பட்ட வுபாதியைத் தொட்டுண்டென் றுத்தரம்.

(உக) உபாதியைத் தொட் டெப்படி யுண்டென்கிற சங்கைக்கு:—

பரோக்ஷக்ஞானத்தினுல் அசத்தென்கிற அம்சந் தள்ளப்பட்டது. பிரத்தியக்ஷக்ஞானத்தினுல் அபானும்ஸந் தள்ளப்பட்டதென் றுத்தரம்.

(உஉ) பிரத்தியக்ஷக்ஞானத்திற்கு ஹானியில்லையோ வென்கிற சங்கைக்கு:—

பத்தா மவன் தானேயென்று கண்டபிற்பாடு முன்கண்ட வொன்பதுபேருக்கு ளில்லையென்று கண்டாற்போல ஆத்மாவே பிரமமென்று கண்டபின்பு முன்தானுகவழங்கின அகங்காரத்தைத் தானல்லவென்று தள்ளுமேயல்லாமல் நான் பிரமமென்கிற பிரத்தியக்ஷக் ஞானத்தைக் கெடுக்கமாட்டாதென் றுத்தரம்.

(உங) இப்படி பரோக்ஷக்ஞானம் அவாந்தர வாக்கியத்தினுல் வருமென்றும் பின் மஹா வாக்கிய விசாரத்தினுற் பிரத்தியக்ஷக் ஞானம்வருமென்றும் எங்கே சொல்லியிருக்கிறதென்கிற சங்கைக்கு:—

உத்தாலகர் சுவேதகேதுவுக்கு முந்திப் பரோக்ஷக்ஞானஞ்சொல்லிப் பின்பொன்பதாந்தரம் பிரத்தியக்ஷக்ஞானஞ் சொன்னுரென்று

சாமவேதத்திலும் வருணன் பிருகுவுக்குமுந்திப் பரோக்ஷக்ஞானஞ் சொல்லிப் பின்பைந்தாந்தரத்திலே பிரத்தியக்ஷக்ஞானஞ் சொன்னு ரென்று எசுர்வேதத்திலும் தேவேந்திரன்முந்தி அவாந்தரவாக்கியத் தினுற் பிரமத்தைப் பரோக்ஷமாயறிந்து பின்அபரோக்ஷக் ஞானத்தை யறிந்தானென்று இருக்குவேதத்திலுஞ் சொல்லியிருக்கிறது, இப்படி ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகளும் வாக்கியவிருத்தியிலே விவரித்திருக்கி ருரென் றுத்தரம்.

(உச) மஹாவாக்கிய விசாரத்தினுல் அபரோக்ஷக்ஞானம் வரு மென்கிறது வாக்கியவிருத்தியிலே யெப்படி வெளிசெய்தாரென்கிற சங்கைக்கு:—

அகங்காரமுங் கூடஸ்தருந் தொம்பதத்திற் கர்த்தமென்றும் பரோக்ஷமாய் மாயாவுபாதியை யுடைத்தாயிருக்கின்ற செகத்காரண சைதன்னியமும் பிரமமுந் தற்பதத்திற் கர்த்தமென்றும் இரண்டும் விருத்தமாவதால் பாகத்தியாக லட்சணையினுலே அவனே யிவன் இவனே யவனென்கிற லக்ஷணம்போலக் கூடஸ்தரே பிரமம் பிர மமே கூடஸ்தரென்றறிந்தவுடனே இற்றைவரைக்கும் நான் பிரம மல்லவென்கிற புத்தியும் ஈசுர சைதன்னியம் பரோக்ஷமென்கிற புத் தியும் இன்னவிடமென்று காணுமற்போம். ஆகையினுல் அபரோக்ஷ க்ஞானத்திற்கு மஹாவாக்கியமே காரணமென சொன்னுரென் றுத் தரம்.

(உரு) வாக்கியத்தினுற் பிறந்த அறிவெல்லாம் பரோக்ஷமேயல் லாமற் பிரத்தியக்ஷமல்லவென்கிற சங்கைக்கு:—

வட்டிக் காசைப்பட்டு முதலு மிழந்தானென்கிற சொற்போ லப் பிரமமாக வேண்டுமென்றிருந்த சீவனுக்குச் சுதசித்தமாகவிரு ந்த பிரத்தியக்ஷமும் போமென்கிற தாசியமாய்க்காணும் நீயே தசம னென்கிறசொல்லும் அவனைப் பிரத்தியக்ஷமாய்க்காட்டவில்லையோ வென் றுத்தரம்.

(உக) அந்தக்கரண வுபாதியிருக்கையினாலே சீவனைப் பிரத்தியக்ஷமாகக்காணலாம் நிருபாதியாயிருக்கிற பிரமம் பிரத்தியக்ஷமாகாதென்கிற சங்கைக்கு:—

இரும்பு பொன்னென்கிறதுகொண்டு விலங்கென்கிறது போகாததுபோல அந்தக்கரணக்கூட்டரவே சீவவுபாதியானாற்போல அதனைத் தவிருகிறதே பிரம வுபாதியா மென் றுத்தரம்.

(உஎ) நானென்கிறது முற்றுந்தள்ளப்பட்ட பின் நான் பிரமமென்கிற ஞானம்வரக் கணக்கில்லையே யென்கிற சங்கைக்கு:—

நானென்கிறது முற்றுந்தள்ளப்படாமல் உபாதிமாத்திரந்தள்ளப்பட்டுச் சைதன்னியந்தள்ளப்படாதபடியினால் நான் பிரமமென்கிற அறிவுவரலாமென் றுத்தரம்.

(உஅ) சாக்ஷி சுயம்பிரகாசமானால் விருத்திக்கு விஷயமாகக் கூடாது கூடுமென்றாற் பிரமம் விருத்தியிற் சிதாபாசனாலு மறியப்பட்டுச் சடமென்று வகுப்பறு மென்கிற சங்கைக்கு:—

கடத்தைப்பார்க்கில் விளக்குங்கண்ணும்வேண்டும் விளக்கைப் பார்க்கிற் கண்மாத்திரம் போதும் அதுபோல அப்பிரகாசமானவிஷயத்தை யறியுமிடத்தில் விஷயாக்ஞானத்தைப்போக்க விருத்தியும் அதனை யறியச் சிதாபாசனும்வேண்டும். சொற்பிரகாசமான பிரமத்தை யறியுமிடத்தில் அஞ்ஞானத்தைப் போக்க விருத்திபோதும், சிதாபாசன் தேவையில்லை; இருந்தாலும் வெய்யில் விளக்குப்போலக் குன்றிப் பிரமத்தில் லயமாய்ப்போவன். விருத்தியாப்தியுண்டு, சிதாபாசனுக்குப் பல ⁜ வியாப்தியில்லையென்று வேதமுஞ்சொல்லுகிறது இந்த அபரோக்ஷக்ஞானமே யிவரே நானென்கிறவேதத்திற் கர்த்தமென் றுத்தரம்.

⁜ வியாப்தி என்பது விஷயத்தன்மை.

(௨௯) ஸ்ரீ சங்கராசாரியர் பலகாலுஞ்சிரவணம் பண்ணச்சொல்லி விதித்தபடியினுற் பிரத்தியக்ஷக்ஞானந் திடமல்லவென்கிற சங்கைக்கு:—

வேதபேதங் காமபேதங்கொண்டு கர்மபேதங்கண்டாற்போல ஞானபேதம்வாராதென்கிறதை ஆறுலிங்கத்தினுலுஞ் சகலவேதத்திற்கும் அர்த்தவிசாரம் பண்ணச்சொன்னுர் எல்லாவேதத்திலும் ஒருபடித்தாய்க்கண்ட இந்தஞானத்திற்கு விபரீதபாவனைபோகத்தக்கதாக மனனம்பண்ணச்சொன்னுரென் றுத்தரம்.

(௩0) விபரீதபாவனை ஏதென்கிற சங்கைக்கு:—

தகப்பனிடத்திற் சத்துருபுத்தி பண்ணுகிறுற்போலத் தேகமேநான் பிரபஞ்சம் சத்தியமென்கிறதென் றுத்தரம்.

(௩௧) இந்தவிபரீதபாவனைக்குக் காரணமேதென்கிற சங்கைக்கு:—

வெகுசென்மத்திலே பிடித்துச்செய்த சென்மாந்தரவாசனையேகாரணமென் றுத்தரம்.

(௩௨) இந்த விபரீத பாவனை யெதனுற் போமென்கிற சஙகைக்கு:—

நானே சத்தியமாயிருக்கிற பிரம்ம தேகாதிப்பிரபஞ்சம் மித்தையென்கிற தத்துவபாவனையாற் போமென் றுத்தரம்.

(௩௩) தத்துவபாவனை பண்ணுகிற வடைவேதென்கிற சங்கைக்கு:—

பிரமத்தைப் பலகாலும் ஏகாந்தத்திலிருந்து சிந்தனை செய்வதும் ஒருமுமூட்சுவரில் அவனுக்கு அதைத்தானே போதிப்பதுஞ் சமானப்பியாசிவரி லொருவருக்கொருவர் அதையே போதிப்பது

மான இதை பிரமாப்பியாசமென்று பெரியோர் சொல்லுவரென்றுத்தரம்.

(ருச) எந்நேரமும் இதேவேலையாயிருந்தால் நிருவாகமெப்படி நடக்குமென்கிற சங்கைக்கு:—

தத்துவவிசாரம் பண்ணுகிறவனுடைய கர்மமெல்லாம் ஈசுரனே நிருவகித்துக்கொள்வானென்றுத்தரம்.

(ருரு) தத்துவபாவனைக்குக் காரணமேதென்கிற சங்கைக்கு:—

ஏகாக்கிரசித்தமே காரணமென்றுத்தரம்.

(ருசூ) அந்த ஏகாக்கிர மெதனுல் வருமென்கிற சங்கைக்கு:—

ஈசுரவுபாசனையினுல் வருமென்றுத்தரம்.

(ருஎ) மந்திர ஜெபம்போலவும் மூர்த்தித் தியானம் போலவும் தத்துவபாவனைப் பண்ணுகிறதற்கு நியமமுண்டோவென்கிற சங்கைக்கு:—

மந்திர ஜபமுதலானவைகட்குத் திருஷ்டபல மல்லாதபடியினுல் நியமமும் நியமந்தப்பினுற் பிரத்தியபாயமுமுண்டு. அசனம் பண்ணுகிறது பசியைப்போக்குகிறதுபோல் தத்துவபாவனையும் விபரீதபாவனையைப்போக்குகிறது. திருஷ்டபலமானபடியினுல் நியமந்தேவையில்லையென்றுத்தரம்.

(ருஅ) பிரமாப்பியாசம் பலப்படச்செய்யச்சொன்னபோதே பிரயாசமல்லவோவென்கிற சங்கைக்கு:—

சஞ்சலமாக விருக்கின்ற மனதிற்கு நியமம்பூண்ட ஜபமும் வேறொன்றைச் சற்றே நினைத்தாலுங் கெட்டுப்போகின்ற மூர்த்தித்தியானமுமே பிரயாசமல்லாமற் கூத்துப்பார்க்கிறதுபோல வெகுவாயெடுத்துக்காட்டு முச்சாகக் கதைகளோடே கூடியிருக்கிற பிரமாப்பியாசம் பிரயாசமல்ல மனதிற்கு விநோதமென்றேயுத்தரம்.

(௩௯) மனது சஞ்சலமென்றதற்குப் பிரமாணமேதென்கிற சங்கைக்கு:—

தான் போனதே வழியாய்ச் சஞ்சலமே சுபாவமாயிருக்கிற மனதை நிறுத்துகிறது வாயுவை நிறுத்துகிறதற்குச் சரியென்கிற கீதாவசனமுஞ் சமுத்திரத்தைக் குடித்தாலும் நெருப்பைவிழுங்கினலும் மேருவைப் பேர்த்தாலும் மனதை நிறுத்தக் கூடாதென்கிற வாசிஷ்டமும் பிரமாணமென் றுத்தரம்.

(௪0) இப்படி விக்ஷேபமாயிருக்கிற மனதிற்குச் சின்மாத்திரமே ஆத்மா, மற்றுள்ளதெல்லா மித்தையென்கிற நிதித்தியாசனங் கூடாதென்கிற சங்கைக்கு:—

காவியந் தர்க்கஞ் செட்டு வேளாண்மைகளிலே விழுந்தமனதிற்குக் கூடாதென் றுத்தரம்.

(௪க) இப்படியானல் போஜனதிகளும் விக்ஷேபமல்லவோ வென்கிற சங்கைக்கு:—

சொற்பவிக்ஷேபமாகிய போஜனதிக ளநுசந்தானத்தைக்கெடுக்காதபடியினல் விக்ஷேபமல்லத் தானேபிரதானமா யிழுத்துக்கொண்டுபோகிற தர்க்கமுதலானவைகள் தத்துவத்தைக் கெடுக்கையினல் இவைகளே கனவிக்ஷேபம் ஆகையினல் இதரவித்தைக் கிடங்கொடுக்கவொண்ணதென் றுத்தரம்.

(௪உ) இப்படி யெல்லா வித்தையையும் விட்டாற் சீவிக்கப்போகிற தெப்படி யென்கிற சங்கைக்கு:—

அசனத்தை விடச்சொன்னற் சீவிக்கப் படாதே யல்லாமல் இதர சாஸ்திரத்தை விடச்சொன்னல் எப்படிச் சீவிக்கிறதென்கிற துராக்கிரத்தை விட்டுவிடென் றுத்தரம்.

(சங) ஞானியாகவிருந்த சனகன் ராச்சியபாரம்பண்ணவில்லை யோ வென்கிற சங்கைக்கு:—

சனகன் திடக்ஞானத்தினால் ராச்சியபாரம்பண்ணினான் உனக்குந் திடக்ஞானமுண்டானால் பிராரத்தவசத்தினாற் றர்க்கபாட முதலானவைகளைச் செய்யலாமென் றுத்தரம்.

(சச) இப்படிப் பிராரத்தமென்று தானே அநாசாரத்தைப்பண்ணலாமோவென்கிற சங்கைக்கு:—

கர்மத்தையொருவராலு மறிக்கப்படாதென் றுத்தரம்.

(சரு) ஆனால் ஞானிக்கும் மூடனுக்கும் பேதமேதென்கிற சங்கைக்கு:—

வழிப்போக்கரிருவருக்குந் தங்குமூர்சரியானாலும் அறிந்தவன் திடமாய்ப்போக அறியாதவன் ஏங்கிக்கொண்டு போகிறதுபோல் ஞானிக்கும் அஞ்ஞானிக்கும் பிராரத்தஞ் சரியானாலும் ஞானிதான் அகர்த்தாவென்று திடமாயிருப்பன். அஞ்ஞானி யேங்கிச்சாவன். இதுவே பேதமென் றுத்தரம்.

(சசூ) இவரே நானென்கிற அபரோக்ஷக் ஞான மறியப்பட்டது ஆருக்குப் போகநிமித்தமா யெந்தப்போகத்தைக் குறித்துச் சரீரதாபப்படுவனென்கிற வாக்கியத்திற் கர்த்தமேதென்கிற சங்கைக்கு:—

சாக்ஷாத்காரம் வந்தவனுக்கு விஷயமும் புசிப்பானு மில்லையென்கிறதென் றுத்தரம்.

(சஎ) பிராரத்தபோகம் புசிக்கையிலே இந்த இருவகையு மில்லையென்கிற தெப்படி யென்கிற சங்கைக்கு:—

இந்திரசாலத்திற் கந்தர்வ நகரத்தைப் பார்க்கிறவன் ஒருபோகத்தையும் இச்சியாமற் சிரித்துப்போட்டுப் போகிறதுபோலச் சாக்ஷா

த்காரம் வந்தவனுக்குச் சகத்துப் பொய்யாய்போனபடியினால் விஷயமும் புசிக்கிறவனு மில்லாமல் எண்ணெயற்ற விளக்குப்போல ஆசை சங்கற்பமெல்லா மணைந்துபோமென் றுத்தரம்.

(௪அ) பிராரத்தபோகத்தைப் புசித்தால் ஹானியேதென்கிறசங்கைக்கு:—

ஹானியொன்றுமில்லை தோஷ திருஷ்டியினாலே திடப்படப் புசிக்கவுமாட்டானென் றுத்தரம்.

(௪௯) விஷயத்திலே எந்தெந்தத்தோஷ மிருக்கிறதென்கிற சங்கைக்கு:—

அர்த்தத்தைத் தேடுகையிலும் இரக்ஷிக்கையிலுந் துக்கமேயொழியச் சுகமில்லை மல மூத்திர நரம் பென்பு தசையினால் நிருமிதமான ஸ்திரீபிண்டத்தில் எது நல்லது பசித்தாலும் விஷத்தைத்தின்றது போல் ஞானியு மிதனை விரும்பான் தோஷவிஷயம் பிராரத்தத்தினாற் புசிக்க மூண்டாலுங் கிலேசத்துடனே புசிப்பானே யல்லாமற் சந்தோஷத்துடனே புசியானென் றுத்தரம்.

(௫0) புசிக்கையிலே கிலேசமேதென்கிற சங்கைக்கு:—

இன்ன மிந்தக்கர்மந் தொலைந்ததில்லையோ வென்கிறதே கிலேசமென் றுத்தரம்.

(௫௧) உம்முடைய பிரமக்ஞானமு மிப்படிக் கிலேசமாயிற்றோ வென்கிற சங்கைக்கு:—

இந்தச் சம்சாரதாபம் விரத்தியேயல்லாமற் கிலேசமல்லவென் றுத்தரம்.

(௫௨) இந்த விரத்தி யெதனால் வந்த தென்கிற சங்கைக்கு:—

சகத்துப் பிராந்தியென்கிற திடக்ஞானத்தினால் வந்தது ஆகையினால் ஞானி கிடைத்ததுகொண்டு திருப்தியடைவன். அஞ்ஞானி

யெத்தனை போகங் கிடைத்தாலுந் திருப்தியடையானென் றுத்தரம்.

(௫௩) அஞ்ஞானிக்குப் போகமெல்லாம் புசித்த பிற்பாடாகிலுந் திருப்தி வாராதோ வென்கிற சங்கைக்கு:—

மேன்மேலும் நெய்யை விட்டதனு லக்கினி யணைந்ததானல் அஞ்ஞானிக்கும் போகத்திலாசை யடங்கும் மற்றப்படி வைராக்கியத்தினு லாசையடங்குமென் றுத்தரம்.

(௫௪) ஞானியுங் கர்மவசத்தினுற் கிடைக்கிற போகம்புசிக்கிற வழியே யழுந்திப் போகானோ வென்கிற சங்கைக்கு:—

பிடித்துவிட்ட விராசா வொருகிராமங்கொண்டு சந்தோஷிக்கிறாற்போல ஞானியுங் கிடைத்ததுகொண்டு சந்தோஷிப்பன். அறிந்து திருடுகிற திருட்டு விநோதமாகிறதுபோல அந்தப்போகம் மேன்மேலுங் காம சங்கற்பத்தை யுண்டாக்க மாட்டாதென் றுத்தரம்.

(௫௫) இப்படிக்கொத்த விவேகம்மனதிலே யுறைந்திருந்தாற் பிராரத்த கர்மம் மேலெழுந்த வாசையை யெப்படி யுண்டாக்குமென்கிற சங்கைக்கு:—

இச்சை அநிச்சை பரவிச்சை யென்று பிராரத்த மூன்றுவிதமானபடியினுலே இச்சையும் வரலாமென் றுத்தரம்.

(௫௬) இது ஆகாதென்கிறதிலே யாருக்காகிலும் ஆசைவருமோ வென்கிற சங்கைக்கு:—

அபத்தியம் பண்ணுகிறவனுக்குந் திருடுகிறவனுக்கும் ராசஸ்திரீயை இஷ்டம்பண்ணுகிறவனுக்குந் தனக்காகாதென்றறிந்திருந்தும் ஆசையேன்வந்தது, ஆகையினுலிதை ஈசுவரனுலு மறிக்கப்படாது ஞானம் வந்தாலும் அவனவன் பிரகிருதிபோகாதென்கிற கீதாவசனமே பிரமாணமென் றுத்தரம்.

(ருஎ) நீர் ஏழைகளுக்காகப் பரிகரித்துச் சொல்லுகிறீர் சாமர்த்தியமுண்டானு லந்தக்கர்மத்தை மறிக்கலாமென்கிற சங்கைக்கு:—

அப்படியாமானுல் நளன் ரகுநாதன் தர்மபுத்திரர் முதலானவர்கள் துக்கப்படக்கணக்கில்லே. ஈசுரனும் பஞ்சகிருத்தியத்தி லுழலக்கணக்கில்லே. ஆகையால், ஈசுர கற்பனையை ஒருவராலுந்தள்ளப்படாதென் றுத்தரம்.

(ருஅ) இச்சாப் பிராரத்த பல மறியப்பட்டது, இனி அநிச்சாப் பிராரத்த மாவதேது அதற்குப் பிரமாண மேதென்கிற சங்கைக்கு:—

மனதிலே நாம் செய்யவொண்ணுதென்றிருக்கிற காரியத்தைப் பலவந்தத்திலுலே நம்மைக்கொண்டு நிறைவேற்று விக்கிறவனுர் நாம் வேண்டுமென்கிற காரியத்தை விலக்குவிக்கிறவனுரென்று கேட்ட அர்ச்சுனனுக்கு அவனவன் கர்மந்தானே செய்விக்கிறதென்ற கிருஷ்ண வாக்கியமே பிரமாணமென் றுத்தரம்.

(ருகூ) இனிப் பரவிச்சாப் பிராரத்த மாவதே தென்கிற சங்கைக்கு:—

தனக்கு இச்சை யநிச்சை இல்லாதிருந்தாலுஞ் சேர்ந்தபேரைத் தொட்டுவருகிற சுகதுக்கங்களே பரவிச்சாப் பிராரத்தம் என் றுத்தரம்.

(சுO) இப்படியானுல் எதை யிச்சிக்கப் போகிறு னென்கிற வேதவாக்கியம் ஆசையை மறுக்கச் சொல்வானேன் னென்கிற சங்கைக்கு:—

இந்தவேதம் இச்சையைவிலக்கவில்லே மற்றென்னெனில் வறுத்தவிதைபோல வாதிக்கிறதென் றுத்தரம்.

(சுக) வாதிக்கிறதாவ தேதென்கிற சங்கைக்கு:—

வறுத்தவிதை முளையாவிட்டாலுந் தீனிக்குதவுகிறாற் போல ஞானியினுடைய வாசையும் அகப்பட்ட போகத்தோடே திரும்புமல்லாமல் மேன்மேலும் வினைகொண்டு கர்ம சங்கற்பங்களைப் பண்ணாததே வாதையென் றுத்தரம்.

(௬௨) இவனுக் கிப்படி விஷயத்திலே சிரத்தை யெதனாலே வரவில்லையென்கிற சங்கைக்கு:—

விஷயஞ்சத்தியமென்கிற பிராந்தி யில்லாதபடியினால் இதிலே சிரத்தை வரவில்லையென் றுத்தரம்.

(௬௩) விஷயப்பிராந்திக்கு இலக்ஷணமேதென்கிற சங்கைக்கு:—

நமக்கிருக்கிற போகமெல்லாம் நாளுக்குநா ளுத்தரோத்தரமாகவேண்டும். ஒருக்காலுமாறாத ஐஸ்வரியமாயிருக்கவேண்டும். இடையிலே விக்கினங்கள் வாராதிருக்கவேண்டுமென்கிற வாஞ்சையேபிராந்தியென் றுத்தரம்.

(௬௪) இஃதெதனாற் போமென்கிற சங்கைக்கு:—

வரும்வினை வாராதிரா; வாராவினை வருந்தினாலும் வாராதென்கிற போதமே அந்தப்பிராந்தியை நீக்குமென் றுத்தரம்.

(௬௫) ஞானிக்கு மஞ்ஞானிக்கும் பொதுவாயிருக்கிற விஷயம் ஒருத்தருக்குப் பிராந்தியைக் கொடுப்பானேன் ஒருத்தருக்குப் போதத்தைக் கொடுப்பானே னென்கிற சங்கைக்கு:—

தனக்குப் பிராப்தியில்லாததை யடையவேண்டுமென்று சங்கற்பித்த பிராந்தனுக்குத் துக்கத்தைக் கொடுக்கும், இதுமாயாமயமல்லவோ, உள்ளபடி முடியுமென்கிற ஞானிக்குச் சங்கற்பத்தையே உண்டாக்கமாட்டாதது துக்கத்தை யெப்படிக் கொடுக்குமென் றுத்தரம்.

(சுசு) இச்சகத்தை மாயாமயமென்று பார்க்கிறதெப்படி, இதில் ஆசக்தி யெவ்வாறுபோமென்கிற சங்கைக்கு:—

சொப்பனம்போலவும் இந்திரசாலம்போலவும் இன்னபடி வரும் இன்னபடிபோமென்றும் நிர்ணயப்படாமற் றோற்றியழிந்து போகையினால் மாயாமயமென்று பார்க்க, அப்போது சொப்பனத்திற்குச் சமானம் சாக்கிரமென்கிற நிலைமையுரைத்தால், இதில் ஆசக்திபோமென் றுத்தரம்.

(சுஎ) இத்தத்துவக்ஞானத்திற்கு ஆக்கிரகமெதிலேபிராரத்தகர்மத்திற் காக்கிரகமெதிலெ யென்கிற சங்கைக்கு:—

ஞானத்திற் காக்கிரகம் இந்திரசாலம்போல சகத்தின் மித்தையாத்தன்மையை அனுசந்தானம்பண்ணுவதிலேபிராரத்தத்திற் காக்கிரகஞ் சீவனுக்குச் சுகதுக்கங் கொடுக்கிறதிலே யென் றுத்தரம்.

(சுஅ) பிராரத்தகர்மம் ஞானத்தைக் கெடுக்காதோ வென்கிற சங்கைக்கு:—

சகத்தைச் சத்தியமாகத் தோற்றுவித்துப் பிராரத்தகர்மம் போகங்கொடுத்தால் அப்போது ஞானத்திற்கு விரோதமென்றறிக. சகத்துமித்தையென்கிற விவேகத்தைக் கெடுக்காமற் சொப்பன மிந்திரசாலங்கள்போலப் போகதரிசனங்கொடுக்கிறபடியினாற் பிராரத்தம் ஞானத்தைக் கெடுக்காதென் றுத்தரம்.

(சுகூ) ஞானந்தான் பிராரத்தத்தைக் கெடுக்காதோவென்கிற சங்கைக்கு:—

ஞானம்வந்தவுடனே சகத்துத் துடைபட்டுப்போனாற் பிராரத்தத்தைக் கெடுக்குமென்றறிக, அப்படிக்கெடாமல் மாயாமயமென்று தோற்றுகையினால் ஞானத்திற்கும் பிராரத்தத்திற்கும் விரோதமில்லையென் றுத்தரம்.

(எ0) யாதோரவஸ்தையிலே எல்லாம் ஆத்மாவாய்ப் போம் போது, எவன் எந்த இந்திரியத்தினால் எந்த விஷயத்தைப் புசிக்கப் போகிறானென்கிறவேதம் ஞானம் வந்தவுடனே சகலமும் துடைபட்டுப் போமென்றல்லவோ சொல்லுகிறது; ஆகையினால் ஞானிக்குப் பிராரத்தபோக மெப்படிக் கூடுமென்கிற சங்கைக்கு:—

இந்தவேதஞ் சுழுத்தியையும் விதேக கைவல்லியத்தையுஞ் சொல்லுகிறதேயல்லாமல், சீவன்முத்தியைச் சொல்லவில்லை யென்று வியாசர் சூத்திரஞ்சொல்லுகிறதென் றுத்தரம்.

(எக) நான் சொன்னதே யர்த்தம் மற்றப்படிக் கூடாதென்கிற சங்கைக்கு:—

யாக்கியவல்கியர் முதலான பூர்வாசாரிகளுக்குத் துவிததிருஷ்டியிருந்தபடியினாலே ஞானமில்லையாக வேண்டுமென் றுத்தரம்.

(எஉ) அவர்களுக்குத் துவிததிருஷ்டி யில்லையென்கிற சங்கைக்கு:—

அப்போது சிஷ்யனைக்குறித்தவர்கள் ஞானஞ்சொல்லாம லிருக்கவேண்டும், அப்படியல்லாமல் அவர்களுபதேசித்தருளிய சாஸ்திரங்களிருக்கின்றனவென் றுத்தரம்.

(எங) அவர்களுக்குப் பிரபஞ்சங்தோற்றாத நிருவிகற்பசமாதியிலே ஞானமுண்டென்கிற சங்கைக்கு:—

இந்தப் பக்ஷத்திற்குச் சுழுத்தியு ஞானமாகவேண்டுமென் றுத்தரம்.

(எச) சுழுத்தியிலே நான் பிரமமென்கிற ஞானமில்லை யென்கிற சங்கைக்கு:—

ஆகையினாலே நான்பிரமமென்கிற சீவன் முத்தியேஞானம் சகத்து மறைகிறதல்லவென் றுத்தரம்.

(எரு) இந்த விரண்டுங்கூடியே ஞானமென்கிற சங்கைக்கு:—

துவிதந் தோற்ருததே ஞானமென்கிற வுன்னுடைய பக்ஷங்கடங்களுக்குமுண்டு, கொசுகுகூப்பிடுகிற துள்படக்கேட்கையினுல் நிருவிகற்பஞானமுங் கடக்ஞானத்திற் கிடல்லவென் றுத்தரம்.

(எசு) ஆகையினுல், ஆத்மவிசாரமே ஞானமல்லாமற் ருெய்தமறைகிறதல்லாதுபோலவே யிருக்கிறதென்கிற சங்கைக்கு:—

இந்தச் சித்தாந்தந் தெரிந்தபோதே நீயேகிருதகிருத்தியனென் றுத்தரம்.

(எஎ) பொல்லாதமனதை நிறுத்தத் தேவையில்லையோவென்கிற சங்கைக்கு:—

நாட்டமான விஷயத்தை மாயாமயமென்று பார்க்கிறதுதானே மனதை நிறுத்துகிறதென் றுத்தரம்.

(எஅ) எந்தப்போகத்தை யிச்சிக்கப்போகிருனென்கிற சொல்லுக்கு அர்த்தந்தெரிந்தது. ஆருக்குப்போக நிமித்தமென்கிற சொல் எதைச்சொல்லுகிறதென்கிற சங்கைக்கு:—

புசிக்கிறவனேயில்லையென்று சொல்லுகிறதென் றுத்தரம்.

(எகூ) புசிக்கிறவ னெதனுலில்லையென்கிற சங்கைக்கு:—

கூடஸ்தர் நிருவிகாரியானபடியினுலே சுகதுக்கபோகவிவகாரமக்கில்லை சிதாபாச ஞரோபமானபடியினு லவனுஞ்சுகதுக்கம் புசிக்கிறவனல்ல, அப்படியிருக்க அதிஷ்டானத்தைவிட்டு ஆரோபமிராதபடியினுல் இருவரையு மொருவனுகக்கண்டு தாதாத்மியத்தினுல் இவனே புசிக்கிறவனென்று லோகத்தார் சொல்லுகிறதேயல்லாமல் யோசிக்கிற் புசிக்கிறவனே யில்லையென் றுத்தரம்.

(அ0) எப்படியானுலும் ஆத்மாதானே புசிக்கிறவனென்கிற சங்கைக்கு:—

ஆத்மா வாரென்று விசாரிக்குமிடத்திற் சகலவேதங்களும் இந்த லௌகீகாத்மாவைத் தொடங்கி, ஆநந்தமயகோசபரியந்தங் கழித்துப்போட்டுக் கூடஸ்தனை யல்லவோ ஆத்மாவென்று சொல்லுகிறதென் றுத்தரம்.

(அக) சிதாபாசனில்லாதவனானால் அஞ்ஞானதிசையிலே தான் எப்படி புசிக்கிறவனானா னென்கிற சங்கைக்கு:—

கூடஸ்தருடைய சத்தையைத் தன்னிடத்திலு மிறக்கிக்கொண்டு நமக்குப்போகமுண்மையென்று கலங்கி, விஷயங்களைக் காங்க்ஷித்தானென் றுத்தரம்.

(அஉ) இப்படியானால் இவ்விடத்திலே அநுஷ்டிக்கவேண்டிய வநுசந்தான மேதென்கிற சங்கைக்கு:—

இலௌகீகத்திலே புசிக்கிறவன் பிரியமாயிருக்கிற விஷயங்களைப்பார்க்கிலுந் தன்னைப் பிரியமாய்க்காண்கிறாற்போல, விவேகியுங் கூடஸ்தருக் கன்னியமெல்லா மப்பிரியமென்று தள்ளிக் கூடஸ்தனையே பிரியமாய்க் காணவேண்டுமென் றுத்தரம்.

(அங) பிரியமாய்க்காண்கிற தெப்படி யென்கிற சங்கைக்கு:—

பாமரனாகவிருக்கிறவன் மாலை சந்தன வனிதை முதலானவிஷயத்திலுண்டாகிற இச்சையையுஞ்சாவதானமாகவே வாதிக்கவேண்டுமென்கிறவன், காவிய நாடகங்களிலே பண்ணுகிற நிரந்தர விசாரத்தைம் கர்மியுபாசகர் செபம் யாக முபாசனாதிகளிலே பண்ணுகிற விசுவாசத்தையும் யோகியானவன் மனதை நிறுத்தப்படுகிற வருத்தத்தையுங் கூடஸ்தரிடத்திலே செய்யவேண்டுமென் றுத்தரம்.

(அச) இப்படிச்செய்வதனால் வரப்போகிற பலனே தென்கிற சங்கைக்கு:—

போகம் வித்தை புண்ணியலோகம் அணிமாதி அஷ்டமா சித்தி இந்நால்வருக்கும் வருவதுபோலக் கூடஸ்தராயிருக்கிறதன்னை

மூன்றவஸ்தையுங் கடந்தவராய் ஏகராய்ச் சச்சிதாநந்தராய்ச் சதா சிவமாய்க் கண்டவனுக்குச் சொப்பனம்போலப் புண்ணியபாவ கர்மத்தொடக்கற்று முத்தனுவானென் றுத்தரம்.

(அ௫) இப்படிக் கண்டவனுக்குப் புசிக்கிறவனுரென்று வகுப்பற்றதென்கிற சங்கைக்கு:—

ஞானியாயிருக்கிற சிதாபாசனுக்கென் றுத்தரம்.

(அ௬) இவன் சாக்ஷியைவிட் டிராதபடியினுல் இவனைப்பற்றிப் போகங்கள் சாக்ஷியிடத்திலும் ஆரோபிக்கப்படாதோ வென்கிற சங்கைக்கு:—

சிதாபாசன் ஓரவஸ்தையிலே கண்டதோ ரவஸ்தையிலேகாணுத மாயாமயத்திற் குட்பட்டவனுனபடியினுலே, தானில்லாமற் போகிறவனுகக்கண்டு ஏங்கிச் சாகக்கிடக்கிறவன் பெண்கொள்ள வாஞ்சியாததுபோலத் தனக்குட்பட்டபோகம் வேண்டான்; முன்போலத் தானே புசிக்கிறவனென்று சொல்லுதற்கு மூக்கறையன் போல குன்றிப் பிராரத்தபோகம் புசிக்கிறபடியினு லிதை யெப்படிச் சாக்ஷியிடத்தி லாரோபிக்கப்படும். ஆகையினுல், வேதமும் புசிக்கிறவனில்லையென்று சொல்லுகிறதென் றுத்தரம்.

(அ௭) சரீரா நுதாபமில்லையென்கிற வேதத்திற் கர்த்தமெப்படியென்கிற சங்கைக்கு:—

ஞானிக்கு மூன்றுசரீரத்தி லத்தியாசம் போனபடியினுலேமூன்றுசரீரத்துச் சுரங்களு மிவனைத் தாபப்படுத்தாதென் றுத்தரம்.

(அ௮) மூன்றுசரீரமேது அவைகளில் எந்தெந்தச் சுரமிருக்கிறது, அவையிவனை யெப்படித் தாபப்படுத்தா தென்கிற சங்கைக்கு:—

ஸ்தூல சூக்ஷ்ம காரணமென்று சரீரமூன்றுயிருக்கும்; இதிலே வாதபித்த சிலேற்பனமுதலான வியாதியும், இடி சூடு முறிச்சல்

முதலானபீடையும், ஸ்தூலசரீரத்துச் சுரம் காமக்குரோதலோப மோக மதம் லச்சை பய முதலானவையுஞ், சமை தமை சிரத்தை பத்தி முதலானவையுஞ் சூக்ஷ்மசரீரத்துச் சுரம். பலபடக் காரிய சரீரத்தை யுண்டாக்குகிறதே காரணசரீரத்துசுரம். நூலன்றிப் புடவையில்லாததுபோலவும் மயிரன்றிக் கம்பளி யில்லாதது போலவும் மண்ணைநீக்கிக் கடமில்லாததுபோலவும், அதற்குச்சொன்ன சுரங்களைவிட்டுச் சரீரங்களில்லை; இம்மூன்று சரீரங்களுக்குஞ் சொன்னசுரமே சுபாவசித்தம்போலச் சிதாபாசனுக்குப் பிரகாசமே சுபாவமல்லாமல் அவனுக்கொரு சுரமுஞ் சுபாவமல்ல. இப்படிச் சிதாபாசனுக்கு முதலாயில்லாத சுரஞ் சாக்ஷிக்குவரப் பிரசித்தியில்லை. ஆகையினால், வேதமும் ஞானிக்குச் சரீராநு தாபமில்லையென்று சொல்லுகிறதென் றுத்தரம்.

(அகூ) இப்படியில்லாத சுரம் முன்னொப்படித் தபிப்பித்ததென்கிற சங்கைக்கு:—

அஞ்ஞானத்தினாற் புத்திரதாராதிகள் தபிக்கிறதைத் தான்தபிக்கிறேமென்கிற மூர்க்கன்போலச் சரீரத்திரயத்தையுஞ் சாக்ஷியையுங்கூட்டித் தன்னுடைய ரூபமாயெண்ணிக்கொண்டு சரீரந்தபிக்கிறதைத் தான் தபிக்கிறதாகப் பிரமிப்பனென் றுத்தரம்.

(கூ0) ஞானம் வந்தபின்பாகிலுந் தபியாம லிருக்கவேண்டுமே யல்லாமற் றிரும்பத் தபிப்பானேனென்கிற சங்கைக்கு:—

விவேகத்தினாற் பிராந்தியைத்தள்ளித் தன்னைச்சாக்ஷியாகவறிந்தபின் முந்தின தாபம்போய்விட்டது. இந்தப்பழுதைக்காக வேதுக்கோடி இடுப்பு முறித்துக்கொண்டோமென்கிறதுபோல இல்லாதசம்சாரத்தை யேன்மேற்போட்டுக் கொண்டோமென்கிற வெறுப்பைத் தாபமென்கிறேயென் றுத்தரம்.

(கூக) சாக்ஷி நாமென் றறிந்தாற்போதாதோ பலபட அநுசந்தானம் பண்ணுவானேன் பலபடத்தேக நானல்லவென்று பாவிப்பானேனென்கிற சங்கைக்கு:—

இல்லாத சம்சாரத்தை உம்முடைய பேரிலே யாரோபித்தேன் அதனைப்பொறுத்துக்கொள்ளுமென்று சாக்ஷியைச் சரணமாயடைகிறதாகவும், புரிந்த பாவம்போகப் பிராயச்சித்தம் பண்ணிக்கொள்ளுகிறாற்போலச் சஞ்சிதகர்மம் விட்டுப்போகத்தக்கதாகவும் அநுசந்தானம் பண்ணுகிறது நீச்சனிடத்திலே யகப்பட்ட பிராமணன் வெகு பிராயச்சித்தத்தினால் பிராமணருடனேகூடினபின் மிலேச்சரைக் கண்டாலோடுகிறாற்போலத் தேகநானல்லவென் றநுசந்தானம்பண்ணுகிறதென் றுத்தரம்.

(கூஉ) ஞானியாயிருக்கிறவன் முன்போலப் பிரபஞ்சவிவகாரம் பண்ணமல் நாணுவானேனென்கிற சங்கைக்கு:—

குய்யத்திலே குஷ்டம்பிடித்தவேசி அறிந்தவர்முன் நாடக நடிக்க நாணுகின்றாற்போலச் சிதாபாசனுந் தன்னை மாயாமயமென்றறிந்தபின் தன்னைக்கர்த்தாவென்று சொல்ல நாணுவானென் றுத்தரம்.

(கூந) ஞானம்வந்தபின் நாணமும் நடுக்கமும் வரலாமோவென்கிற சங்கைக்கு:—

வாலிபனாகவிருக்கிறவன் ராச்சியத்திற்காக ராஜாவை யாசிரயம் பண்ணுகின்றாற் போலப் பிரமத்தை யறிந்தவன் பிரமமேயாவனென்கிற வேதங்கேட்டுப் பிரமத்தைக் கெம்பீரமாக வநுசந்தானம் பண்ணுகின்றதேயல்லாமற் பீதியில்லையென் றுத்தரம்.

(கூச) பிரமக்ஞானம் சிதாபாசனைக் கொல்லவந்ததனால் எவனாகிலுந் தான்சாகமருந்து குடிப்பானோவென்கிற சங்கைக்கு:—

தேவ ஞகலாமென்கிற சந்தோஷத்தினுற் கங்காப்பிரவேசம் பண்ணுகிறுற்போலப் பிரமமாகலா மென்கிற சந்தோஷத்தினுல் ஞான மப்பியாசிப்பனென் றுத்தரம்.

(௬௫) கங்காப்பிரவேச மாரம்பித்தவுடனே தேவனுகிறுற்போல ஞானிகளுடனே பிரமமாகவில்லையே யென்கிற சங்கைக்கு:—

ஆரம்பித்த கர்மமுடிந்து சரீரநசிக்கும் பரியந்தம் மநுடனென் கிறபேர் நிற்கின்றுற்போலப் பிராரத்ததேகம் விழும்பரியந்தமுஞ் சிதாபாசனென்கிறபேர் போகாதென் றுத்தரம்.

(௬௬) பழுதையென் றறிந்தவுடனே பாம்பென்கிறது போக வில்லையோ வென்கிற சங்கைக்கு:—

பழுதையென்றறிந்தபின் சர்ப்பபீதி கிரமத்திற் றணிகிறுற்போ லவும் பத்தாமவனுக்கிடித்துக்கொண்ட புண்வேதனை கிரமத்திற் றணிகிறுற்போலவும் பிராரத்தகர்மபோகமும் புசித்தே தொலையவே ண்டுமென் றுத்தரம்.

(௬௭) ஞானம்வந்தும் பிராரத்ததுக்க மிருந்தாற் றுக்க நிவிர்த்தி யென்கிற ஆருமவஸ்தை யெப்படிக் கூடுமென்கிற சங்கைக்கு:—

பத்தாமவனைச் சாகாமற்கண்ட சந்தோஷம் புண்வேதனையைத் தெரியவொட்டாததுபோலத் தானேபிரமமென்று முத்தனுன சந் தோஷம் பிராரத்ததுக்கத்தைத் தெரியவொட்டாது. ஆகையால், ஆருமவஸ்தை கூடுமென் றுத்தரம்.

(௬௮) சிதாபாசனுடைய ஆருமவஸ்தையுந் தெரிந்தது, இனித் தடையற்ற வாநந்தத்தை விவரமாய்ச் சொல்லுமென்கிற சங்கை க்கு:—

இகலோக பரலோகத்தைக் குறித்துப் பண்ணவேண்டிய கர்ம மெல்லாம் பண்ணி முடிந்தபடியினுல் மோக்ஷமும் பிரமமும் நாமெ

ன்றறியப்பட்டபடியினால் மனதிலே ஒருகுறையுமில்லையென் றறிந்ததுகொண்டு தடையற்ற வானந்தமுண்டென் றுத்தரம்.

(௯௯) காண்டத்திரயத்திலுஞ் சொன்ன வநுஷ்டானத்தில் ஒன்றும்புரியாம லிருக்கையிலும் எல்லாஞ் செய்துமுடிந்ததென்கிறதெப்படியென்கிற சங்கைக்கு:—

எல்லாந் தீர்ந்தமுறியாக வகுப்பற்றதென்கிறதை ஞானியினுடைய வநுசந்தானத்தினு லறியலாமென் றுத்தரம்.

(௧00) பண்ணவேண்டிய தறியவேண்டியவை யெல்லாந் தேவையற்றுப்போன வநுசந்தானத்தை யெனக்குத் தெரியச்சொல்லுமென்கிற சங்கைக்கு:—

நான் துக்கியென்றிருக்கிற அஞ்ஞானிக்குப் பூமி தானம் புத்திர மித்திர களத்திரம் வேண்டுமென்று இகலோக சம்சாரத்திலேயலையவேண்டும் பரமாநந்த பூரணமாயிருக்கிற நமக்கந்த மாயாமயத்தைக் குறிக்கத் தேவையில்லை. பரலோகத்தையடைய வேண்டியவனுக்கு அதற்கேற்ற கர்மாநுஷ்டானம் பண்ணவேண்டும் சர்வலோகமும் மாயாமயமாய்ப் பார்க்கின்ற நமக்கு ஒருகர்மமுந் தேவையில்லை. பிரமலோகத்தை யடையவேண்டியவனுக்கு வேதசாஸ்திரங் கற்கவேண்டும் நிரதிகாரியா யிருக்கிற நமக்குத் தேவையில்லை. தத்துவத்தை யறியவேண்டியவனுக்கு வேதாந்தசிரவணம் பண்ணவேண்டும் அறிந்தவனுக்குத் தேவையில்லை. சந்தேகமுள்ளவனுக்கு மனனம் பண்ணவேண்டும் தேகநாமென்றிருக்காலுமெண்ணும் சந்தேகமற்ற பிரமமாயிருக்கிற நமக்குத்தேவையில்லை. விபரீத பாவனை யுள்ளவனுக்கு நிதித்தியாசனம் பண்ணவேண்டும் தேகாதிவிலக்ஷணனை நமக்குத்தேவையில்லை. விக்ஷேபமுள்ளவனுக்குச் சமாதியிருக்கவேண்டும் சின்மாத்திரமாயிருக்கிற நமக்குத்தேவையில்லை. விக்ஷேப

முஞ் சமாதியும் அந்தக்காரணத்திற்கே யாகையால் பண்ணவேண்டியதெல்லாம் பண்ணி முடிந்ததென் றுத்தரம்.

(கOக) விவகார மிருக்கிறபோதே உமக்கு விபரீத மெப்படியில்லை நித்திரை பிக்ஷை முழுக்கு சௌசம் இந்தநான்கும் நீர் அநுஷ்டிக்கக் கண்டோமென்கிற சங்கைக்கு:—

விவகாரங் குலாலசக்கரம்போல வாசனையினால் நடக்கிறதேயல்லாமல் நமக்கு விபரீதபாவனையில்லை. பிறத்தியா னெருப்பென்கிறது கொண்டு குன்றிமணிச்செடி வேகாததுபோல நீ நம்மைக் கர்த்தாவென்றதுகொண்டு நாம் நித்திரை முதலானதைப் புரிந்தவனுகோமென் றுத்தரம்.

(கOஉ) இப்படி வாசனையினால் வருகிற விவகாரமும் போகவேண்டாமோ வென்கிற சங்கைக்கு:—

பிராரத்த கர்மந் தொலைந்தா லொழியப்போகா தென்றுத்தரம்.

(கOங) ஆனால் உம்முடைய விவகாரத்திற்கு விதியேதென்கிற சங்கைக்கு:—

இலௌகீகமாகிலும், வைதீகமாகிலும், உத்தண்ட மாகிலும் பிராரத்தமுள்ளபடி நடக்கின்றதே விதியென் றுத்தரம்.

(கOச) இப்படியானால் உம்மிடத்தி சகலருக்கு மப்பிரமாணபுத்திவரும் உம்மைப்பெரியவரென்று ஞானங்கேட்பாருமில்லை, உம்முடைய ஞான முமக்கே பிரயோசனம் பிறரையீடேற்ற மாட்டாதென்கிற சங்கைக்கு:—

ஆனல் நான் கிருதகிருத்தியனானாலும் உலோகானுக்கிரகார்த்தமாய்த் தேவார்ச்சனை, சௌச முதலானவைகளைக் காயத்தினாலும், பிரணவ, செப, வேதாந்தபாட முதலானவைகளை வாக்கினாலும், மூர்

த்தித் தியானம் பிரமத்தியானத்தை மனதினுலுஞ் செய்தவனுமல்ல செய்யச்சொன்னவனுமல்ல, இப்படி நாமிருந்தால் கர்மிகளுக்கும் நமக்குஞ் சண்டையில்லையே நம்முடைய ஞானமும் பலருக்கு முபகாரமாமென் றுத்தரம்.

(௧0௫) கர்மத்திற்கு நிர்ப்பந்தமெதினுலே ஞானத்திற்கு நிர்ப்பந்தமெதினுலே யென்கிற சங்கைக்கு:—

ஞானியினுற் பொய்யென்று தள்ளப்பட்ட திரிவிதகரணத்தில் கர்மத்திற்கு நிர்ப்பந்த மல்லாமற் சாக்ஷியினிடத்திலே நிர்ப்பந்தமில்லை, அந்தத்திரிவிதகரணத்தினுலே கர்மிகர்மத்தை முடிக்கட்டும்; நமக்கு ஹானியேது ஞானத்திற்கு நாம்அசங்கனென்கிறதிலே நிர்ப்பந்தமல்லாமற் றிரிவிதகரணத்தினிடத்திலே நிர்ப்பந்தமில்லை திரிவிதகரணத்திற்கும் கர்மத்தைவிலக்கத் தேவையில்லை. ஞானி தன்னைப் பிரமமென்றறிந்ததுகொண்டு கர்மிக்கு ஹானியேதென் றுத்தரம்.

(௧0௬) இப்படி யெல்லாரு மறியாமல் ஆத்மாவைத் திரிவித கரணத்தோடே கூடக் கர்த்தாவென்கிற கர்மிகளும் ஞானம்வந்த வுடனே திரிவிதகரணத்திற்கும் ஒரு கர்மமும் வேண்டாமென்றிருக்கிற ஞானிகளும் ஒருவருக்கொருவர் சண்டைக்கு நிற்பானேனென்கிற சங்கைக்கு:—

அவர்க ளஞ்ஞானத்தினுலே செவிடர் கதை கேட்டாற்போலச் சண்டைக்கு நிற்கிறுர்களென் றுத்தரம்.

(௧0எ) ஞானம்வந்தவனுக்குப் பிறரைக்குறித்தாகிலுங் கர்மப்பிரவிர்த்தி யுசிதமல்ல நிவிர்த்தியாகச் சன்மார்க்கத்திலே யிருக்கவேண்டுமென்கிற சங்கைக்கு:—

ஞானிக்குப் பிரவிர்த்தியினுற் பிரயோசன மில்லாவிட்டால்நிவிர்த்தியினுலும் பிரயோசனமில்லையென் றுத்தரம்.

(௪0அ) நிவிர்த்தி ஞானத்திற்குச் சாதனமல்லவோவென்கிறசங்கைக்கு:—

அறிந்தபின் சாதனமேதுக்கென் றுத்தரம்.

(௪0கூ) தோற்றுகிற சகத்தினு லின்னமஞ்ஞானப் பிராந்திவந்தாலும் சாதனத்தையநுஷ்டித்தாற் ருழ்வில்லையேயென்கிற சங்கைக்கு:—

உயிரோடிருக்கிற எலியானது பூனையைக்கொல்லாதென்ருல், இறந்த எலி பூனையைக்கொல்லப்போகிற தென்ருற்போலவும், பாசுபதத்தினுல் கொல்லப்படாதவனை நாணற்கழியினுலே கொல்லப்படுமென்ருற்போலவும், அநாதியிலே அஞ்ஞானதற்காரியங்களெல்லாங்கூடிக் கொல்லப்படாத போதமேதாணுகிய திடஞானத்தினுலே கொல்லப்பட்டிருக்கிற அஞ்ஞான தற்காரியங்கள் திரும்பவும் பந்தப்படுத்துமென்கிறது உன்னுடைய புத்தித் தாழ்வேயொழிய வேறல்லவென் றுத்தரம்.

(கக0) அஞ்ஞானதற்காரியந் துடைப்பட்டுப்போனுலும் சகத்துத் தோற்றுகிறதைக்கண்டு சொன்னேனென்கிற சங்கைக்கு:—

தோற்றினுலென்ன இத்தனையு நாமல்லவோ கொன்ருேமென்று படுகளம்பார்க்கிற போதராசாவுக் கதனுற் றிருப்தியே யொழிய அச்சமில்லை, இப்படிக்கொத்த போதசூரனுக்குத் தேகாதிகளிடமாய் வருகிற பிரவிர்த்தியினுலும் நிவிர்த்தியினுலும் பிரயோசனமேதென் றுத்தரம்.

(ககக) பிரவிர்த்தியாகாது நிவிர்த்தியாமென்கிறது ஆருக்கென்கிற சங்கைக்கு:—

சுவர்க்க மோக்ஷத்தைக்குறித் தெத்தனம் பண்ணுகிற அஞ்ஞானிக்கென் றுத்தரம்.

(௧௧௨) அப்படிப்பட்ட அஞ்ஞானிகளோடு ஞானி கூடியிருக்கும்போது செய்காரியமேதென்கிற சங்கைக்கு:—

குழந்தைகள் தகப்பனையடித்தாலும் வைதாலும் மனதிலே கிலேசமில்லாமற் சீராட்டுகிறாற்போல, அஞ்ஞானிகள் தூஷித்தாலும் பூஜித்தாலுந் திரும்பத் தானப்படிச்செய்யாமல் அவர்களுக்குச் சம்மதமாகத் திரிவித கரணத்தினாலுங் கர்மத்தை முடித்துக்கொண்டு அவர்களுக்கு ஞானமேற்றுவிக்கிறதே செய்காரியமென்றுத்தரம்.

(௧௧௩) ஞானிக்கு ஞானாப்பியாசம் செய்கிறபேர்களுடனேகூடியிருக்கும்போது செய்காரிய மேதென்கிற சங்கைக்கு:—

ஞானங்களைப் போதித்துக் கர்மாதிகளைத் தூஷித்துக் கர்மாதிகளைத் துறந்து காட்டவேண்டுமென் றுத்தரம்.

(௧௧௪) ஞானி தனித்திருக்கும்போது செய்காரிய மேதென்கிற சங்கைக்கு:—

தன்னுடைய கிருதகிருத்தி யாநந்தத்தைக்கண்டு களித்து மகிழ்ந்து பிரமமே நாமென்றறிய வென்ன பாக்கியம் புரிந்தோமோ நம்முடைய அஞ்ஞானம் எவ்வழி போயிற்றோ நாம் செய்த அதிஷ்டவெத்தனத்தினாலே நமக்கொரு சம்சாரமுமில்லாமற் போயிற்றே நமக்குப் பிரமாநந்த நிலை வெட்டவெளியாகத் தோற்றக்கிடைத்ததே உலகத்திலே யெல்லாரையும்பிடித்த கர்த்தவ்வியங்களிலே நமக்கொன்றுந் தேவையற்றுப்போன பாக்கியமேதோ எல்லாராலு மடையவேண்டுமென்கிற பிரம நாமானோமே நயக்கித்தனை பாக்கியத்தையுங் கொண்டுவந்துவிட்ட சாஸ்திரத்தைப் புகழ்வோமோ இந்தசாஸ்திரத்தை யநுபவத்திற்கு வரப்பயிற்றுவித்த குருவைப் புகழ்வோமோ எப் புண்ணியத்தினாலிப்படிப் பலித்ததோ நம்முடைய புண்ணி

யத்திற்கும் நம்முடைய ஞானத்திற்கும் நம்முடைய ஆநந்தத்திற்கும் ஒப்புக்காணேமென்று எந்நேரமும் தன் சுபாவாநந்தத்திலே யநுபவமா யநுபவிக்கிறதே செய்காரியமென் றுத்தரம்.

இந்தத் திருப்திதீபிகையை அநுசந்தானஞ் செய்துவருகிறவன் பிரமாநந்தத்திலழுந்தி நித்தியதிருப்தனுயிருப்பன்.

திருப்திதீபம் - முற்றிற்று.

ஆகச்சங்கை-ககசு.

சிவமயம்.

மூன்றவது

கூடஸ்ததீபம்.

வித்தியாரண்ணிய ஸ்வாமிகள் வேதாந்தார்த்தம் விரிவிலே விசாரிக்கமாட்டாதவர்களுக்குக் கூடஸ்ததீபிகையினலே துவம்பதார்த்த விவேகமுண்டாகும்படி.

(க) துவம்பதத்திற்கு வாச்சியார்த்தமார் லக்ஷியார்த்தமார் இந்த விருவகையும் பொருந்தியிருக்கிறதற்குத் திருஷ்டாந்தமேதென்கிற சங்கைக்கு:—

துவம்பதத்திற்கு வாச்சியார்த்தம் சிதாபாசன் லக்ஷியார்த்தங் கூடஸ்தர் திருஷ்டாந்தமேதென்றல் கண்ணடியிற்பிரதிவிம்பவெய்யிலும், சுபாவவெய்யிலும் ஒருமைப்பாடாய் ஒரு சுவரை விளக்குவிக்கிறற்போலக் கூடஸ்தருஞ் சிதாபாசனும் ஒருமைப்பாடாய் ஒருதேகத்தை யறிகிறர்களென் றுத்தரம்.

(உ) இவர்களிருவரும் எதனல் ஒருமைப்பாடாய்த் தோற்றுகிறர்கள் இவர்களைப் பகுத்தறியும் வழி யெப்படியென்கிற சங்கைக்கு:—

அவிவேகத்தினலொருவனகத் தோற்றுகின்றது. ஓரவஸ்தையில், ஏகதேசமாகத்தோற்றி மறைகிற சிதாபாசனையும் நித்தியப்பிரகாசமா யிருக்கிற கூடஸ்தரையும் ஏகதேசத்திலே உபாதியினலுலே

கின்ற வெய்யிலையும் அகண்ட வெய்யிலையும்போலக் குறிப்பினாலறிக வென் றுத்தரம்.

(ங) சரீரத்திற்குப் புறம்பே விஷயக்ஞானம் வரும்போது கூடஸ்தரையுஞ் சிதாபாசனையும் பகுத்தறியும்வழி யெப்படி யென்கிற சங்கைக்கு:—

கடக்ஞானம்வருகிறது சிதாபாசனாகவிருக்கிற தனக்கு † கடோவிருத்திக்ஞானம்வருகிறது. கூடஸ்தராயிருக்கிற தனக்கு கடமென் றறிந்தவுடனே அணைந்தவன் சிதாபாசன் அதனைக்கண்டவன் கூடஸ்தனென் றுத்தரம்.

(ச) கடக்ஞானம் வருகிறதற்கு முன்னும்பின்னும் கடத்திலே கூடஸ்தரிருந்ததற் கடையாளமே தென்கிற சங்கைக்கு:—

கடக்ஞானம் வருகிறதற்குமுன் அறியப்படாததாகவும் பின் அறியப்பட்டதாகவுங் காண்கிற தன்னநுபவமே அடையாளமென் றுத்தரம்.

(ரு) கடம் ஒருகாலத்தி லறியப்பட்டதாகவும் ஒருகாலத்தி லறியப்படாததாகவுஞ் சாக்ஷியினிடத்தி லிருவகையுந் தோற்றுவானேனென்கிற சங்கைக்கு:—

எக்காலத்தினும் எங்குமிருக்கின்ற சுபாவசைதன்னியத்தினிடத்திலே கற்பிக்கப்பட்ட கடம் அஞ்ஞானத்துடனே கூடியிருந்தபோதறியப்படாத தாகவுந் தோற்றிற்றென் றுத்தரம்.

(சா) ஞானமாவதேது அஞ்ஞானமாவ தேதென்கிற சங்கைக்கு:—

---

† கடோவிருத்தி ஞானமென்றது - கடமறியப் பட்டதெனுந் தன்மை.

உலோகாந்த குந்தம்போலச் சிதாபாசாந்த புத்திவிருத்தியே. ஞானம் § தோற்றரவற்றதே அஞ்ஞானம் என் றுத்தரம்.

(௭) விருத்திக்குமுன் சிதாபாச னில்லாத படியினால் அறியப் படாத கடம் சாக்ஷிதானே அறியவேண்டும், விருத்திக்குப் பின்னறி யப்பட்டது. கடமென்கிறது சிதாபாசனா லறியலாம். சாக்ஷி யறிவ ரென்கிறது வேண்டாமென்கிற சங்கைக்கு:—

கடமென் றறிந்தவுடனே சிதாபாசன் விருத்தியிலே நஷ்டமா ய்ப்போனபடியினாலும் அந்தவவசரத்திற் கூடஸ்தரைத்தவிர வேறு சைதன்னிய மில்லாதபடியினாலும் விருத்திக்குமுன் னறியப்படா ததை யறிந்திருந்த கூடஸ்தர்தானே விருத்திக்குப்பின் னறியப்பட் டதென்கிறதையுந் தோற்றுவிக்கிறதற்குச் சந்தேகந் தேவையில்லை. ஆகையால் இரண்டுகாலத்திலுங் கடத்தை யறிகின்றவர் கூடஸ்தர் தானே யென் றுத்தரம்.

(௮) கடக்ஞானம் வந்தவுடனே சிதாபாசன் நஷ்டமாய்ப்போ னாலும் அவனோடுகூட நஷ்டமாகாமலிருக்கின்ற விருத்தியினாற் கட மறியப்பட்டதென்கிறது தோற்றலாம்; சாக்ஷியினா லென்கிறது தே வையில்லை யென்கிற சங்கைக்கு:—

சிதாபாசனில்லாத விருத்தி பிரகாசத் திரவியமானாலும் வெள் ளைமண்போலச் சடமானபடியினால் அறியப்பட்டதைத் தோற்று விக்க மாட்டாது. சாக்ஷிதானே தோற்றுவிக்கிறாரென் றுத்தரம்.

(௯) சாக்ஷியினிடத்திற் கற்பிக்கப்பட்ட கடம் அஞ்ஞானத்துட னே கூடினாலும் விருத்தியுடனே கூடினாலும் அறியப்பட்டதெனக்

---

§ தோற்றரவற்ற தென்றது - சாட்டியமென்று மூல பாடம், சாட்டியம் - தனக்கெனத் தோற்றமில்லாமை.

கூடாமற்போனால் அறியப்பட்ட தென்கிறபே ரெதனால் வந்ததென் கிற சங்கைக்கு:—

சிதாபாசன் பிரதிவிம்பித்ததைத் தொட்டே கடமறியப்பட்ட தாயிற்றென் றுத்தரம்.

(௧0) சைதன்னியத் தொடக்குத்தானே அறியப்பட்ட தற்கு மூலமானால் முன் சாக்ஷிசைதன்னியத்துடனே கூடினது கொண்டு அறியப்பட்டதாக வொண்ணாதோ வென்கிற சங்கைக்கு:—

விருத்திக்குப்பின் பிரதிபலின சைதன்னியத்திற்கே பிரயோசன மாகவேண்டுமே யல்லாமல் முன்னிருந்த கூடஸ்தருக்குப் பிரயோசன மென்றுசொல்லக் கூடாதென் றுத்தரம்.

[இவை மூலசுலோகப்படி.]

அறியப்படாததை ஜனிப்பிக்கு நிமித்தம் அஞ்ஞான மிருப்பது போல அறியப்பட்டதை ஜனிப்பிக்கு நிமித்தம்புத்திபோதுமே சிதாபாசனால் என்ன பிரயோசன மென்னுஞ் சங்கைக்கு:—

சிதாபாசனில்லாத விருத்தி வெள்ளை மண்போல சடமாவதால் அறியப்பட்டதை ஜனிப்பித்தற்குக் காரணமாகாதென் றுத்தரம்.

சித்தாந்த மேதென்னுஞ் சங்கைக்கு:—

கடத்திலே சிதாபாச ரூப பல வுற்பத்தியினாலே அறியப்பட்டதென்னு ஞானத்தை பிரசித்தமாயுள்ளதென் றுத்தரம்.

ஆயினுஞ் சிதாபாசனைக் கற்பிக்கிறது யோக்கியமல்ல எதனாலெனில் பிரமசைதன்னிய ரூபமாகவே பலமிருத்தலா லென்னுஞ் சங்கைக்கு:—

பிரமசைதன்னியம் - பிரமாணத்தின் பிரவிர்த்திக்கு முன்னே யிருப்பதாலும், பலமோ, பிரமாணத்தின் பிரவிர்த்திக்குப் பின்னே உண்டாவதாலும், பிரமசைதன்னியம் * பலமல்லவென் றுத்தரம்.

---

* பலம் - என்றது இது கடமென்னும் ஸ்பூர்த்தி.

{ பிரமசைதன்னியத்தைக் கூடஸ்தரென்று விவகரித்ததற்கு விபரம். }

மொழிபெயர்த்தவாசிரியர் கூடஸ்தபிரமங்கட்குப் பேத மில்லாமை பற்றி மூல சுலோகத்தில் கடத்தில் பிரமசைதன்னியம் முன்னும் பின்னும் உள்ளது என்பதை கூடஸ்தரென்றே விவகரித்தனர்.

(கக) இப்படியானுற் சாக்ஷிக்கும் சிதாபாசனுக்கும் பேதமேதென்கிற சங்கைக்கு:—

கடமாத்திரத்தைக் காண்கிறவன் சிதாபாசனென்றும்; சிதாபாசன், விருத்தி, கடம், இம்மூன்றையுங் காண்கிறவர் கூடஸ்தரென்றுமுத்தரம்.

(கஉ) இப்படியானுல் எல்லாச் சாஸ்திர கர்த்தாக்களும் விஷயக்ஞானத்தி லிரண்டு சைதன்னியத்தையும் ஏன் பகுத் தறியவில்லையென்கிற சங்கைக்கு:—

கூடஸ்தரென்று சொல்லாமல் ※ அநுவியவ்சாயக்ஞான மென்று பேரிட்டுப் பகுத்தறிவரென் றுத்தரம்.

(கந) தேகத்திற்குப் புறம்பே ஆபாசனையும் கூடஸ்தரையும் பிரித்தறிந்தாற்போலத் தேகத்திற் குள்ளாகவும், இவர்களிருவரையும் பகுத்தறியும் வழி யெப்படி யென்கிற சங்கைக்கு:—

வெளியிலே ஈதென்கிற விருத்தியும் கடபடாதிக ளதற்குவிஷயமும் அவைகளின் அந்வய வெதிரேகத்தையும் அறிகிறவரே சாக்ஷியென்று மறிகிறதுபோலத் தேகத்திற்குள்ளும் அகமென்கிற விருத்தியும் காமக்குரோதாதிக ளதற்குவிஸ்யமும் இவைகளின் அந்வய வெதிரேகத்தையு மறிகிறவர் சாக்ஷியென் றுத்தரம்.

※ அநுவியவசாயக்ஞானம் என்றது-ஞானத்தில் ஞானம்.

(கச) உள்ளே சிதாபாசத்தோற்ற வெப்படி, சாக்ஷித்தோற்ற வெப்படி யென்கிற சங்கைக்கு:—

காய்ச்சின்விரும்பிலிருக்கிற வக்கினி யந்த விரும்பைமாத்திரந் தோற்றுவிக்கிறதே யல்லாமல் மற்றொன்றையுந் தோற்றுவியாதது போலக் காமக் குரோதாதி யாகிற அகவிருத்தியிற் கலந்திருக்கிற சிதாபாசனுந் தான்மாத்திரந்தோற்றுகிறதேயல்லாமல் அன்னியமாயிருக்கிறதைத் தோற்றுவிக்கமாட்டான். சாக்கிர சொப்பனத்தில் விருத்திகளையும் விருத்திகளினிடைசந்தியையும் சுழுத்தி, மூர்ச்சை, சமாதிகளி லிவைகளில்லாததையுந் தோற்றுவிக்கிற நிர்விகார சைதன்னியமே கூடஸ்தரென் றுத்தரம்.

(கரு) வெளியில் விருத்தியி லறியப்பட்டதையும் அறியப்படாததையுங் காண்கிறவழியாகக் கூடஸ்தரைக் காண்பித்தால் உள்ளில் விருத்தியிலும் அந்தவழியாகக் காண்பியாமல் வேறொருவழியாகக் காண்பித்த தேதென்கிற சங்கைக்கு:—

உள்ளில் விஷயமான விருத்தியானது கடம்போல ஞானம் அஞ்ஞான மிரண்டோடுங் கூடாததுகொண்டு அந்தவழி தேவையில்லையென் றுத்தரம்.

(கசா) விருத்தியில் அஞ்ஞானவியாப்தி ஞானவியாப்தியிரண்டும் ஏனில்லை யென்கிற சங்கைக்கு:—

விருத்தியானது கடம்போலத் தனக்கன்னியமாகாத படியினால் ஒருக்கால் ஞானவியாப்தி வந்ததென்னக்கூடாது, அன்னிய பதார்த்தத்திலே யஞ்ஞானத்தைப் போக்குகிறபடியினா லிந்த விருத்தியி லஞ்ஞான வியாப்தி வரக் கணக்கில்லையென் றுத்தரம்.

(கஎ) இப்படி உள்ளிலும் புறம்பிலும் நானென்று தோற்றுகிற சைதன்னியம் இருவகையென்று சாதித்ததற்குப் பிரயோசனமேதென்கிற சங்கைக்கு:—

இந்தச் சைதன்னிய மிரண்டிற்குள்ளே கற்பிதமாகவிருக்கிற வன் ஜனன மரண சம்சாரியென்றும் கூடஸ்தராய்ச் சுபாவமாயிருக்கிற தனக்கு ஒருக்காலுஞ் சம்சாரமில்லையென்கிறதும் பிரயோசனமென் றுத்தரம்.

(௧௮) புத்தியிலே வளைப்பட்ட கூடஸ்த சைதன்னியஞ் சம்சாரியாகட்டுஞ் சிதாபாசன் வேண்டாமென்கிற சங்கைக்கு:—

அசங்கசைதன்னியத்திற் கோருபாதியிலே வளைபட்டதுகொண்டு சம்சாரம் வருமேயானாற் குடங்குதிர்களிலே வளைபட்ட சைதன்னியத்திற்குச் சம்சாரம் வரக்காணுமேயென் றுத்தரம்.

(௧௯) கடம்போல அந்தக்கரணம் மலினமல்லவே சொச்சத்திரவியத்திலே வளைபட்டாற் சம்சாரம் வருமென்கிற சங்கைக்கு:—

வெண்கல மரக்காலா லளந்ததுகொண்டு ஒட்டி யிரட்டி ஒன்று மூன்று காணுததுபோலச் சொச்சத்தினு லதிசய மில்லை யென் றுத்தரம்.

(௨0) மரக்காலும் வெண்கலக்காலுஞ் சரியானாலும் வெண்கலத்திலே பிரதிவிம்பங் கண்டாற்போலக் கடத்திலும் புத்தியிலே பிரதிவிம்பம் அதிசயமல்லவோ வென்கிற சங்கைக்கு:—

அப்படியானு லிந்தப் பிரதிவிம்பந்தான் சிதாபாச னிவனுக்கே சம்சாரம் ஆத்மாவிற் கில்லையென் றுத்தரம்.

(௨௧) உபாதியைத்தவிர ஆபாசனுக்கு வேறு சொரூபமில்லாதபடியினு லந்தக்கரணத்திற்கே சம்சாரமாகட்டுஞ் சிதாபாசனுக்குச் சம்சாரம்வேண்டா மென்கிற சங்கைக்கு:—

இப்படியானாற் சரீரத்தைத்தவிர அந்தக்கரணத்தைப் புறம்பாகக் காணப்படாதபடியினாற் சரீரத்திற்கே சம்சாரமாகவேண்டுமென் றுத்தரம்.

(உஉ) சரீரமரித்தாலும் புத்திமரியாதென்கிறசாஸ்திரத்தினாலே சரீரத்தைத்தவிர அந்தக்கரணம் வேறாக வேண்டு மென்கிற சங்கைக்கு:—

இப்படியானாற் புத்தியைவிடச் சிதாபாசனும் வேறேயுண்டென்று பிரவேச வுபநிஷத்திலே சொன்னபடியினாற் சிதாபாசனுக்கே சம்சாரம் அந்தக்கரணத்திற்குத் தேவையில்லையென் றுத்தரம்.

(உங) பிரவேச வுபநிஷத்திலே புத்தியோடே கூடினவனுக்கே சரீரப்பிரவேசஞ் சொல்லுகிறது புத்திக்கப்பாற் பட்டவனுக்கு சொல்லவில்லையே யென்கிற சங்கைக்கு.—

சடந் தேகமென்கிற வாக்கியம் நாமில்லாவிட்டாற் சரீரங்களும் இந்திரியங்களும் ஜீவிக்கமாட்டாதென்றும். ஆத்மாப் பிரவேசித்தாரென்கிறபடியினால் அந்தக்கரணத்திற் கன்னியனா யிருந்தவனுக்கே பிரவேசஞ் சொல்லுகிற தென் றுத்தரம்.

(உச) அந்தக்கரணத்திற் கப்பாற்பட்டவன் அசங்கனல்லவோ அவனுக்கெப்படிப் பிரவேசங் கூடுமென்கிற சங்கைக்கு:—

இவருக்குப் பிரபஞ்ச சிருஷ்டி யெப்படிக் கூடுமென் றுத்தரம்.

(உரு) அசங்கனுக்குப் பிரபஞ்ச சிருஷ்டி யில்லையே மாயாகற்பிதனுக் கல்லவோ சிருஷ்டி யென்கிற சங்கைக்கு:—

பிரவேசந்தானும் அவித்தையா கற்பிதனுக்கேயல்லாமல் அசங்கனுக் கில்லையென் றுத்தரம்.

(உசா) சிருஷ்டித்தவரும் பிரவேசித்தவருங் கற்பிதமென்கிறதற்குப் பிரமாண மேதென்கிற சங்கைக்கு:—

மாயை யவித்தை யென்கிற விரண்டுஞ் சிவேசுரரென்கிறஅபாசரைக் கற்பித்ததென்கிற வேதமும் இவர்களை யுற்றுவிசாரித்தா லல்

லாமல் நஷ்டமாய்ப்போகிற அநுபவமுமே பிரமாண மென் றுத்தரம்.

(உஎ) இப்படிச் சீவேசுரர் மாயாகற்பிதமென்றும், இவர்கட்கப் பாற்பட்டவ ராத்மாவென்றும், வேதத்திலே பகுத்துச் சொல்லுகிறதோ வென்கிற சங்கைக்கு:—

சீவேசுரர் பூதபௌதிகப் பிரகிருதிகளோடே கூடத்தோற்றிக் கூடவழிவார்களென்றும், அப்பாற் பட்டிருக்கிற கூடஸ்தர்அவிநாசியென்றும் மயித்திரிக்கு யாக்கியவல்கியர் சொன்னரென் றுத்தரம்.

(உஅ) இப்படியானற் சரீரமரிக்குஞ் சீவன் மரியானென்கிற வேதத்திற்கு விரோதமல்லவோ வென்கிற சங்கைக்கு:—

இந்தவேதம் பூதபௌதிக மோக்ஷத்தைச் சொல்லுகிறதல்ல அஞ்ஞானவஸ்தையில் உலோகாந்தர கமனத்தைச் சொல்லுகிறது. ஆகையால், ஆத்மாவிற் கன்னியமெல்லாம் அநித்தியமென்றே யுத்தரம்.

(உகூ) இப்படிச் சீவனே அநித்தியனானல் நித்தியமாயிருக்கிற பிரமத்தோடோ அகம்பிரமமென்கிற சமானாதிகரணமெப்படிக் கூடுமென்கிற சங்கைக்கு:—

முக்யசமானாதி கரணங் கூடாவிட்டாலுந் தாணுப் புருஷக் ஞானம்போல வாதசமானாதிகரணங் கூடுமென் றுத்தரம்.

(௩0) இப்படியானல் விவரணாசாரியர் வாதசமானாதி கரணத்தைக் கண்டிப்பானேனென்கிற சங்கைக்கு:—

நானென்கிற சத்தத்திற்குக் கூடஸ்தரை யர்த்தமாகப்பண்ணிக் கொண்டு கண்டித்தா ரென் றுத்தரம்.

(௩௧) இப்படிக் கூடஸ்தரே தானுய்க்கண்டாற் றற்பதத்திற்குந் தொம்பதத்திற்கும் அர்த்தமேதென்கிற சங்கைக்கு:—

தேகேந்திரியாதிகளையுடைய சீவப்பிராந்திக் கதிஷ்டானப் பிரத்தியக்ஷமுஞ் சகசரீரம்படைத்த ஈசுரப்பிராந்திக் கதிஷ்டானப் பிரத்தியக்ஷமும் அர்த்தமென் றுத்தரம்.

(௩௨) தற்பதத்திலுந்தொம்பதத்திலும், ஒருபிரமத்தைத்தானே யேகதேசங்களாகச் சொன்னு லிரண்டுபதங்களுக்கும் அர்த்தபேத முண்டோ வென்கிற சங்கைக்கு:—

ஆரோபமான சரீரத்தையுஞ் சகத்தையுந் தொட்டுப் பேதமே யல்லாமல் அதிஷ்டான சைதன்னிய மொன்றேயொழிய விரண்டில்லை யென் றுத்தரம்.

(௩௩) பிரத்தியக்ஷமாய் நிர்ணயப்பட்டிருக்கிற சீவேசுரர்களைப் பிராந்தியென்னக் கூடாதென்கிற சங்கைக்கு:—

சைதன்னியம்போல ஏகலக்ஷணமாய் நிர்ணயமாகாதபடியினுலும், சித்தாகவுஞ், சடமாகவும், நித்தியமாகவும், அநித்தியமாகவுங், குழம்பிக்கிடக்கிற படியினுலும் பிராந்தியென்கிறதற்குப் பிழையில்லையென் றுத்தரம்.

(௩௪) பிரபஞ்சத்தில் ஏகரீதியாய்த் தோற்றுகிற பிராந்தனுக்கும் விவேகிக்குந் தாரதன்மிய மேதென்கிற சங்கைக்கு:—

புத்தியாவதேது சிதாபாசனுகின்றவனுர் ஆத்மாவாவதார் சகத்தாவதெப்படித் தோற்றுமென்கிற கலக்கமுடையவனே பிராந்தன். இவனுக்கே சம்சாரம் இவைகளைத் தன்றன்சுபாவத்துடன்பகுத்தறிந்து தான் சச்சிதானந்தமென்று நிச்சயிக்கின்றவனே முத்தனென்கிறதற் கடையாளமென்று வேதாந்தஞ் சொல்லுகிறதென் றுத்தரம்.

(௫௫) தான் எப்போதுஞ் சச்சிதானந்தமாயிருக்கிறதற் கடையாள மேதென்கிற சங்கைக்கு:—

மாயாவிருத்திகள் மனோவிருத்திகள் தோன்றிநின் றழிகிறதற்குஞ் சாக்ஷியாயிருக்கிற ஆத்மா சத்தென்பதுகூடும், எல்லாவற்றையும் அறிகையினாலே சித்தென்பதுங்கூடும். பஞ்சகோசங்களைக் கைவிட்டாலுந் தான் கைவிடப்படாத வஸ்துவானபடியினாலே ஆநந்தமென்பது கூடும். ஆகையினாலே இவரே பரமசிவனென்கிற புராண வசனமே பிரமாண மென் றுத்தரம்.

(௫௬) இந்தக் கூடஸ்தருக் கன்னியமாயிருக்கின்ற சீவேசுரர் மாயாகற்பிதமான பூதபௌதிகங்கள்போலச்சடமாயிருக்கவில்லையே சைதன்னியமாயிருக்கின்ற இவர்களை மாயாகற்பிதமென்று சொல்லக்கூடாதென்கிற சங்கைக்கு:—

சகலவித பாண்டங்களெல்லா மண்ணிலே பிறந்தாலுங் காசகும்பங்கள் நிர்மலமாயிருக்கின்றனபோல் மாயாகற்பிதங்களுக்குள்ளே சீவேசுரர்களுஞ் சொச்சத் திரவிய மென்றுத்தரம்.

(௫௭) காசகும்பங்கள் பிரகாசமானாலுஞ் சடமாயிருக்கின்றன போலச் சீவேசுரர்களுஞ் சடமாயிருக்கக்காணோமென்கிற சங்கைக்கு:—

அசனத்திற்பிறந்த சரீரவிந்திரியாதிகளுக்குள்ளே மனதுபோதரூபமாயிருக்கிறது போல மாயாகற்பிதங்களுக்குள்ளே சீவேசுரர்களும் போதரூபமா யிருப்பார்களென் றுத்தரம்.

(௫௮) மாயை சடத்தைக் கற்பிக்கிறதேயல்லாமற் சைதன்னியத்தையுங் கற்பிக்குமோ வென்கிற சங்கைக்கு:—

ஒரு சீவனிடத்திலே யிருக்கிற நித்திராமோகம் அநேகஞ் சேதநா சேதனங்களைக் கற்பிக்கக்கண்டாற் சீவேசுரர்களை மஹாமாயை கற்பிக்கு மென்கிறதிலே ஆச்சரிய மேதென் றுத்தரம்.

(௩௯) கிஞ்சிக்ஞத்துவமுதலான சீவகுணங்களை மாயைகற்பிக்கு மல்லாமற் சர்வக்ஞத்துவ சர்வேசுரத்துவம் பஞ்சகிருத்தியத்துவ முதலான கல்யாண குணங்களை, மாயை கற்பிக்கப்படுமோ வென்கிற சங்கைக்கு:—

பிள்ளை பெற்றவன் பேரிடுகிறாற்போல ஈசுரனைக்கற்பித்த மாயை, அவரவர்களுக்கேற்ற தொழிற் கற்பிக்கிறதில் எது பாரமென்றுத்தரம்.

(௪0) இத்தனை வல்லபமா யிருக்கிற மாயைக்கு ஒரு கூடஸ்தரைக் கற்பிக்கச் சத்தியில்லையோவேன்கிற சங்கைக்கு:—

ஜீவேசுரர்கள் கற்பிதமென்று வேதப்பிரமாணங் கண்டாற்போல கூடஸ்தரு மாயாகற்பிதரென்று ஒருவேதப்பிரமாணமுமில்லை. இவரே உண்மைப்பொருள், ஆதிவஸ்துவென்று சகல வேதங்களுங் கொண்டாடுகிறது. ஆகையினுல், உன்னுடைய சங்கைக் கிடமில்லை யென் றுத்தரம்.

(௪௧) இப்படி மாயாகற்பிதமான ஜீவேசுரர்களா லென்னகாரிய முடியுமென்கிற சங்கைக்கு:—

மாயையை விரியப்பார்க்கிற பார்வை முதல் சிருஷ்டி பிரவேசாந்த பரியந்தம் ஈசுர கிருத்தியஞ் சாக்கிர சொப்பன சுழுத்தி மூத்தி பரியந்தமுள்ள சம்சார மெல்லாம் ஜீவகிருத்தியமென் றுத்தரம்.

(௪௨) கூடதஸ்தருக்குக் கிருத்தியமேதென்கிற சங்கைக்கு:—

அவர் அசங்கரேயல்லாமல் அவரிடத்தில் ஒரு கிருத்தியமுமில்லையென் றுத்தரம்.

(௪௩) இப்படிப் பகுத்தறிந்தவ னெப்படி யிருப்பா னென்கிற சங்கைக்கு:—

பெத்தன், முத்தன், பெந்தமோக்ஷம், உற்பத்தி, நாசஞ் சகலமுமாயாகற்பிதமேயல்லாமற்றனக்குச்சுபாவமாக வொன்று மில்லையென்று கலக்கமறத் தெளிந்திருப்பனென் றுத்தரம்.

(சச) இப்படி யொன்று மில்லாவிட்டாற் சீவேசுரர் ஜகத்துமரியாதை யெல்லாம் வேதத்திற் சொல்லி யிருப்பானே னென்கிற சங்கைக்கு:—

அதி சூக்ஷமமா யிருக்கின்ற ஆத்மாவைக் காட்டும்பொருட்டுத் தூலாருந்ததி நியாயமாகச் சொல்லுகிறதென் றுத்தரம்.

(சரு) இப்படி யறிந்த விவேகி பிராரத்தத் தோற்றரவையெப்படிக் காண்ப னென்கிற சங்கைக்கு:—

சாஸ்திர மறியாதவன் கலங்குகின்றாற்போலக் கலங்காமல், மாயையாகிற மேகம் பிரபஞ்சமாகிற மழையை வேண்டியபடி பெய்தாலுஞ் சிதாகாசமா யிருக்கிற நமக்கு ஹானியேது, லாபமேதென்று கவலைகெட் டிருப்பனென் றுத்தரம்.

இந்தக்கூடஸ்த தீபிகையை நித்தியம் அநுசந்தானம் பண்ணினவன்றானே கூடஸ்தரூபமாய் விளங்குவன் என்பது திண்ணம்.

மூன்றவது கூடஸ்ததீபம்-முற்றிற்று.

ஆகச்சங்கை - சரு.

சிவமயம்.

நான்காவது.

தியானதீபம்.

(௧) சாதன சதுஷ்டயமுள்ள அதிகாரிக்குச் சிரவணமுதலான அநுஷ்டானக்ஞானத்தினலே வருகிற வாக்கியார்த்தக் ஞானத்தையுஞ், சீவன்முத்தி நிலையையுங், கீழ்க்கிரந்தத்திலே சொல்லிப் பிரக்ஞாமந்தமுதலான பிரதிபந்தங்களினற் கெதஞ்சொன்ன நிலைதிடப்படாதபேருக்கு மோக்ஷார்த்தமாய்ச் செய்யவேண்டிய அநுஷ்டானமேதென்கிற சங்கைக்கு:—

பிரமோபாசனையே பண்ணவேண்டியது சகுணோபாசனைபோல இதற்குக்கிரியையுண்டோ வென்னில், இந்தத்தியான தீபிகையிலே சொன்னபடி, பிரமத்தைத் தியானம்பண்ணுகிறதேயல்லாமல் வேறொரு கிரியையுமில்லையென் றுத்தரம்.

(௨) இதற்குப் பிரமாணமேதென்கிற சங்கைக்கு:—

தாபநீயமென்கிற வுபநிஷத்தே பிரமாணமென் றுத்தரம்.

(௩) தானயிருக்கிற வஸ்துவை அன்னியமாயிருக்கிற வஸ்துவைப்போல வுபாசிக்கக்கூடாதென்கிற சங்கைக்கு:—

சம்வாதிப் பிரமைபோலக் கண்டுங் காணம விருந்தபடியினல் உபாசனை கூடுமென் றுத்தரம்.

(௪) சம்வாதிப் பிரமையாவதேது, விசம்வாதிப் பிரமையாவதேதென்கிற சங்கைக்கு:—

மணிப்பிரபையைக்கண்டு மணியென்று நாடுதல் சம்வாதிப்பிரமை, தீபப்பிரபையைக்கண்டு மணியென்று நாடுதல் விசம்வாதிப்பிரமை யென் றுத்தரம்.

(ரு) பிராந்தியாய் நாடினவனுக்குப் பலன்கொடாதென்கிற சங்கைக்கு:—

விசம்வாதிப்பிரமை பலன்கொடாது, சம்வாதிப்பிரமை நாடின பொருளைக்கொடுக்கும். ஆகையினூற், பிரமோபாசனையுஞ் சம்வாதிப்பிரமைபோல முத்தியாகிறபலன் கொடுக்குமென் றுத்தரம்.

(சா) இந்தப் பிரமத்துவ வுபாசனைக்கு அதிகாரி யாரென்கிற சங்கைக்கு:—

பரோக்ஷக்ஞானியே அதிகாரி யென் றுத்தரம்.

(எ) உபாசனை பண்ணுகிற கிரமமெப்படி யென்கிற சங்கைக்கு:—

அகண்டாகாச போதமே தானென்கிறதே கிரமமென் றுத்தரம்.

(அ) இந்த வுபாசனைக்குத் திருஷ்டாந்த மேதென்கிற சங்கைக்கு:—

கண்ணைக் காது விட்டாலுஞ் சாஸ்திரஞ் சொன்னபடி பாவிக்கின்ற மூர்த்தித் தியானமே திருஷ்டாந்த மென் றுத்தரம்.

(கூ) பரோக்ஷக் ஞானத்திற்கு லக்ஷண மேதென்கிற சங்கைக்கு:—

பிரமம் தானென் றறியாமற் பிரமமொன் றுண்டென்று நிச்சயித்ததே பரோக்ஷக் ஞானமென் றுத்தரம்.

(கo) பரோக்ஷக் ஞானஞ் சந்தேகமானபடியினாற் பலனெப்படிக்கொடுக்குமென்கிற சங்கைக்கு:—

மூர்த்தித்தியான வுபாசனைபோலப் பரோக்ஷக் ஞானத்திலே ஒருவருக்குஞ் சந்தேகமில்லை. ஆகையால், சம்வாதிப் பிரமைபோலப் பலன் கொடுக்கு மென் றுத்தரம்.

(கக) பிரமத்தைத் தானாகச்சொல்லுகிற வேதாந்தத்தைப் படித்தும், இவனுக் கந்தஞானம் பரோக்ஷமாகக் காரண மேதென்கிற சங்கைக்கு:—

தேகமேதானென்கிற விபரீதபாவனை, பிரமத்தைத் தானாகத் தோற்ற வொட்டா தென் றுத்தரம்.

(கஉ) பரோக்ஷமா யிருக்கிற அத்வைத புத்தியைப் பிரத்தியக்ஷமா யிருக்கிற த்வைதபுத்தி, என்கெடா தென்கிற சங்கைக்கு:—

பிரத்தியக்ஷமாயிருக்கிற சிலாபுத்தி, பரோக்ஷமாயிருக்கிற ஈசுர புத்தியைத் தள்ளாததுபோலப் பிரத்தியக்ஷ மாயிருக்கிற த்வைதபுத்தியும், பரோக்ஷமாயிருக்கிற அத்வைதபுத்தியைக் கெடுக்க மாட்டாதென் றுத்தரம்.

(கங) சிரத்தையில்லாதவனுக்குச் சிலையிலே ஈசுரபுத்திவரக்காணே மென்கிற சங்கைக்கு:—

சிரத்தையுள்ளவனே யதிகாரி யல்லாமற் சிரத்தையில்லாதவனைச் சாஸ்திரத்தி லெடுத்துக்காட்டத் தேவையில்லை யென் றுத்தரம்.

(கச) வேதாந்தம் படித்தாலல்லாமற் பரோக்ஷக் ஞானம் வாராதோ வென்கிற சங்கைக்கு:—

மூர்த்தி யுபதேசம்போலப் பிரமத்தை யுபதேசம் பண்ணிக் கொண் டறியலாமென் றுத்தரம்.

(கசு) சாஸ்திர விசாரம் பண்ணுமற் பிரமத்தையுபதேசமாகக் கேட்டறிகிற தெப்படியென்கிற சங்கைக்கு:—

கர்மசூத்திரத்தைப் படியாமற் கர்மாநுஷ்டானஞ் சித்தித்தாற் போலவும், ஆகமபுராணம் படியாமல் உபாசனை யநுஷ்டிக்கிறுற்போலவும், சாஸ்திரவிசாரம் பண்ணச் சத்தியில்லாதவன், மஹாத்மாக்களிடத்திலே பிரமம் இன்னபடி யிருக்குமென்கிறதைக் கேட்டுக் கொண் டுபாசிக்கலாமென் றுத்தரம்.

(கரு) சாக்ஷாத்காரம் உபதேசங்கொண்டுவாராதோ வென்கிற சங்கைக்கு:—

சாஸ்திர விசாரமில்லாதவனுக்குச் சாக்ஷாத்காரம் வாராதென் றுத்தரம்.

(கஎ) பரோக்ஷக் ஞானத்திற்குப் பிரதிபந்த மேதென்கிற சங்கைக்கு:—

சிரத்தையில்லாததே பரோக்ஷக் ஞானத்திற்குப் பிரதிபந்தமென் றுத்தரம்.

(கஅ) அபரோக்ஷக் ஞானத்திற்குப் பிரதிபந்தமேதென்கிற சங்கைக்கு:—

விசாரமில்லாத தோஷமே அபரோக்ஷக் ஞானத்திற்குப் பிரதிபந்த மென் றுத்தரம்.

(கக) சாஸ்திரவிசாரம் பண்ணிஞலுஞ் சிலர்க்குச் சாக்ஷாத்காரம் ஏன் வரவில்லை யென்கிற சங்கைக்கு:—

விபரீதபாவனையினுலே சாஸ்திரம் படித்தும், சாக்ஷாத்காரம் வாராமலிருக்கு மென் றுத்தரம்.

(உ0) சாஸ்திரம் படித்தும், சாக்ஷாத்காரம் வாராதவனுக்குச் செய்காரிய மேதென்கிற சங்கைக்கு:—

விசாரபலமான சாக்ஷாத்காரம் வருமளவுஞ் சாஸ்திரத்தைத் திரும்பத் திரும்ப விசாரிக்கப் பயிர் செயல்வகையினுற் கெர்ப்ப நாளிலே பரிபக்குவமாகிறூற்போல ஞானமுந் தீர்க்க காலவிசாரத்தினுல் வருமென் றுத்தரம்.

(உக) மரணபரியந்தம் விசாரம்பண்ணின வாமதேவர், சடபரதர் இவர்களிருவருக்கும் அந்த ஜன்மத்திலே என் ஞான முதயமாகவில்லை யென்கிற சங்கைக்கு:—

பிரதிபந்தத்தினு லென் றுத்தரம்.

(உஉ) பிரதி பந்தமாவதேது, அஃதெத்தனைவிதமா யிருக்குமென்கிற சங்கைக்கு:—

பூதப்பிரதிபந்தம், பௌஷியப்பிரதிபந்தம், வர்த்தமானப் பிரதிபந்தம் என்று திரிவிதமாகவிருக்கும்; இதிற்பூதப்பிரதிபந்தம், கைவிட்ட எருமையிற்பற்றுஞ் சந்நியாசியாரிடத்திற் கண்டகதை *பௌஷியப்பிரதிபந்தமாவது, சங்கற்பத்துடனே கூடியிருந்து, வேதாந்த விசாரம்பண்ணின வாமதேவருக்கொரு ஜனனமும், சடபரதருக்கு மூன்று ஜனனமாகவும் காணப்பட்டது. வர்த்தமானப் பிரதிபந்தமாவது, விஷயாசக்தி, பிரக்ஞாமந்தம், குதர்க்கம், விபரீத பாவனை, துராக்ரகக்தை யென் றுத்தரம்.

(உங) இந்தப் பிரதிபந்தத்தைத் தள்ளுமுபாய மேதென்கிற சங்கைக்கு:—

---

* பௌஷியப் பிரதி பந்தம் என்கிறது - சென்மாந்திர வேதுவான பிராரத்தசேஷம் - இஃதை வாமதேவர், சடபரதரிடத்திற் காண்க.

பூதப்பிரதிபந்தம் அவனவன் புத்தியையநுசரித்துப் போதிக்கத்தீரும், பௌஷியப்பிரதிபந்தம் ஜெனனமெடுத்துத் தீரும், வர்த்தமானபிரதிபந்தத்திற்கு, விஷயாசக்தி சாதனசதுஷ்டயத்தினாற் றீரும் பிரக்ஞாமந்தம் பலகாலுஞ் சிரவணம்பண்ணத்தீரும். குதர்க்கம் மனனத்தினாற் றீரும். விபரீத பாவனை நிதித்தியாசனத்தினாற் றீரும். துராக்ராகந்தை சமாதியினாற் றீருமென் றுத்தரம்.

(உச) வேதாந்த விசாரம்பண்ணியும் பௌஷியப் பிரதிபந்தத்தினாற் செனனம்வருமென்றால், விசாரக்ஞானமும் வியர்த்தமாமோ பிரதிபந்தத்தினாற் செனனம் வருமென்கிறதற்குப் பிரமாண மேதென்கிற சங்கைக்கு:—

விசாரத்தினாற் பிறந்த ஞானம், பிரதிபந்தந் தொலைந்தவுடனே மோக்ஷத்தைக் கொடுக்கையினாற் சாஸ்திரவிசாரம் ஒருக்காலும் பாழாய்ப்போகாது, யோகப் பிரஷ்டனும் இரண்டொரு சென்மத்திலே கிருதார்த்த னவானென்கிற கீதாவசனம் பிரமாண மென் றுத்தரம்.

(உரு) பிரதிபந்தந் தீரத்தக்கதாக வுபாசிக்கச்சொன்னது சகுணமோ நிர்க்குணமோ வென்கிற சங்கைக்கு:—

நிர்க்குணமென் றுத்தரம்.

(உசா) சகுணமானால் உபாசிக்கலாம் நிர்க்குணத்தை யெப்படித் தியானம் பண்ணலாமென்கிற சங்கைக்கு:—

கேட்டவண்ணந் தியானிக்கின்றது இருவகைக்குஞ் சரியென் றுத்தரம்.

(உஎ) வாக்குக்கும் மனதுக்கு யெட்டாத நிர்க்குணத்தை யெப்படித் தியானம்பண்ணலா மென்கிற சங்கைக்கு:—

வாக்குக்கும் மனதுக்கு மெட்டினதைக் கேட்டுச் சாக்ஷாத்காரம்பண்ணுகிறாற்போல, இதுவுங் கேட்டுச் சிந்திக்கலாமென் றுத்தரம்.

(உஅ) யாதொன் றன்னியமா யுபாசிக்கப்பட்டதோ, அதுவெல் லாம் பிரமமல்ல, பிரமந் தானேயென் றறியவேண்டுமென்று ஒரு வேதஞ் சொன்னபடியினுற் பிரமோபாசனை நிஷித்த மென்கிற சங் கைக்கு:—

அறியப்பட்டதற்கும் அறியப்படாததற்கும், அன்னியமாயிருக் கும் பிரமமென்று ஒரு வேதத்திலே ஞானத்தை நிஷேதிக்கிறதென் றுத்தரம்.

(உகூ) பிரமோ பாசனையிலே யுமக்கித்தனை பத்தி ஏதென்கிற சங்கைக்கு:—

உனக்குத்தா னித்தனை துவேஷ மேதென் றுத்தரம்.

(௩0) நிர்க்குணத்தை யுபாசிக்கின்றதற்குப் பிரமாணமேதுவிதி யேதென்கிற சங்கைக்கு:—

தாபநீயம், சயிப்பியம், காடகம், மாண்டூக்கியம் என்கிற உபநிஷத்து நாலும் பிரமாணம் பஞ்சீகரண மஹாவாக்கியமே அநு ஷ்டானவிதி யென் றுத்தரம்.

(௩க) பஞ்சீகரணம் ஞானசாதனமல்லவோ எல்லாரும் அநுஷ் டிக்கவில்லையே யென்கிற சங்கைக்கு:—

ஞானசாதனமென்கிறது நமக்குஞ் சம்மதம் அநுஷ்டியாதவன் றுனே கெட்டான். அதனுலே பிரமோபாசனைக்குத் தூஷணமில்லை யென் றுத்தரம்.

(௩உ) எல்லாரு மநுஷ்டியாத வுபாசனையை நீரேன் சொல்ல வந்தீ ரென்கிற சங்கைக்கு:—

ஒருவகைமூடன் இதனிலும் அதிகமென்று வசியமந்திரத்தை செபிக்கக்கடவன். இதனிலும், அதிமூடன் கிருஷியாதியை பண்

ணக்கடவன். அந்தமூடரைக்குறித்துச் சொல்லவில்லை முமூக்ஷுக்களின் பொருட்டு நிர்க்குண வுபாசனை சொன்னேமென் றுத்தரம்.

(௩௩) இப்படி யுபாசிக்கப்படுகிறது நிர்க்குணமானால் இந்தவஸ்துவிற்கு ஆநந்தாதிகுணங்களும், அதூலாதிகுணங்களு முண்டென்னக் கூடா தென்கிற சங்கைக்கு:—

சுருதிசம்மதமாக இந்தலக்ஷணசூத்திரஞ் சொன்னவியாசரைக் கேளென் றுத்தரம்.

(௩௪) சச்சிதாநந்தமே நானென்கிறது உபாசனையானால் ஞானத்திற்குஞ், தியானத்திற்கும் பேத மேதென்கிற சங்கைக்கு:—

வஸ்துதந்திரம் ஞானமென்றுங் கர்த்ததந்திரம் உபாசனையென்றும் பேதமென் றுத்தரம்.

(௩௫) வஸ்துதந்திரமாயிருக்கிற ஞான மெதனால் வருமென்கிற சங்கைக்கு:—

அக்கினியை அக்கினியென்கிறாற் போலச் சுபாவஞ் சொல்லுகிறது வஸ்துதந்திரக்ஞானம் விசாரத்தினால் வருமென் றுத்தரம்.

(௩௬) இந்த ஞானம் வந்தால் ஏது செய்யு மென்கிற சங்கைக்கு:—

சகல சம்சாரத்தையுஞ் சுடுமென் றுத்தரம்.

(௩௭) அந்த ஞானத்தை மறந்தால் ஹானியேதென்கிற சங்கைக்கு:—

மறந்தாலுஞ் சம்சாரத்தைக் கொடா தென் றுத்தரம்.

(௩அ) அந்த ஞானமுள்ளவன் எப்படி யிருப்பா னென்கிற சங்கைக்கு:—

சீவன் முத்தனாய்த் திருப்தியடைந்து, பிராரத்த க்ஷயத்தைப் பார்த்திருப்ப னென் றுத்தரம்.

(௩௯) கர்த்ததந்திரமென்கிற வுபாசனை எதனால் வருமென்கிற சங்கைக்கு:—

உபசாரமாக ஸ்திரீயை அக்கினியென்கிறது போலக் கர்த்த தந்திரமாயிருக்கிற வுபாசனை குருபதேசத்தினால் வருமென் றுத்தரம்.

(௪0) அந்தவுபாசனை வந்தா லென்னசெய்யுமென்கிற சங்கைக்கு:—

தியானித்தபோது நாம் பிரமமாவோமென்கிற புத்தியைக் கொடுக்குமென் றுத்தரம்.

(௪௧) அந்த வுபாசனையை மறந்தா லென்னசெய்யு மென்கிற சங்கைக்கு:—

விக்ஷேபத்தின் கையிலே காட்டிக் கொடுக்குமென் றுத்தரம்.

(௪௨) அந்த வுபாசனாக்ஞானமுள்ளவ னெப்படியிருக்கவேண்டுமென்கிற சங்கைக்கு:—

நித்திரை வருமளவும், மரணம்வருமளவுந் தியானம் விடாமற் பண்ணிக்கொண்டிருக்க வேண்டுமென் றுத்தரம்.

(௪௩) இந்த வுபாசனை முதிர்ந்ததற்குப் பிரத்தியக்ஷ மேதென்கிற சங்கைக்கு:—

பிக்ஷையெடுக்கிறவன் சொப்பனத்திலும் பிக்ஷையெடுக்கக் காண்கிறாற்போலவும்,வேதமோதுகிறவன் வேதமோதக் காண்கிறாற்போ

லவும், இந்தவுபாசகன் தினந்தோறுஞ் சொப்பனத்திலுந் தியானம் பண்ணக் கண்டானுனல், உபாசனைக்கு முடிவென் றுத்தரம்.

(சச) ஞானப் வஸ்துதந்திரமென்கிறதில் யுத்தி யேதென்கிற சங்கைக்கு:—

கூடஸ்த சைதன்னியத்தை வேதஞ்சொன்னபடி யிருக்கிறதோ இல்லையோவென்று லக்ஷணவிருத்தியினுலே, ஒரு பிரகாரம் சோதித்துப் பார்த்துக்கொள்ளுகிறதே யல்லாமற் றுன்வேண்டியபடி சிந்திக்கப்படாததே யுத்தி யென் றுத்தரம்.

(சரு) தியானங் கர்த்ததந்திரமென்கிறதில் யுத்தி யேதென்கிற சங்கைக்கு:—

தான்வேண்டியபடி தியானிக்க, தியானிக்காமலிருக்க மாறுபாடாய்த் தியானிக்கப்படுகிறதே யுத்தி. ஆகையினுல், எந்நேரமுந் தியானஞ் சாவதானமாகப் பண்ணவேண்டு மென் றுத்தரம்.

(சசூ) எந்நேரமுந் தியானத்திலே மனதா யிருக்கிறவனுக்குச் செய்காரிய மெப்படி நடக்குமென்கிற சங்கைக்கு:—

பரபுருஷனையடைகிற பெண் எந்நேரமும் அவனிடத்திலே ஆரூடமனதாக விருந்தாலும், மேலெழுந்தவிதமாய்ச் செய்காரியஞ் செய்தொப்புவிக்கிறுற்போலச் செய்வனென் றுத்தரம்.

(சஎ) சாக்ஷாத்கார ஞானிக்குச் செய்காரிய மெப்படி நடக்குமென்கிற சங்கைக்கு:—

கூத்தாடி பாசாங்குபண்ணுவதுபோல சீவன்முத்தனுஞ் செய்காரியம் ஒன்றுந்தப்பாமற் செய்வனென் றுத்தரம்.

(சஅ) உபாசனை லோகவிவகாரத்திற்கு விரோதமென்கிறதெதனுலென்கிற சங்கைக்கு:—

மனதிலே தியானமுந் தேகேந்திரியாதிகளிலே செய்தொழிலு மாக விருக்கிறபடியினாலே விவகாரம் விரோதமென் றுத்தரம்.

(சுக) ஞானத்திற்கு விவகார விரோதமில்லையென்கிற தெதனாலென்கிற சங்கைக்கு:—

ஆத்மாமாத்திரஞ் சின்மாத்திரம் மற்றுள்ள வெல்லாம், மாயாமயமென்கிற ஞானத்திற்கு விவகாரசாதனமான திரிவிதகரணத்தில் ஒன்றும் வேண்டாதபடியினால் விவகார விரோதமில்லை யென் றுத்தரம்.

(ருO) சாக்ஷாத்காரம் உள்ளவனுக்கு லக்ஷணமேதென்கிற சங்கைக்கு:—

கடத்தைப் பார்க்கிறவன் புத்தியைத் தண்டியாததுபோல தத்துவம் உள்ளபடி கண்டு களித்துக் கவலை கெட்டிருப்ப னென் றுத்தரம்.

(ருக) தியாணம் பண்ணுகிறவனுக்கு லக்ஷணமேதென்கிற சங்கைக்கு:—

பிரபஞ்சத்தை நினைத்தாற் றியானங் கலைந்து கெட்டுப்போமென்கிற விவேகத்துடனே புத்தியை மறுத்துத் தண்டித்துக்கொண்டிருப்ப னென் றுத்தரம்.

(ருஉ) ஒருக்கா லறியப்பட்டகடத்தை வேண்டிய போதறிகிறதற்குஞ், சிந்திக்கிறதற்கும், இப்படியிருக்கு மென்று சொல்லுகைக்கும், யத்தனமில்லையே, இப்படிக்கூடுமோ பிரமக்ஞானிக் கென்கிற சங்கைக்கு:—

அப்பிரகாசமாயிருக்கிற கடமே ஒருக்காற் கண்டது உடனேயிப்படித் தெரிந்தாற் சுயம்பிரகாச சைதன்னியத் திற்குக் கேட்கவேண்டுமோவென் றுத்தரம்.

(ருங) நான்பிரமமென்கிற விருத்திக்ஞானம், க்ஷணப்போதிலே நஷ்டமாய்ப்போ மென்கிற சங்கைக்கு:—

அது கடக்ஞானத்திலுஞ் சரியல்லவோவென் றுத்தரம்.

(ருச) இப்படித் தத்துவக்ஞானிக் கொருசிந்தனையு மில்லா விட்டால் எந்நேரமும் மனது வெளியிலே நாடுமென்கிற சங்கைக்கு:—

கற்பிதவஸ்துப் பிரவிர்த்தித்ததுகொண்டு ஹானி யேதென் றுத்தரம்.

(ருரு) இப்படியானால் உம்முடைய சித்தாந்தம் அவமரியாதையாமென்கிற சங்கைக்கு:—

விதிநிஷேத சாஸ்திரமரியாதை தத்துவக் ஞானியின்பொருட் டுச்சொன்ன தல்லவென் றுத்தரம்.

(ருசா) விதி நிஷேத சாஸ்திரம் ஆரைக்குறித் துண்டாயிற்றென் கிற சங்கைக்கு:—

வர்ணாச்சிரமம் வயதவஸ்தை யென்கிற அபிமானியின்பொருட் டுண்டாயிற் றென் றுத்தரம்.

(ருஎ) ஞானிக்கு வர்ணாச்சிரமாதிகள் தேவையில்லையோ வென் கிற சங்கைக்கு:—

வர்ணாச்சிரமாதிகள் மாயாகற்பித வுபாதிமாத்திரத்திலேகண்ட தல்லாமல் ஆத்மாவினிடத்திலே யில்லை யென் றுத்தரம்.

(ருஅ) முன்னக் ஞானவஸ்தையி லநுசரித்தவிதிகள் மற்றோ ரவஸ்தையிற் கைவிட்டாற் றோஷமில்லையோ வென்கிறசங்கைக்கு:—

கர்மிகளுக்குப் பால்யாவஸ்தையில் விதிநிஷேதந் தேவையற்றதுபோல ஞானவஸ்தைக்குந் தேவையில்லையென் றுத்தரம்.

(ருகூ) குழந்தைஒன்றுமறியாத அஞ்ஞானியல்லவோ ஞானியும் அப்படித்தானே யென்கிற சங்கைக்கு:—

ஒன்று மறியாதவனுக்கும் எல்லாமறிந்து சர்வேஸ்வரனையிருக்கிற ஞானிக்கும் விதி நிஷேத பேதந் தேவையில்லையென் றுத்தரம்.

(சூ0) அல்லது யாருக்கு விதி நிஷேத பேதமென்கிற சங்கைக்கு:—

சொற்பமறிந்தும் அறியாமலுமாகவிருக்கிற நடுநாடனுக்கென் றுத்தரம்.

(சூக) ஞானியாயிருக்கிறவன் ஜெகதீசுரனைப்போற் சாபாநுக்கிரகம் பண்ணவேண்டு மென்கிற சங்கைக்கு:—

சாபாநுக்கிரக சாமர்த்தியந் தபோபலமே யல்லாமல், ஞானபலமல்ல வென் றுத்தரம்.

(சூஉ) தபோமூலமாகப் பிரமத்தை யறியவேண்டுமென்றுதைத்திரிய வுபநிஷத்திலே சொன்னபடியினாற் றபோபலமல்லவோஞானமென்கிற சங்கைக்கு:—

ஞானகாரணமான தபசு சாபாநுக்கிரகத்திற்குக் காரணமல்ல வென் றுத்தரம்.

(சூரு) பூர்வாசாரிகளா யிருக்கிற வியாசர் முதலானபேருக்கு இருவகையுங் காணப்பட்டிருக்கிறதே, அப்படியிருக்க வேண்டாமோ ஞானமுள்ளபேர்களுக் கெல்லாமென்கிற சங்கைக்கு:—

மந்திரவாத சித்தியும் ஞானமும் ஒருவரிடத்திலே யிருக்கக் கண்டாற்போலவும், சோதிரிஷமும் ஞானமும் ஒருவரிடத்திலே யிருக்கக்கண்டாற்போலவும், ரசவாதமும் ஞானமும் ஒருவரிடத்திலே யிருக்கக்கண்டாற் போலவும், சாபாநுக்கிரக சாமர்த்தியமும் ஞானமும் வியாசாதிகளிடத்திலே காணப்பட்டன இந்தச் சபாநுக்கிரக சாமர்த்திய மெல்லாம் ஞானமல்ல, ஞானமாத்திரம் அப்பியாசித்தவனிடத்திலே சீவன் முத்தி யநுபவமாத்திர மிருக்குமென் றுத்தரம்.

(கூச) சாபாநுக்கிரக சாமர்த்திய மில்லா திருந்தால் இவனென்ன ஞானியென் றெல்லாரும் நிந்திப்பார்களென்கிற சங்கைக்கு:—

விதிநிஷேத சாஸ்திரத்தைக் கைவிட்ட சந்நியாசிகளை யெல்லாரும் பூஜிக்கின்றதே யல்லாமல் நிந்திக்கக் காணோமென் றுத்தரம்.

(கூரு) போகலம்படராயிருக்கிற அார்த்தர்களெல்லாம் நிந்திக்கிறார்களென்கிற சங்கைக்கு:—

இந்தப் பிரகாரத்தில் வர்ணாச்சிரமமுடையபேர்கள் தேகாபிமானிகள் ஞானியை நிந்திக்கட்டும். மாடுகள், புலிகள், ஞானியைப் பாயட்டும், அதனாலே ஞானிக்கு ஹானியேது. ஆனபடியினாலே, இப்படி வேண்டியவண்ண மிருக்கலாமென்கிற படியினாலே ஞானிக்கு இராச்சியபாரம் பண்ண இச்சையுண்டாயினும் பண்ணலாமென் றுத்தரம்.

(கூகூ) மாயாகற்பிதமாயிருக்கிற சகத்து மித்தையென்கிற புத்தி வந்தபின் இராச்சியபாரம்பண்ண இச்சைவந்தால் ஞானம் அப்பிரயோசனமாமென்கிற சங்கைக்கு:—

மித்தியாபுத்தியினா லாசையற்றுப்போனால் கர்மம், உபாசனை தியானம், இராச்சியம், பிராரத்தமுள்ளபடி பண்ணிவருவன் ஞானியென் றுத்தரம்.

(சுஎ) தியானிக்கு மிப்படி வேண்டியவண்ண மிருக்கலாகா தோவென்கிற சங்கைக்கு:—

மூர்த்தித் தியானம்போல தியானத்தினல் நான் பிரமமென் கிற நிலை தியானம்விட்டா லில்லாமற் போகிறபடியினுல் நிரந்தரஞ் சாவதானமாய்த் தியானம் பண்ணிக்கொண்டிருக்கவேண்டும். ஞானி யைப்போல வேண்டியவண்ண மிருக்கக்கூடாதென் றுத்தரம்.

(சுஅ) ஞானிக்கு ஞானத்தை மறந்திருக்கிறவேளையிலே பிரம த்துவமில்லாமை சரியல்லவோ வென்கிற சங்கைக்கு:—

பிராணனுக்கு நான் பிராமண னென்கிறது நினையாவிட்டா லுஞ் சுபாவசித்தமா யிருக்கிறுற்போல லக்ஷண விருத்தியினலே ஆத்மாவைச் சோதித்திருக்கிற ஞானிக்கு நான் பிரமமென்கிறது மறந்திருந்தாலுஞ் சுபாவசித்தமே யல்லாமல் தியானம் பண்ணுகிற வனைப்போல மறந்து கெட்டோமென்கிற பீதியில்லையென் றுத் தரம்.

(சுகூ) இந்தப்பிரகாரத்திற்கு உபாசகனுக்கும் நான்பிரமமென் கிறது மறந்திருந்தாலுஞ் சுபாவசித்தமாயிருக்கிற பிரமத்துவமுண் டோ இல்லையோ வென்கிற சங்கைக்கு:—

இந்த வுபாசகன்மாத்திரமல்ல, பாமரர் மிருகங்கள் முதலான வைகளுக் கெல்லாம் பிரமத்துவஞ் சுபாவசித்தந்தானே யென் றுத் தரம்.

(எ0) பாமரர்,மிருகங்கண் முதலான வைகளுக்கும் நான் பிரம் மென்கிற அறிவில்லாதபடியினலே சுபாவசித்தமா யிருக்கிற பிரமத் துவத்தினுற் பிரயோசனமேதென்கிற சங்கைக்கு:—

அப்படி யறிவில்லாதது இந்த வுபாசகனுக்குஞ் சரியானபடியி னுல் சுபாவசித்தப் பிரமத்துவத்தினுற் பிரயோசன மற்றுப்போனது இவனுக்குஞ் சரியென் றுத்தரம்.

(எக) ஆனால் பிரமத்தியானமும் இப்படிப் பிரயோசனமற்ற தோவென்கிற சங்கைக்கு:—

பட்டினியே கிடக்கிறவன் பிக்ஷை புகுந்தாகிலும் புசிக்கின்றது தாழ்வில்லையென்றாற்போல விருதா வியாபாரத்திலேகிடந்து விக்ஷேபப்படுகிறதிலும் பிரமத்தியான மதிகமென் றுத்தரம்.

(எஉ) எந்தெந்தச் சாதனங்களிற் பிரமத்தியானம் அதிகமென் கிற சங்கைக்கு:—

பாமர வியாபாரத்திலுங் கர்மாநுஷ்டான மதிகம். அதனிலுஞ், சகுணோபாசனை யதிகம். அதனிலும், நிர்க்குணத்தியானமதிகமென் றுத்தரம்.

(எங) இவைகளெல்லாம் ஒன்றுக்கொன்று தாரதன்மியமாயிருப்பானேனென்கிற சங்கைக்கு:—

இராஜாவைக் கிட்டக் கிட்ட பௌஷதிகமும் பிரயாசங் கொஞ்சமு மாகிறாற்போல, பிரமத்தைக் கிட்டக் கிட்ட ஆதிக்க மதிகமென் றுத்தரம்.

(எச) பிரமத்தியானத்திற்குமேல் ஞானக்கிரமம் எப்படி யடையப்படு மென்கிற சங்கைக்கு:—

சம்வாதிப்பிராந்தி முடிந்தவிடத்திலே ரத்தினத்தைக்கொடுக்கிறாற்போல, நிர்க்குணத்தியான முதிர்ந்தவிடத்திற் பிரமக்ஞான சமாதியாகிறதேயல்லாமல் வேறு சாதனமில்லை. ஆகையால், அறிந்தவர்கள் அறியாதவர்களெல்லாருக்குங் குறுக்குவழியாக மோக்ஷத்தைக்கொடுக்கையினால்நிர்க்குணத்தியானத்தைச் சொல்லவந்தோம்சித்த நிரோதமே சமாதியென்றும், அதுவே சாத்தியமென்றும் அமுதவிந்துபநிஷத்துச் சொல்லுகிறதென் றுத்தரம்.

(எரு) இது ஒன்று மறியாதவனுக்குத் தியானத்தின லெப்படிச்சித்திக்குமென்கிற சங்கைக்கு:—

தியானமாத்திரங்கொண்டு நான் பிரமமென்கிற புத்திதிடப்பட்டவுடனெ நிர்விகாரத்தினுடைய லக்ஷணமும் புத்தியி லெளிதாயேறும், இது காரியத்தினற் சமாதியென்று சொல்லப்படும். ஆகையினல், சகல சாதனங்களிலும் பிரமத்தியான மதிகமென் றுத்தரம்.

(எசா) இப்படி மூர்த்தித்தியான தீர்த்தாடன ஜெபங்களும் மோக்ஷ சாதனங்க ளாகாதோவென்கிற சங்கைக்கு:—

பிரமத்தியானத்தை யுபேக்ஷித்து மூர்த்தித்தியான தீர்த்தாடன ஜெபங்களைச் செய்கிறது உள்ளங்கையி லிருக்கிறபாத்திரஜையை யெறிந்துப் போட்டு எட்டப்படாத முழங்கையை நக்குகிறதற்குச் சரியாகையால் பிரமத்தியானத்திற்குச் சரியான சாதனம் ஒன்றுமில்லையென் றுத்தரம்.

(எஎ) இந்தக்கிரமம் சாக்ஷாத்கார விசாரத்தைவிட்டுத் தியானம்பண்ணுகிறவனுக்குஞ் சரியல்லவோ வென்கிற சங்கைக்கு:—

நீ சொன்னது உண்மைதானே இந்தப்படி ☩ யோகமானது ‡ சாக்ஷாத்கார விசாராநுசந்தானம் பண்ணமாட்டாதவனுக்குவிதியென் றுத்தரம்.

(எஅ) சாக்ஷாத்காரவிசாரம்போல யோகஞ் சாக்ஷாத்காரத்திற்கு நெருங்கின பூமி யென்கிற தெதனலென்கிற சங்கைக்கு:—

யோகத்தினல் விக்ஷேபமெல்லாந் துடைபட்டுச் சித்தநிரோதம் வரும். அந்தச் சித்தத்திலே சாக்ஷாத்கார விசாரம்எளிதாக ஏறும். ஆகையினல், யோகம் முக்கியமென் றுத்தரம்.

☩ யோகம்—என்றது உபாசனை.

‡ சாக்ஷாத்காரம்—என்றது அபரோட்சக்ஞானம்.

(எகூ) இப்படியானால், சாங்கியத்திற்கும் யோகத்திற்கும் விரோதமேதென்கிற சங்கைக்கு:—

சிதாபாசனையும், ஆத்மாவையும் பருத்துக் ⁙ காண்கிறதும் ஒருமையாய்க் ‡ காண்கிறதுமே விரோதமென் றுத்தரம்.

இவை மூலசுலோகப்படி இரண்டாஞ்
சமாதானம்.

யோகம் சாங்கியம் என்னும் இரண்டும் தத்துவ ஞானவாயிலாக மோட்சத்திற்குச் சாதனமாமென்பதில் பிராமாணமேதென்னுஞ் சங்கைக்கு:—

சாங்கியர்களாலியாதொருபதம் அடையப்படுகிறதோ அந்தப் பதமே யோகிகளாலும் அடையப்படுகிறது. இப்படியாதொரு புருஷன் சாங்கியயோகங்கள் இரண்டிற்கும் பலன் ஒன்றென்று பார்க்கிறானோ அவன் சாஸ்திரார்த்தத்தை நன்றாகப் பார்த்தவனாமென்னும் கீதாவாக்கியமும், சாங்கியமும், யோகமும், தத்துவஞானத்திற்குக்காரணமாமென்னுங் கீதைக்கு மூலசுருதியும், பிரமாணமாமென் றுத்தரம்.

சாங்கியயோக மிரண்டையும் தத்துவ ஞானவாயிலாக மோக்ஷ சாதனமாக ஒப்பினால் சாங்கியயோக சாஸ்திரங்களிற் சொல்லிய தத்துவங்களையும் அங்கீகரிக்கவேண்டுமே என்னுஞ் சங்கைக்கு:—

சாங்கியயோக சாஸ்திரங்களில் சுருதி விருத்தங்களான எவ்வித அம்சங்களுண்டோ அவை * ஆபாசங்களாதலால் அவை அங்கீகரிக்கத்தக்கன வல்லவென் றுத்தரம்.

⁙ துவிதமாகக் காண்கிறது.

‡ அத்துவிதமாகக் காண்கிறது.

* ஆபாசம்-என்றது வாதிக்கப்படுவது. அது கேவலம்-பிரகிருதியே சகத்திற்குக் காரணம். ஈசுரன் அல்ல-அந்தப்பிரகிருதிநித்தியம். ஆத்மாநானா. இவ்வளவம்சம் சாங்கிய சாஸ்திரத்தில் சுருதி விருத்தம்.

ஈசுரன்-தடஸ்தம் - பிரதானம்-நித்தியம்-சீவர்கள் - வாஸ்தவமநானா இவ்வளவம்சம் யோக சாஸ்திரத்தில் சுருதிவிருத்தம்.

(அ0) பிரமத்தியானத்தினாலே சாக்ஷாத்கார விசாரமல்லாமலும் மோக்ஷமுண்டென்கிறதற்கு யுத்தியேது, பிரமாணமேதென்கிற சங்கைக்கு:—

குளவியை நினைத்தபுழு குளவியாகிறாற்போல வென்கிறது யுத்தி, மரணகாலத்தில் எதைநினைத்தானோ தான் அதுவாய்ப்போவனென்கிற கீதா வசனம் பிரமாணமென் றுத்தரம்.

(அக) தியானந் திடப்பட்டல்லவோ சரீரபதனகாலத்தி லுதவவேண்டும் மத்தியிலே சரீரம்விழுந்தாற் கெதியேதென்கிற சங்கைக்கு:—

பிரமலோகத்திற் போய் பிரமாவிடத்திலுந் தத்துவ ஞானத்தை யடைந்து மோக்ஷத்தை யடைவனென்று தாபநீயோ வுபநிஷத்துச் சொல்லுகிறது. இதைத்தவிர மோக்ஷத்திற்கும் வழியில்லையென்று எசுர்வேதத்திற் சொல்லுகிறது. நாசிகேதுவிற்கும் இயமன் இதுவேவழியாகச் சொன்னார். சத்திய காமருக்கும் † பிப்பலாதர் இப்படியே சொன்னார். கிருஷ்ணனும் ஆத்மகீதையிலே பூமியிற்குள்ளேயிருக்கிற புதையலை யெடுக்கிறதற்கு வெட்டுகிறதேயல்லாமல் வேறுவழியில்லாததுபோலப் பிரமத்தையடைகிறதற்குத் தியானமேயல்லாமல் வேறு வழியில்லையென்றும் தேகமாகின்ற கல்லைப் புத்தியாகிற குந்தாலியாலே பொளிந்துதள்ளி நாம்பிரமமென்கிற தியானத்தினாற் பிரமமாகின்ற புதையலை யடையலாமென்றார். ஆகையாற் பிரமத் தியானத்திற்குச் சரியான சாதனமொன்று மில்லையென் றுத்தரம்.

(அஉ) சாக்ஷாத்கரித் தறியவேண்டிய பிரமத்தை யப்படியடையாமல் தியானத்தினாலெப்படி யடையலாமென்கிற சங்கைக்கு:—

---

† பிப்பலாதர்-என்றவர் ஒரு முனிவர்.

அநுபவமில்லாவிட்டாலும் அசத்தாயிருக்கிற வஸ்துவையுந் தியானத்தினுலடைய இருக்கையி லுற்றுவிசாரித்தாற் ருனுயுண்மைப்பொருளாயிருக்கிற பிரமம், நாம் பிரமமென்கிற தியானத்தினுலே அடையலாமோவென் றொருவரையுங் கேட்கத் தேவையில்லை. பூதமாயிருக்கிற காசியை யுபாசிக்கையினுற் ருரகப் பிரமஞ் சித்திக்கிருற்போலவும் சம்வாதிப் பிராந்தியிலே பிரவிர்த்திக்க, இரத்தினமகப்படுகிருற்போலவுந் தேகாபிமானத்தைத் தவிர்ந்துத் தியானத்தினுல் அத்துவிதமாயிருக்கின்ற ஆத்மாவே தானென்று தியானிக்கிறவன் இங்கேதானே மோக்ஷத்தை யடைவனென்று வேதஞ்சொல்லுகிறதென் றுத்தரம்.

இந்தத் தியானதீபிகையை அநுசந்தானம் பண்ணி வருகிறவன் பிரமத்தியானத்தை யடைந்து மோட்சத்தையடைவன்.

நான்காவது தியானதீபம் முற்றிற்று.

ஆகச்சங்கை-அ௨.

சிவமயம்.

ஐந்தாவது

நாடகதீபம்.

வித்தியாரண்ணிய ஸ்வாமிகள் வேதாந்தார்த்தம் விரிவிலே பார்க்கமாட்டாதவருக்கு ஆத்மஞானம் வருகிற வழியை நாடகதீபிகையிலே சங்கிரகித்துச் சொல்லும்படி.

(க) ஆத்மாவாவ தாரென்கிற சங்கைக்கு:—

மாயாசத்திக் காதாரமாயிருக்கின்ற அத்துவிதாநந்த சைதன்னியமே ஆத்மாவென் றுத்தரம்.

(உ) இவருக்குச் சிருஷ்டி யெதனல் வந்ததென்கிற சங்கைக்கு:—

நிர்விகார சைதன்னியமாயிருக்கிற இவர்க்குத்தம்முடையமாயாவுபாதியினல் வந்ததென் றுத்தரம்.

(ங) சீவனவ தாரென்கிற சங்கைக்கு:—

உபாதிகளிலே பிரதிவிம்பித்துச் சரீரங்களிலே பிரவேசித்து விவகரிக்கிற சிதாபாசன் சீவனென் றுத்தரம்.

(ச) சம்சாரபந்த மாவதே தென்கிற சங்கைக்கு:—

சிதாபாசத் தோற்றரவான துவிதமே பந்தமென் றுத்தரம்.

(ரு) இந்தப்பந்தம் விடுகிற முத்தியேதென்கிற சங்கைக்கு:—

விசாரத்தினல் மாயை நஷ்டமானபின் சித்திக்கிற அத்துவிதமே முத்தியென் றுத்தரம்.

(சு) முத்திக்குச் சாதனமேதென்கிற சங்கைக்கு:—

விசாரத்திறைற் பிறந்தஞானமே முத்திக்குச் சாதனமென் றுத்தரம்.

(எ) இந்தவிசாரம் எதனைல் வருமென்கிற சங்கைக்கு:—

அநந்தபிறவி ஈசுரனை யுபாசித்தபேருக்கு வேதாந்த விசாரணை வருமென் றுத்தரம்.

(அ) குருவைவழிபட்டு விசாரம்பண்ணுகிறவ ைரென்கிற சங்கைக்கு:—

தேகாபிமானியாயிருக்கிற சைதன்னியமே விசாரகர்த்தனென் றுத்தரம்.

(கூ) குருமுன்னிலையாய் ஞானங்கொடுக்கிறவ ராரென்கிற சங்கைக்கு:—

ஜகதீசுரனே குருமூர்த்தமாகவந்து ஞானங்கொடுக்கிறவரென் றுத்தரம்.

(க0) அந்த ஈசுரன் எதுசெய்தால் ஞானங் கொடுப்பாரென்கிற சங்கைக்கு:—

நிஷ்காம அநுஷ்டானபத்தியினைல் ஞானங் கொடுப்பாரென் றுத்தரம்.

(கக) ஈசுரனுவதாரென்கிற சங்கைக்கு:—

சாத்வீகவுபாதியிலே பிரதிவிம்பித்துத் திரிமூர்த்தி ரூபமாய்த் தோற்றின சைதன்னியமே ஈசுரனென் றுத்தரம்.

(கஉ) ஒரு சைதன்னியத்திற்கு இருவகைத் தாரதன்மிய மெதனைல் வந்ததென்கிற சங்கைக்கு:—

மாயை யவித்தையென்கிற வுபாதியினைலே வந்ததேயல்லாமற் சைதன்னியத்தைத்தொட்டு வரவில்லையென் றுத்தரம்.

(௧௩) இவர் மாயையினாற் சிருஷ்டிபண்ணுகிற வடைவெப்படி யென்கிற சங்கைக்கு:—

சாத்வீகவுபாதியினால் ஈசுரனையும், இராசத வுபாதியினாற் சீவர்களையும், தாமதவுபாதியினால் மனது முதலான பூதபௌதிகப் பிரபஞ்சத்தையுஞ் சிருஷ்டித்தார். பிரகிருதி குணத்திரயம் மனமென்றுத்தரம்.

(௧௪) சிருஷ்டிக்குச் சாதனபாரம்பரை யேதென்கிற சங்கைக்கு:—

நான் எனதுஎன்கிறவிருத்தியே சாதனபரம்பரை யென் றுத்தரம்.

(௧௫) எத்தனை வகுப்பிலே சிருஷ்டி யடங்கிற்றென்கிற சங்கைக்கு:—

நானென்கிற விருத்தியிலும், இதுவென்கிற விருத்தியிலும், கர்த்தாவும் விஷயமுமாயிருக்கிற சிருஷ்டி யடங்கிற்றென் றுத்தரம்.

(௧௬) இந்த வகுப்பெல்லாந் தோற்றுவிக்கிறவ ராரென்கிற சங்கைக்கு:—

இததனையுந் தோற்றுவிக்கிறவ ராத்மாதானே யென் றுத்தரம்.

(௧௭) நானென்கிறவிருத்தி கர்த்தாவொருவனைக் கற்பிப்பானேனென்கிற சங்கைக்கு:—

நானென்கிற விருத்தி ஏகாகாரமானபடியினாற் கர்த்தாவொருவனைக் கற்பித்ததென் றுத்தரம்.

(௧௮) இதுவென்கிற விருத்தி சத்தாதிக ளனந்தையுங் கற்பிப்பானே னென்கிற சங்கைக்கு:—

இதுவென்கிற விருத்தி இந்திரியபேதங்களினால் ஐந்தாகாரமாய்ப் பிரிந்தபடியினாற் பஞ்சவிஷயங்களையுங் கற்பித்ததென் றுத்தரம்.

(கக) கர்த்தா ஒன்றென்கிறதிலும் விருத்தி இரண்டென்கிறதிலும் விருத்தி கற்பிதமாமென்கிறதிலும் பிரமாண மேதென்கிற சங்கைக்கு:—

நாடகசாலையின் விளக்கு, இராசா, பரிசாரகர், ஆடுகின்றவர்கள், தாளமத்தளக்காரர், இவர்களைத் தாரதன்மிய மறத் தோற்றுவித்து அவர்களில்லாதவேளையிலும் தானேவிளங்குகிறாற்போலக் கர்த்தா முதலானவை யுள்ளவேளையினும் இல்லாதவேளையினுங் கண்டிருக்கின்ற சாக்ஷியே தானென்கிற அநுபவமே பிரமாணமென்றுத்தரம்.

(உ0) நாடகசாலையின் விளக்கு இராசா முதலான திருஷ்டாந்தத்தைச் சரீரத்திலே ஈதின்னதென்று பகுத்துக் காட்டுமென்கிற சங்கைக்கு:—

அகங்காரமே பிரபு, விஷயங்களே பரிசாரகர், புத்தியே கூத்தாடி, இந்திரியங்களே தாளமத்தளக்காரர்; இவைகளனைத்தையுந் தோற்றுவிக்கின்ற சாக்ஷியே தீபமென் றுத்தரம்.

(உக) அசைவற்றிருக்கின்ற சாக்ஷிக்குத் தீப திருஷ்டாந்தமாகாதென்கிற சங்கைக்கு:—

அசையாமல் நாட்டிவைத்த தீபம் இருந்தவிருப்பிலே நாலுபுறமுந் தோற்றுவிக்கிறாற் போல அகண்ட பரிபூரணமாய் அசைவற்றிருக்கிற ஆத்மாவே உள்ளும் புறம்புந் தோற்றுவிக்கிறாரென்றுத்தரம்.

(உஉ) உள்ளாவதெதைக்குறித்து வெளியாவதெதைக்குறித்ததென்கிற சங்கைக்கு:—

உள்ளும் புறம்புமென்கிறது சரீரத்தைக் குறித்தல்லாமற் சாட்சியைக் குறித்தல்லவென் றுத்தரம்.

(௨௩) உள்ளேயிருக்கிறவ னெவன்? வெளியேயிருக்கின்றவை யெவை யென்கிற சங்கைக்கு:—

நானென்கிற அகங்காரி உள்ளே யிருக்கிறவன், வெளியே யிருக்கின்றவை விஷயங்களென் றுத்தரம்.

(௨௪) உள்ளும் புறம்புஞ் சஞ்சரிக்கிற தாரென்கிற சங்கைக்கு:—

உள்ளும் புறம்புஞ் சஞ்சரித்துக் கூத்தாடுகிறது புத்தியென்றுத்தரம்.

(௨௫) உள்ளும் புறம்பு மசையாமலிருக்கிறவ ராரென்கிற சங்கைக்கு:—

உள்ளும் புறம்பு மசையாமனின்று தோற்றுவிக்கிறவர் சாக்ஷி யென் றுத்தரம்.

(௨௬) உள்ளும் புறம்புஞ் சஞ்சரிக்கிறதே புத்தியானால் அப்படி யொருவருஞ் சொல்லக்காணோம் நான்போனேன் வந்தேனென்று சொல்லுகிறார்கள், இதிலே காரணமேதென்கிற சங்கைக்கு:—

பலகணி வழியாயுள்ளே விழுந்த வெய்யிலிலே கையசைகிறதை வெய்யிலசைகிற தென்றாற்போல உள்ளேயிருக்கிற புத்தியும் இந்திரிய துவாரத்தின்வழியே வெளியிலே புறப்பட்டலைந்த தன்னுடைய வலைச்சலைத் தன்னைத்தோற்றுவித்த சாக்ஷியின்பேரிலே ஆரோபிக்கிறதாகையால் ஆத்மாவுக் கலைச்சலில்லையென் றுத்தரம்.

(௨௭) இப்போது இன்ன இன்னதத்துவம் இன்ன இன்ன விடத்திலே யிருக்கிறதென்று பகுத்துக் காட்டினாற்போலசாக்ஷியிருக்கிற விடமும் பகுத்துக்காட்டவேண்டு மென்கிற சங்கைக்கு:—

புத்தி முதலானவெல்லா மொழிந்திருக்கிற அவஸ்தையிலே சாக்ஷியிருக்கிற விடத்தைக் காண்பாயென் றுத்தரம்.

(உஅ) அப்போதெனக்கொரு § தேசமுங் காணப்படவில்லை சாக்ஷியிருக்கிறவிடம், நீர்தாமே சொல்லுமென்கிற சங்கைக்கு:—

நிலத்திலே யிருக்கின்றார் நீரிலே யிருக்கின்றா ரென்கிறதுபோல்ப் புத்தி முதலானவை யொழிந்த வேளையிலே காணப்படாதது கொண்டு ஒருதேசத்தையும் பற்றியிருக்கிறவரல்ல சகல சக கற்பனைக்கும் அதிஷ்டானமாயிருக்கிற படியினாற் சர்வபரிபூரணரென் றுத்தரம்.

(உகூ) சகல சக கற்பனையுங் கற்பிக்கிற தேதென்கிற சங்கைக்கு:—

சொப்பனத்திலே யுட்பிரபஞ்சத்தையுஞ், சாக்கிரத்திலே வெளிப்பிரபஞ்சத்தையுங் கற்பித்தது புத்தியென் றுத்தரம்.

(௩0) சாக்ஷியெப்படிக் காண்கிறாரென்கிற சங்கைக்கு.—

இத்தனையும் அறிவாயிருந்தறிகிறவர் சாக்ஷியென் றுத்தரம்.

(௩க) அவரை நாமெப்படி யறிகிறதென்கிற சங்கைக்கு:—

அவருன்னா லறியப்படுகிறவரல்ல நீதானாகவே மிஞ்சுகிறவஸ்துவென் றுத்தரம்.

(௩உ) இப்படிக்கொத்த அறிவு வருகிறதற் குபாயமேதென்கிற சங்கைக்கு:—

குருமுகமாய் வேதாந்தவிசாரம் பண்ணுகிறதே யுபாயமென் றுத்தரம்.

(௩௩) தானாயிருக்கிற அறிவை யறியவொட்டாத பிரதிபந்தமேதென்கிற சங்கைக்கு:—

---

§ தேகமும்-என்றும் பாடம்.

தேகாதிகளே நாம், பிரபஞ்சமே சத்தியமென்கிற விருவகை யும் பிரதிபந்தமென் றுத்தரம்.

(௩௫) இந்தப் பிரதி பந்தத்தைத் தள்ளுகிற தெப்படியென்கிற சங்கைக்கு:—

இந்தப் புத்தியைத் தள்ளுகிற யுக்தியையும் புத்தி கற்பித்த பிர பஞ்சத்தையுங் காண்கிற அறிவாயிருக்கிறதே தள்ளுகிறதென் றுத் தரம்.

இந்த நாடகதீபிகையை யநுசந்தானம் புரிய, சாக்ஷியே தானாக விளங்கும்.

ஐந்தாவது நாடகதீபம் முற்றிற்று.

ஆகச் சங்கை-௩௫.

சிவமயம்.

ஆறவது

தத்துவவிவேகம்.

குருஸ்துதி.

வித்தியாரண்ணியஸ்வாமிகள், உலோகாநுக்கிர கார்த்தமாகச் வேதாந்த சித்தாந்தமாகிய சகலதத்துவ விவேகத்தை வெளியிடத் தக்கதாக ஆதியிலே சிஷ்டாசாரமான குருவுக்கு நமஸ்காரம் பண்ணும்படி,

அநேகவித லக்ஷணவிஸ்தாரத்துடனே கூடியிராநின்ற மஹா மாயாமோஹத்தை எந்நேரமும் எடுத்து விழுங்குகிறதே வேலையா யிருக்கின்ற ஸ்ரீ சங்கராசாரிய குருமூர்த்திகளினது பாதாரவிந்தங் களுக்கு நமஸ்காரம்,

அந்தக் குருமூர்த்திகளினது பாதாரவிந்தங்களினல் நிர்மலாந் தக்கரணுளுக்குப் பரமாத்மாவை யெளிதாய்க்கண்டறியும் வழி தத் துவ விவேகம்விளங்கும்படி சொல்லுகிறோம்.

(க) தத்துவமாவதேது அதத்துவமாவதேது விவேகமாவதே தென்கிற சங்கைக்கு:—

தத்துவமாவது பரமாத்மா, அதத்துவமாவது மாயாதற்காரி யம்; இதனைப் பகுத்தறிகிறதே விவேகம் என்றுத்தரம்.

(உ) பகுத்தறிகிற தெப்படியென்கிற சங்கைக்கு:—

அறிவாயிருக்கிற தின்னது அறியப்படுகிற தின்னதென்றுகாண் கிறதே பகுத்தறிகிறதென் றுத்தரம்.

(௩) அறிவெத்தனை விதமாயிருக்குமென்கிற சங்கைக்கு:—

அறிவாயிருக்கிற ஆத்மா, ஒன்றேயென் றுத்தரம்.

(௪) அறியப்படுகிற தெத்தனை விதமாயிருக்குமென்கிற சங்கைக்கு:—

அறியப்படுகிறது, ஸ்திரமென்றும், அஸ்திரமென்றும், மூலாஞான விருளென்றும், திரிவிதமாயிருக்குமென் றுத்தரம்.

(௫) அறிவு ஒன்றென்கிறதையும், அறியப்படுகிறது மூன்றென்கிறதையுந் தெரியச் சொல்லுமென்கிற சங்கைக்கு:—

விஷயங்கள் சாக்கிரத்தினிடத்திலே ஸ்திரமாயிருக்கும், சொப்பனத்திலே அஸ்திரமாயிருக்கும், சுழுத்தியிலே அந்தகாரமாகமூன்று விதமாகவிருக்கும். இவைகளைத் தினந்தோறும், மாதந்தோறும் வருஷந்தோறும், கற்பந்தோறும், அறிந்துகொண்டிருக்கிற அறிவு அந்த விஷயங்களைப்போல வொருக்காலுந் தோன்றி யழியாதபடியினாலே ஆத்மா ஒன்றேயொழிய இரண்டில்லையென் றுத்தரம்.

(௬) இவைகளில் ஆநந்தமாய் நாடவேண்டிய பொருளேது தள்ளவேண்டிய பொருளேதென்கிற சங்கைக்கு:—

மூன்றவஸ்தையினுங் காணப்பட்ட பொருளெல்லாந் தனக்கன்னியமானபடியினாலே தள்ளவேண்டியது; அறிவாயிருக்கிற தன்னைக் கைவிடப்படாதபடியினாலே, ஆநந்தமாக நாடவேண்டியதென் றுத்தரம்.

(௭) இப்படி அறிவாகவிருக்கிற பொருள் எக்காலத்திலுந் தானாகவேயிருக்குமானால், அஞ்ஞானகாலத்தில் அறியப்படாம விருப்பானேனென்கிற சங்கைக்கு:—

சகபாடிகளுடனேகூடி ஓதுகின்ற தன் பிள்ளைக்குரல் தெரியாததுபோல, அநாதிசித்த அஞ்ஞானத்துடனே கூடிக்குழம்பித்தோற்றுகையால், தோற்றாமலிருந்ததென் றுத்தரம்.

(அ) அநாதி சித்த அஞ்ஞானமாவதேதென்கிற சங்கைக்கு:—

அக்கினியிற் சூடுபோலவும், சலத்திற் சயித்தியம்போலவும்; பிரமத்தினிடத்திலே சீவன், சகத்து, ஈசுரனை உண்டாக்குகிற மூலப் பிரகிருதியே அநாதி சித்த வஞ்ஞானமென் றுத்தரம்.

(௯) இந்த அஞ்ஞானம் எதிலுண்டாயிற்றென்கிற சங்கைக்கு:—

இரச்சுவினிடத்திற் சர்ப்பந்தோன்றினாற்போல, பிரமத்தினிடத்திலுண்டாயிற்றென் றுத்தரம்.

(க0) இதற்கு லக்ஷணமேதென்கிற சங்கைக்கு:—

சத்துமல்ல, அசத்துமல்ல, சதசத்துமல்ல, ஒன்றுமல்ல, பலவுமல்ல, சாவயவமுமல்ல, நிரவயவமுமல்ல, சாவயவநிரவயவமுமல்ல, பிரமாணமாகியுமிருக்கும், அப்பிரமாணமாகியு மிருக்கும், நிரூபித்துப் பார்க்குமிடத்தில், லக்ஷண சூன்யமாய்ப் போமென்று வேதஞ்சொல்லுகிறது, இதுவே லக்ஷணமென் றுத்தரம்.

(கக) இப்படி யுண்டாகிய பிரகிருதி, என்ன செய்யுமென்கிற சங்கைக்கு:—

தன்னுடைய முக்குணத்தினாலே, சீவன், சகத்து, ஈசுரனை உண்டாக்குமென் றுத்தரம்.

(கஉ) இவை, எதனாற்போமென்கிற சங்கைக்கு:—

பிரமமே நாமென்கிற அத்துவிதஞானத்தினாற் போமென்றுத்தரம்.

(கங) முக்குணத்தினால், சீவன், சகத்து, ஈசுரனை உண்டாக்கினவிதம் எப்படியென்கிற சங்கைக்கு:—

மூலப் பிரகிருதியினுடைய சாத்வீககுணமான சுத்தமாயையினிடத்திலே பிரதிபலித்தவன் ஈசுரன். பஞ்சகிருத்திய பரராயிருக்

கிற இந்த அந்தரியாமியை யுண்டாக்கின மாயைதானே அவருக்குக் காரணசரீரம். இராஜத குணமென்னும் அசுத்தமாயையான அவித்தையிலே பிரதிபலித்த சைதன்னியம் சீவன். இந்தப்பிராக்ஞனுக்குக் காரண சரீரமான அவித்தை தாரதன்மியமாய் வெகுவிதமான படியினாற் சிதாபாசர்களும் அனந்தம் தாமதகுணப் பிரகிருதியிலேயிருந்தும் இந்தச் சீவர்களுக்குப்போக்கிய போகவிதிகளை யுண்டாக்க ஈசுராக்கினையினால் ஆகாசம் வாயு அக்கினி அப்பு பிருதிவி என்னப்பட்ட முக்குணத்துடனே கூடிச் சூக்ஷ்மபூதமைந்தும் உண்டாயின. இந்தப் பூதங்களினுடைய சாத்வீகாம்சத்திலே பூதத்திற்கோரொரு மாத்திரை யெடுத்து ஒன்றாகக் கூட்டிவைத்தது அந்தக்கரணம். இது சஞ்சல வியாபாரத்தினால் மனமென்றும், நிச்சயவியாபாரத்தினாற் புத்தியென்றும், இரண்டு விதமாகவிருக்கும். மற்றும் சாத்வீகாம்சத்தில், பூதத்திற்கோரொருமாத்திரை யெடுத்துத் தனித்தனியே வைத்தது சுரோத்திராதி ஞானேந்திரியம். பூதங்களினுடைய ராஜதாம்சத்திலே பூதத்திற்கோ ரொருமாத்திரையெடுத்து ஒன்றாகக் கூட்டிவைத்தது வியானாதி பஞ்சவாயுக்கள். மற்றும் இராஜதாம்சத்திலே, பூதத்திற்கோ ரொருமாத்திரை யெடுத்துத் தனித்தனியே வைத்தது வாக்காதி கர்மேந்திரியம். ஆகஇந்தப்பதினேழு தத்துவமுமிலிங்கசரீரமென்றும், சூக்ஷ்மசரீரமென்றும், போகசாதனமென்றுஞ் சொல்லப்படும். இந்தச் சூக்ஷ்மசரீரத்துடனே கூடின அவித்தையாபிரதிவிம்பருக்குப் பிராக்ஞரென்கிற பேர்மாறித் தைஜதரென்கிற பேருண்டாயிற்று. சகலசீவர்களுடைய சூக்ஷ்மசரீரமுஞ் சூக்ஷ்மபூதமுங் கூடின சமஷ்டிபுத்தியினால் இரண்ய கர்ப்பமென்றும், ஈசுர சூக்ஷ்மசரீரமென்றுஞ் சொல்லப்படும். இந்தச் சூக்ஷ்ம சரீரத்துடனே கூடின மாயாபிரதிவிம்பருக்கு அந்தரியாமியென்கிற பெயர்மாறிச் சூத்திராத்மாவென்கிற பெயர் வந்தது. எங்குந் தாதாத்மியமாயிருந்தபடியினா லிவரைச் சமஷ்டியென்பது. அவனவன் சரீரமாத்திரந் தாதாத்மியமாக விருந்தபடியினாற் சீவர்களை வியஷ்டியென்பது. சீவ

ர்களுக்குப் போகமும் போகத்துக்கிடமான ஸ்தூலசரீரமு முண்டாக்கும்பொருட்டுத்தாமதகுணமாயிருக்கிற ஆகாசாதிகளைப் பஞ்சீகரணம் பண்ணினர். அதெங்ஙனமென்னில், பஞ்சபூதம் ஓரொன்றை ஈரிரண்டாக்கி முதற்பாதி யைந்தையும் ஒவ்வொன்றை நன்னான்காக்கிப், பூதங்களினுடைய விரண்டாம்பாதி யைந்திற் றன்னம்ஸத்துடனே கூட்டாமல் மற்ற நாலுபூதங்களினுடனுங் கூட்டுகிறது பஞ்சீகரணம், இப்படிப் பஞ்சீகரணம் பண்ணின ஸ்தூலபஞ்சபூதங்களிலே அண்டங்களும், புவனங்களும் நால்வகை ஸ்தூலசரீரங்களும், போகமுதலான வஸ்துக்களும் உண்டாயின. இந்தஸ்தூலபூத பௌதிகங்களெல்லாம் ஒருமைப்பாடாய் ஈசுரஸ்தூலசரீரமென்றும் விராட்டென்றுஞ் சொல்லப்படும்; இதனுடனே கூடின ஈசுரனுக்குச் சூத்திராத்மாவென்கிற பேர் மாறி வைஸ்வா நரனென்கிற பேர் வந்தது. தைஜதர்களெல்லாந் தூலசரீரங்களுடனேகூடி விஸ்வர்களாய்த் தேவதைகளென்றும், மானிடர்களென்றும், திரியக்கென்றும் பேரையுடையரானார்கள். ஈசுரவாக்கியமான கர்மம், பக்தி, ஞானம், என்கிற காண்டத்திரயாநுஷ்டானம் பண்ணி அந்தர்முகமாகாமற் பகிர்முகமானார்கள். எல்லாருமிப்படி ராகத்துவேஷபரராய்ப் பண்ணின கர்மத்தின் வசத்தினாற் சென்மபந்தங்களிலே ஆற்றிற் சுழிவழியே சுற்றுகின்ற புழுப்போலச் சுழன்றார்கள். தயாளுவாயிருக்கிறவன் அந்தப்புழுக்களைக் கரையேற்றின வுடனே மரத்தி னிழலிலே யிருந்து சுகமடைந்தாற்போல, சத்கர்மபரிபாகத்தினாற் குருரூபமாகவந்த ஈசுரனுடைய ஞானோபதேசத்தினால் அபூர்வமாக ஒருவன், பஞ்சகோச விவேகத்தைப்பண்ணி முத்தியுமடைவானென்றுத்தரம்.

(கச) பஞ்சகோசங்கள் யாவையென்கிற சங்கைக்கு:—

ஸ்தூலசரீரமே அன்னமயகோசமென்றும், கர்மேந்திரியமும் பிராணவாயுவுங்கூடிப் பிராணமயகோசமென்றும், மனமும் ஞானே

ந்திரியமுங்கூடி மனோமயகோசமென்றும், புத்தியும் ஞானேந்திரியமுங் கூடி விஞ்ஞானமய கோசமென்றும், இந்தக் கோசத்திரயமே, சூக்ஷ்ம சரீரமென்றுஞ் சொல்லப்படும். இனிக் காரணசரீரமே, ஆநந்தமய கோசமென் றுத்தரம்.

(கரு) இந்தப் பஞ்சகோசங்களுடனே ஆத்மாவுக்குத் தாதாத்மியமெப்படியென்கிற சங்கைக்கு:—

நீலாதிவஸ்துக்களுடனேகூடி அவ்வண்ணமாய்த் தோற்றின படிகம்போல, ஆத்மாவாக விருக்கின்றதானும் பஞ்சகோசங்களுடனே கூடி அவைகளே தானாகத் தோற்றுகிறது தாதாத்மியமென்றுத்தரம்.

(கசு) இந்தப் பஞ்சகோசங்களைத் தானல்லவென்று தள்ளுகிற விவேக மெப்படியென்கிற சங்கைக்கு:—

அந்வயவெதிரேகமே அவைகளைத்தள்ளுகிற விவேகமென் றுத்தரம்.

(கஎ) அந்வயமாவதெது, வெதிரேகமாவதெது, விவேகத்தினாலே பஞ்சகோசத்தைத் தள்ளி யப்பாற் பட்டிருக்கிற பிரமமே நாமென்றறியும்வா றெங்ஙனமென்கிற சங்கைக்கு:—

தானாகவழங்கின ஸ்தூலசரீரந் தோற்றாத சொப்பனாவஸ்தையிலே, தான்தோற்றுகிறதே அந்வயம். தான் தோற்றுகினுந் தூலசரீரந்தோற்றாததே வெதிரேகம். சூக்ஷ்மசரீரந்தோற்றாத சுழுத்தியவஸ்தையிலே, தான்தோற்றுகிறதே அந்வயம். தான்தோற்றுகினுலிங்கசரீரந் தோற்றாததே வெதிரேகம். இந்தச் சூக்ஷ்மசரீரந்தள்ளப்பட்டதே மூன்றுகோசமுந் தள்ளப்பட்டன. சுழுத்திதோற்றாத சமாதியிலே தான்தோற்றுகிறதே அந்வயம் தான்தோற்றுகினுஞ் சுழுத்திதோற்றாததே வெதிரேகம். முஞ்சிப்புல்லிலே பக்கத்து மட்டைகளைத் தள்ளித் தள்ளி நடுவிலாணி யெடுக்கிறாற்போல அந்வய

வெதிரேக யுத்தியினாலே தானாய்விளங்கின பஞ்சகோசங்களைத் தள்ளி அப்பாற்பட்டிருக்கிற பிரமமே நாயென்கிற அறுதிபுத்தியுள்ளவர்களே பேரறிவாளரென் றுத்தரம்.

(கஅ) சீவனுக்கும் பரமாத்மாவிற்கும், இப்படி யேகத்துவஞ் சாதித்ததற்குப் பிரமாணமேதென்கிற சங்கைக்கு:—

சாமவேத மஹாவாக்கியமே பிரமாணமென் றுத்தரம்.

(கக) அந்த மஹாவாக்கியத்திற் கர்த்தமேதென்கிற சங்கைக்கு:—

முன் சுயம்பாகியாக விருந்தவனுக்குக் காலாந்தரத்திலே துரைத்தனம்வந்து தண்டிகையிலே வரக்கண்ட விடத்திலே அவனென்கிற சொல்லிலே சட்டுவ 0 முதலான வுபாதிலக்ஷணமும், இவனென்கிற சொல்லிலே தண்டிகைமுதலான வுபாதிலக்ஷணமும் விட்டு இரண்டு சொல்லினுஞ் சரீரமாத்திரம் அர்த்தமாகக்கொண்டு இவனே அவன் அவனே இவனென்று ஒருவனைப்புரையறக் காட்டுகிறாற்போலச் சகத்திற்கு உபாதானகாரணமான பிரமம், மாயாசபளிதயான ஈசுரன், தாமதபரிணாமமான அவருடைய சரீரம் இம்மூன்றையுங் காட்டும் தற்பதம், மலினத்துவமான அவித்தையா பிரதிவிம்பன், அவனுடைய சரீர உபாதி, இவைகட்கு அதிஷ்டான கூடஸ்தர் அம் மூன்றையுங் காட்டுந் துவம்பதம். இவர்களிருவரையும் ஒருவனென்றே மஹாவாக்கியம் இரண்டிடத்திலுமுள்ள வுபாதியும் உபாதியுடனே கூடின சைதன்னியங்களையும் விட்டு அகண்டமாயிருக்கிற சச்சிதாநந்தம் ஒன்றைத்தானே புரையறக்காட்டும் பாகத்தியாக லக்ஷணையான விட்டு விடாத லக்ஷணையென் றுத்தரம்.

(உ0) இப்படிக்கொத்த ஞானம் வரத்தக்கதாகக் குருசந்நிதானத்திலே செய்காரியமேதென்கிற சங்கைக்கு:—

---

0 சட்டுவம் - அகப்பை.

சிரவணுதிகளை செய்காரியமென் றுத்தரம்.

(உக) சிரவணுதி செய்காரிய மெத்தனைவிதம், அவைகட்குலக்ஷ மேதென்கிற சங்கைக்கு:—

சிரவணுதி நாலுவிதம், அதெங்ஙனெனின் சகலவேதங்கட்கும் ஆறு லிங்கத்திஞ லர்த்த விசாரம் பண்ணிப் பிரமதாற்பரியமாய்க் காண்கிறதே சிரவணம். அந்தயுத்தியினுல் அனவரதஞ் சிந்திக்கிறதே மனனம். இப்படி யிருவகையினுலுந் தெளிந்தபொருளிலே மனம் ஏகாக்கிரமாகிறதே நிதித்தியாசனம். தியானம்பண்ணுகிறவனையும், தியானத்தையும் இழந்து தியானிக்கப்படுகிற வஸ்து மாத்திரமாக விருக்கிற சித்தமே சமாதியென் றுத்தரம்.

(உஉ) இப்படிக்கொத்த சமாதிக்குப் பலனேதென்கிற சங்கைக்கு:—

அநாதிகால சஞ்சிதகர்மநாசமும், தன்னை நிர்மலம்பண்ணுகிற தர்மமும், வாசனுக்ஷயமும், அபரோக்ஷ ஞானமுந் தனக்குப் பிரயோசனமென் றுத்தரம்.

(உங) இந்த அதீத சுகசமாதியிலே யிருக்கிறவன் அப்படியேயிராமல் பிரபஞ்சத்திலே விழிப்பானேனென்கிற சங்கைக்கு:—

பிராரத்த சேஷத்திஞ † லென் றுத்தரம்.

இப்படித் தத்துவவிவேகத்தைப் பலபட விசாரம்பண்ணி மனதைச் சமாதியிலே லயம்பண்ணிச் சகலசம்சாரத்தையும் விட்டுப் பரப்பிரமமாகலாமென்று இப்படி தத்துவவிவேகஞ் சொல்லுகிறது.

ஆறவது தத்துவவிவேகம் முற்றிற்று.

ஆகச் சங்கை-உங.

---

† சேஷம்-மிச்சப்பொருப்பு.

சிவமயம்.

ஏழாவது

பஞ்சபூதவிவேகம்.

சிருஷ்டிக்குமுன் சத்தாகவே இத்தனையுமிருந்த தென்னுஞ் சாமவேதார்த்தத்தைப் பஞ்சபூத விவேகத்திஞலே வெளிபண்ணும் படி.

(க) சத்தென்று சொல்லப்பட்டதேது, இத்தனையுமென்றுசொல்லப்பட்ட தேதென்கிற சங்கைக்கு:—

சத்தென்று சொல்லப்பட்ட அத்துவிதப்பிரமம், இத்தனையுமென்று சொல்லப்பட்டது பஞ்ச பூதமும், அவைகளின் குணங்களைந்தும், அவைகளை யறிகிற இந்திரியங்களைந்தும், இவைகளுக்குச் சகாயமாயிருக்கிற இந்திரியங்களைந்தும், அந்தக்கரணமொன்றும், நானென்கிறவ ஞெருவனும் இத்தனையுங்கூடினதற்கு, இத்தனையுமென் றுத்தரம்.

(உ) இந்தப் பூதமைந்திற்குள்ளே ஒவ்வொரு பூதத்திற்கு எத்தனையெத்தனை குணங்க ளுண்டென்னுஞ் சங்கைக்கு:—

ஆகாசத்திற்குக் குணம் ஒன்று. வாயுவிற்குக் குணம் இரண்டு. அக்கினிக்குக் குணம் மூன்று. அப்புவிற்குக் குணம் நான்கு. பிருதிவிக்குக் குணம் ஐந்தென் றுத்தரம்.

(ங) இந்தப் பூதங்களிலே இந்தக்குணங்களைப் பகுத்துக்காட்ட வேண்டுமென்கிற சங்கைக்கு:—

பிரதித்தொனியொன்றுமே ஆகாசத்தின் குணம். சீறுசீறென்கிற சத்தமும், சீதோஷ்ணகடினங்கட்கு விலட்சணமான பரிசமும்

வாயுவின்குணம். புகுபுகென் றொலிக்கிற சத்தமும், உஷ்ணபரிச மும், பிரகாசமென்கிறரூபமும் அக்கினியின்குணம். குளுகுளுவென் கிற சத்தமும், சயித்திய * பரிசமும், சுக்கிலரூபமும், மதுர ரசமும் அப்புவின்குணம். கடகடவென்னுஞ் சத்தமும், கடின பரிசமும், பஞ்சவர்ணரூபமும், அறுசுவைரசமும், நற்கந்த துர்க்கந்தமும் பிரு திவியின்குணமென் றுத்தரம்.

(ச) இதற்குப் பிரமாணமேதென்கிற சங்கைக்கு:—

சுரோத்திராதி ஞானேந்திரியங்களா லநுபவிக்கிறதே பிரமா ணமென் றுத்தரம்.

(ரு) இந்திரியங்களுக்கிப்படி வெளிநாட்டமாதிரந்தானோ உண் ணாட்டமு முண்டோவென்கிற சங்கைக்கு:—

செவியை அங்குலி † யினால் மூடினால் உள்ளிரைச்சல் கேட் கையினாலும், குடிக்கையிற் புசிக்கையிற் சீதோஷ்ணபரிசம் அறிகை யினாலுங், கண்ணைமூடினவிடத்து உள்ளிருட்டு ரூபந்தோற்றுகையி னாலும் வாந்திபண்ணுகிறபோது ரசங்களை அறிகையினாலும், ஏப்பம் விடும்போது நற்கந்தந் துர்க்கந்தங்களை யறிகையினாலும் உண்ணாட் டமுமுண்டென் றுத்தரம்.

(சு) இதற்குச்சகாய விந்திரியமேது அதற்குத் தொழிலேதெ ன்கிற சங்கைக்கு:—

வாக்காதிசகாய விந்திரியமும் வசனாதி தொழிலுமென் றுத் தரம்.

(எ) அந்தரிந்திரியமான மனதும் அதன்றொழிலு மேதென்கிற சங்கைக்கு:—

---

* சயித்தியம்-குளிர்ச்சி.

† அங்குலி-பெருவிரல்.

பத்திந்திரியத்திற்கு மிராஜாவாய், இந்திரியத்தின் வழியேகுண தோஷம் விசாரிக்கிறதாய், இருதயகமலத்தி னடுவேயிருக்கிறதுமன து. வைராக்கியஞ் சமைமுதலான சாத்வீகப் பிரவிருத்தியும், காமக் குரோதமுதலான ராஜதப்பிரவிருத்தியும், சோம்பல் நித்திரை முத லான தாமதப்பிரவிருத்தியும் இதன் தொழிலென் றுத்தரம்.

(அ) இந்தமூன்றுவகைப் பிரவிருத்திக்கும் பலனேதென்கிற சங்கைக்கு:—

சாத்வீகத்தி லுண்டாம் புண்ணியம். ராசதத்திலுண்டாம் பாவ ம். தாமதத்தி லிருவகையுமற்று வீண்காலம் போமென் றுத்தரம்.

(கூ) இப்படிப் பதினொ ரிந்திரியத்தினாலும், யுத்தியினாலும் சாஸ்திரத்தினாலும் அறியப்படுகிற சகலசகத்துஞ் சத்துத்தானே யென்பது கூடாதென்கிற சங்கைக்கு:—

விஜாதீயம், ஸஜாதீயம், ஸ்வகதபேதம், இம்மூன்றுமற்றதுசத் துத்தானேயென் றுத்தரம்.

(க0) விஜாதீயம், ஸஜாதீயம், ஸ்வகதபேதமாவதேது இந்தச் சகத் திந்த மூன்றுமல்லவென்கிற தெப்படியென்கிற சங்கைக்கு:—

மரத்திற்குக் கல்லுவிஜாதீயம், மறுமரம் ஸஜாதீயம், இலை பூகாய் ஸ்வகதபேதம், இந்தப்படி சத்திற்குச் சகத்து விஜாதீயமென் னவுங்கூடாது. அசத்தில்லாத படியினால், சத்திற்குச் சகத்து ஸஜா தீயமென்னவுங்கூடாது. மறுசத்தில்லாதபடியினால் ஸ்வகதபேதமெ ன்னவுங்கூடாது நிரவயவ ‡ மானபடியினால் இவையெல்லாம் சத்து த்தானேயென் றுத்தரம்.

(கக) அதுகூடாது. எல்லாம் அசத்தாகவே முன்னிருந்ததென் கிற சங்கைக்கு:—

---

‡ நிர்-அவயவம் உறுப்பில்லாமை.

சூரியன் அந்தகாரத்துடனே கூடியுமிரான். அவன் அந்தகாரமுமல்லவென்கிறதுபோல சகத்துமுன் அசத்தாயிருந்ததாலுற் சத்துடனேகூடியுமிராது, சத்தாகவுமாட்டாதென் றுத்தரம்.

(கஉ) சத்தைத்தவிர வொன்றுமில்லாவிட்டாற் சிருஷ்டிக்கு முன்னெல்லாஞ் சத்தாயிருந்ததென்று வேதவாக்கியஞ் சொல்வானேனென்கிற சங்கைக்கு:—

காலவாசனையுடனே கூடியிருக்கிற சிஷ்யனைக்குறித்துச் சொன்னதேயல்லாம லுண்மையல்லஆகையினுற் சங்கையும்,உத்தரமும், துவிதத்திலேயல்லாம லத்துவிதத்திலே யில்லையென் றுத்தரம்.

(கங) அறியாமையினுற் சங்கித்தேன் உண்மை யேதென்கிற சங்கைக்கு:—

அசையாமல் கெம்பீரமாய்ப் பிரபை ÷ யுமல்லாமல் அந்தகாரமுமல்லாமல் அவாங்கமானசகோசரமா § யிருக்கிற பிரமமே சத்தென் றுத்தரம்.

(கச) பிருதிவிமுதலானவை பரமாணுவாய்ப் போனபடியினுல் இல்லையென்கிறது சம்மதித்தேன்; பிரளயத்திலே ஆகாசமுமில்லாமற் போமென்கிறது கூடாதென்கிற சங்கைக்கு:—

அத்தியந்தம் நிர்ச்சகத்தாயிருக்கிற வாகாசம் உன்புத்தியிலே பட்டாற்போல நிராகாசமாயிருக்கிற சத்து நம்முடைய புத்தியிலே படுமென் றுத்தரம்.

(கரு) சத்தாயிருக்கிற சுத்தசைதன்னியத்தை எப்போதநுபவித்தீரென்கிற சங்கைக்கு:—

* நிச்சிந்தமாயிருக்கிற வேளையிலே யநுபவித்தோமென் றுத்தரம்.

---

§ பிரபை-ஒப்பு. ÷ அவாங்கமனோகோசரம்-வாக்கிற்குமனதிற்குமெட்டாதது. * நிச்சிந்தம்-என்றது-தூஷணீம்பூதாவத்தை.

(கசு) அப்போது சத்தென்கிற புத்தியுமில்லையே யென்கிற சங்கைக்கு:—

அதுநமக்குச் சம்மதந்தான் நிர்ப்புத்தியாயிருக்கிற வவஸ்தைக்குச் சாக்ஷிமாத்திரமாக விருந்தோமென்கிற வநுபவமேபோதும், ஆகையினால் மனோவிகாரமற்ற வேளையிலே சாக்ஷிமாத்திரமாக விருக்கின்றாற்போல மாயாவிருத்திக்கு முன்னுஞ் சத்திருக்குமென்றறியென் றுத்தரம்.

(கஎ) இந்தமாயைக்கு லக்ஷணமேதென்கிற சங்கைக்கு:—

சத்துமல்லாமல், அசத்துமல்லாமல், உற்றுப்பார்த்தாலில்லாமற் போகிறதே லக்ஷணமென் றுத்தரம்.

(கஅ) சத்தைவிட மாயாசத்தி யில்லாவிட்டா லசத்தென்கிற லக்ஷணமாகட்டு மென்கிற சங்கைக்கு:—

அசத்து மாயா காரியமல்லாமற் சொரூபமல்ல ஆகையினால், கடசத்திமண்ணிலேயென்றாலும்,ஏகதேசமாக விருக்கின்றாற்போல மாயாசத்தியும் பிரமத்தினிடத்திலே ஏகதேசமாக விருக்கு மென் றுத்தரம்.

(ககூ) பிரமத்தினிடத்திலே யிருக்கின்ற மாயை என்ன செய்யுமென்கிற சங்கைக்கு:—

சுவரைப்பற்றி யிருக்கிறவர்ணம் சுவரினிடத்திலே பலவித சித்திரங்களைக் கற்பித்தாற்போல பிரமத்தைப்பற்றி யிருக்கிறமாயையும் நிருவிகாரத்தினிடத்திலே விகாரத்தைக் கற்பிக்கு மென் றுத்தரம்.

(உ0) மாயையினாற் கற்பிக்கப்பட்ட விகாரங்க ளேதென்கிற சங்கைக்கு:—

மூர்த்தினவிகாரம் ஆகாசம் அதற்கு லக்ஷணம் அவகாச மென்றுத்தரம்.

(உக) சத்திற்குச் சுபாவமெத்தனை, ஆகாசத்திற்குச் சுபாவம் எத்தனை யென்கிற சங்கைக்கு:—

உண்டென்கிறது மாத்திரமே சத்தின் சுபாவம். உண்டென்கிறதும், சத்தமு மாகாசத்தின் சுபாவம். சத்திலே சத்தமில்லை. சத்துஞ் சத்தமு மாகாசத்தின்சுபாவ மென்றுத்தரம்.

(உஉ) சத்துத்தானே ஆகாசமானால், சத்தின்குண மாகாசமென்று சொல்லவேண்டுமே யல்லாமல். ஆகாசத்தின்குணம். சத்தென்று வாதிகள் சொல்வானேனென்கிற சங்கைக்கு:—

பிரமத்தினிடத்திலே ஆகாசத்தைக் கற்பித்தமாயை குணகுணிகளையுந் தாறுமாறாகத் திருப்பிவைத்தது அப்படிப் பிரமிப்பிக்கிறது மாயைக்குச் சுபாவமென் றுத்தரம்.

(உ௩) இது தெளியும்வழி யேதென்கிற சங்கைக்கு:—

வேதாந்தவிசாரம் பண்ணினால், சத்தினிடத்திலே ஆகாசங்கற்பிதமானபடியினாற் சத்தைப் பிரதானமாகவும், ஆகாசத்தை யப்பிரதானமாகவு மறியப்படுமென் றுத்தரம்.

(உ௪) சத்தைத்தவிரப் புறம்பாயிருக்கிற வாகாசத்தை யசத்தென் றறிகிற தெப்படியென்கிற சங்கைக்கு:—

ஆகாசமுண்டென்னுமிடத்தில், உண்டென்கிற சொல்லினாலும், விவேகித்துப் × பார்த்தாற் காட்டப்பட்ட பொருளைத்தவிர வாகாசமில்லாதபடியினாலும், ஆகாசமசத்துத்தானே யென்றறியென் றுத்தரம்.

× அறிவினாலாராய்ந்து.

இவை மூலசுலோகப்படி இரண்டாம் சமாதானம்.

விசாரமாவதேதென்னுஞ் சங்கைக்கு:—

சத்தென்னுஞ் சத்தமும் ஆகாசமென்னுஞ் சத்தமும் பரியாய மல்ல வாயுவாதிகளில் சத்தானது அநுவிர்த்தித் திருக்கிறது, ஆகாசமப்படி யநுவிர்த்தித்திருக்கவில்லை ஆதலா லாகாச மித்தையென்பதே விசாரமென் றுத்தரம்.

(உரு) ஆகாசந் தோற்றுகிறபடியினு லில்லையென்ப தெப்படியென்கிற சங்கைக்கு:—

யாதொன்று சத்தைத்தவிர அசத்தாகவிருந்துதோற்றுகிறதோ அவையெல்லாஞ் சொப்பன கஜ முதலியவைபோல மித்தையென் றுத்தரம்.

(உசு) இப்படி ஆகாசத்திலே சத்தையுஞ், சத்தத்தையும், பிரித்துக் காண்கிறபோது ஆகாச மித்தை யாவானே னென்கிற சங்கைக்கு:—

கற்பித மாயாகாரிய மானபடியினுற் காரணம்போல மித்தையாக வகுப்பற்ற தென்றுத்தரம்.

(உஎ) பொய்யாயிருக்கிற வாகாசமும், மெய்யாயிருக்கிறசத்தும் ஏகமாகப் பொருந்திச் சகலர்க்குந் தேற்றுகையாற் பிரித்துக் காண்கிறவழி யெப்படியென்கிற சங்கைக்கு:—

ஜாதிவியக்தி போலவும், குணத்திரவியம் போலவும் உடலுமுயிரும்போலவும், சத்தும் ஆகாசமும், வேறென்றறியென் றுத்தரம்.

(உஅ) இப்படியறிந்தாலும் சத்தும் ஆகாசமும், வேறென்றறியப்படவில்லை அஃதெதனுலென்கிற சங்கைக்கு:—

பூர்வம்புத்தி யேகாக்கிர மாகாதபடியினாலும், சந்தேகத்தினா லும் ஏறவில்லை. சாவதானமாய்ப் பிரமாண மூலமாய் விசாரித்தா லேறுமென் றுத்தரம்.

(உக) விசாரித்தவனுக்குப் புத்தியி லெப்படியிருக்கு மென்கிற சங்கைக்கு:—

சத்தாயிருக்கிற வஸ்து அகண்டமென்றும், ஆகாசம் பரிச்சி ன்ன + மான படியினால் மித்தையென்றும், புத்தியிலே திடப்பட்டிரு க்குமென் றுத்தரம்.

(ரு0) இப்படி யறிந்தவன் உலகத்தாருடனே யெப்படிப்பேசு வானென்கிற சங்கைக்கு:—

சத்தைத்தானே ஆகாசமென்று பேசுகிறவனையும் ஆகாசஞ் சின்மாத்திரமென்று பேசாதவனையுங் கண்டவுடனே யாச்சரியப்படு வானென் றுத்தரம்.

(ருக) இப்படி ஆகாசம் மித்தையென்றும், சின்மாத்திரமே சத் தியமென்றும் பிரித்தறிந்தபின் செய்காரிய மேதென்கிற சங்கை க்கு:—

இந்தஞானத்தின்படியே வாயு முதலான பூதங்களினும், சத்து பரிபூரணமானபடியினா லெங்குங் காணப்படுமென்றும், ஆகாசாதி பரிச்சின்ன மானபடியினா லெங்குங் காணப்படவில்லை யென்றும், பூதங்களெல்லா மித்தையென்றுந் திடப்படுத்த வேண்டுமென் றுத் தரம்.

(ருஉ) பூதங்கள் பரிச்சின்னமா யெப்படிகாணப்படு கின்றன, பூதங்கட்குச் சுபாவகுணமென்ன அன்னியகுணமேதென்கிற சங் கைக்கு:—

+ பரிச்சின்னம்-அடையாளமின்மை.

சத்தினிடத்திலே யேகதேசகற்பிதம் மாயை. மாயையினிடத்திலே யேகதேசகற்பிதம் ஆகாசம். ஆகாசத்தினிடத்தி லேகதேச கற்பிதம் வாயு. வாயுவுண்டென்கிறது சத்தினுடைய அம்ஸம். சத்தை விட்டுப்பார்த்தால் வாயுகாணுமற் போகிறது மாயையினம்ஸம். சத்தமாகாசாம்ஸம். ஆக இம்மூன்றும் வாயுவிற்குக் காரணகுணம். சுபாவகுணம் பரிசம். இத்தனையிலுஞ் சத்தைப்பகுத்தாற் காணுமற் போகிறபடியினுல் வாயுமித்தையென் றுத்தரம்.

(௩௩) இப்படி வாயுமித்தையென் றறிந்தபின் செய்காரியமே தென்கிற சங்கைக்கு:—

வாயுவிற் பத்திலொன்ருய்க் கற்பிக்கப்பட்ட வக்கினியு மித்தையென்றே காணவேண்டும். அக்கினியுண்டென்கிறது சத்தினுடைய, வம்ஸம். சத்தைவிட்டுப்பார்த்தா லில்லாமற் போகிறது மாயையினம்ஸம். சத்தமாகாசத்தி னம்ஸம். பரிசம் வாயுவினம்ஸம். ஆகக் காரணகுணம் நான்கு, சுபாவ குணம் ரூபம். இத்தனையுஞ் சத்தைத் தவிர வேறல்லவென்று காண்கிற வாசனை பண்ணவேண்டுமென் றுத்தரம்.

(௩௪) இப்படி யக்கினியு மித்தையென் றறிந்தபின் செய்காரிய மேதென்கிற சங்கைக்கு:—

அக்கினிக்குப் பத்திலொன்று கற்பிதம் அப்பு. அப்பு விற்கு ரசத்துடனே கூட ஆறுகுணம், அப்புவிற் பத்திலொன்று கற்பிதம். பிருதிவிக்குக் கந்தத்துடனே கூட ஏழுகுணமென்றும், பிருதிவியிற் பத்திலொன்று கற்பிதம் பிரமாண்டம். பிரமாண்டத்திற் கற்பிதம் புவனங்கள். புவனங்களிற் கற்பிதம் சரீரங்களென்றுமறிந்து இத்தனையிலுஞ் சத்தைவிட்டுப் பார்த்தால் இவைகட்கு சொரூபமில்லாத படியினுலுஞ் சின்மாத்திரமென்று காண்கிறதே செய்காரியமென் றுத்தரம்.

(ருரு) இப்படித் துவிதமெல்லாம் மாயாகற்பிதமென் றனுதரவு பண்ணினாற் றோஷமில்லையோவென்கிற சங்கைக்கு:—

சகத்பேதத்தை நித்தியமென்று நிச்சய புத்திபண்ணி, அத்துவிதத்தை யனுதரவுபண்ணின சாங்கியன், கணாதன், பௌத்தன் முதலாயினபேருக்குப் பிரத்தியபாயமில்லையென்றால் மாயாகற்பிதமாயிருக்கிற துவிதத்தை யனுதரவுபண்ணிப்போட்டிருக்கிற நமக்குப் பிரத்தியபாயம் லேசமுமில்லையென் றுத்தரம்.

(ருசு) இப்படித் துவிதத்தை யனுதரவுபண்ணினாற் பிரயோசன மேதென்கிற சங்கைக்கு:—

துவிதத்திலே யனுதரவுபண்ணின லத்துவிதத்திலே பத்தி திடப்பட்டுச் சீவன் முத்தனாகலாமென் றுத்தரம்.

(ருஎ) இப்படிச் சத்தையும், அசத்தையும் பகுத்தறிந்தால் சீவன்முத்தி யெப்போது வருமென்கிற சங்கைக்கு:—

திடப்பட வறிந்த வன்றே முத்தியென் றுத்தரம்.

(ருஅ) பிராணன் விடும்போ தந்தநிலைமை வரவேண்டாமோவென்கிற சங்கைக்கு:—

அன்றன்று கற்றபோதம் சொப்பனசுழுத்தி யவஸ்தையிலேமறந்திருந்தாலும் சாக்கிரோதயத்திலே தன்னிலே முன்னிற்பது போலப் பிராணன் போகிற மூர்ச்சையிலே மறந்திருந்தாலும் ஞானம் போகாதென் றுத்தரம்.

(ருகூ) கற்றபோதம் பின்னையெதனாற் போமென்கிற சங்கைக்கு:—

வேதாந்தத்திற்கு மேற்பட்ட பிரமாண மொன்றுண்டானா லதனாற் போகிறதேயல்லாமற் சுழுத்தி மூர்ச்சையிலே போகிறதல்ல

ஆகையினு லத்துவித ஞானத்திற் கொன்றினுலும் வாதையில்லை யென் றுத்தரம்.

ஆனல் இந்தப்பஞ்சபூத விவேகத்தை விசாரம்பண்ணிச் சகல பிரபஞ்சத்தையுஞ் சின்மாத்திரமாய்க்கண்டு அத்துவித நிலைபெற்ற வனே சீவன்முத்தன். இந்தப்பிரமாகார நிலைபெற்றவனை யொருமோகமுங் கிட்டாதென்று பகவானுங் கீதையிலே சொல்லியிருக்கிருர்.

ஏழாவது பஞ்சபூதவிவேகம் முற்றிற்று.

ஆகச்சங்கை-௩௯.

சிவமயம்.

எட்டாவது

பஞ்சகோசவிவேகம்.

ஸ்ரீ வித்தியாரண்ணியஸ்வாமிகள், ஏழைகளிடத்திற் கிருபையினாலே பஞ்சகோசவிவேகத்தினு லெளிதாய் பிரமத்தை யறிவிக்கும்படி.

(க) தைத்திரியமென்கிற உபநிஷத்திலே குகைக் குள்ளிருக்கிற பிரமத்தை யறிந்தால் முத்தியுண்டென்று சொன்னதற் கர்த்தமேதென்கிற சங்கைக்கு:—

தேகத்திற் குட்பட்டது பிராணன், பிராணனுக்குட்பட்டது மனம். மனதிற் குட்பட்டது விஞ்ஞானம். விஞ்ஞானத்திற் குட்பட்டது ஆநந்தம். இவ்வைந்துங் குகை. இதற்கன்னியமா யிருக்கிறவர் ஆத்மாவென் றுத்தரம்.

(உ) இவ்வைந்தையுந் தானே யாத்மாவென்று சகலவாதிகளும் இலௌகீகருஞ் சொல்லுகையால், இவைகளைத் தள்ளுவ தெப்படியென்கிற சங்கைக்கு:—

பிதா புசித்த அன்னவீரியத்தினு லுண்டாகையாலும், அன்னத்தினல் வர்த்திக்கையாலும் அன்னமயமாகிற சரீரத்தைத் தானென்னல் கூடாது. தேகத்திற்குள்ளிருக்கின்ற விந்திரியங்களை யேவுகின்றவனுய்ப் பல தாரதன்மியத்தினுற் றிரிசிய § மாக விருக்கின்ற பிராணமயனையுந் தானென்னக்கூடாது. தேகத்திலே நானென்கிற புத்தியும் வீடுமாடுகளிலே எனதென்கிற வபிமானத்தையும் பண்ணிக்கொண்டு காமக்குரோத முதலான வவஸ்தைகளி லுழலக்கண்ட

---

§ திரிசியம்-காணப்படுவது.

மனோமயனையுந் தானென்னக்கூடாது. காய்ச்சினவிரும்பினுண்டை போலச் சாக்கிரத்தில் நாசிகைபரியந்தங் கலந்துநின்று சுழுத்தியி லணைந்துபோகின்ற விஞ்ஞான மயனையுந் தானென்னக் கூடாது. புண்ணிய போகத்திலுஞ் சுழுத்தியிலும் அந்தர்முகமா யாநந்தப் பிர திவிம்பத்துடனே கூடிக் கணப்போதிலே நஷ்டமாய்ப்போகின்ற வாநந்தமயனையுந் தானென்னக்கூடா தென் றுத்தரம்.

(ங) இப்படி யிந்த வைந்துமே ஆத்மாவல்லவென்று போனால் இதற் கன்னியமாக ஆத்மாவை வேறேகாணோமென்கிற சங்கை க்கு:—

பஞ்சகோசங்களை யதற்குச்சொன்ன லக்ஷணத்துடனே தோற் றுவித்து அப்பாலினி யொன்றுங் காணோமென் றிருக்கிற விம்பசை தன்னியமே ஆத்மாவென் றுத்தரம்.

(ச) இந்தப் பஞ்சகோசங்களை ஆத்மா கண்டால் ஆத்மாவைக் காண்கிறவ ராரென்கிற சங்கைக்கு:—

சுதசித்த சைதன்னியமாயிருக்கிற வாத்மா, சடங்களையெல்லா மறிவர். தாம் சடமாகாதபடியினால் ஒன்றினாலுமறியப் படாரென் றுத்தரம்.

(ரு) அறிவாயிருந்தும்,ஒன்றினாலு மறியப்படாதபோதேஆத்மா அறிவென்ப தெப்படி யென்கிற சங்கைக்கு:—

* வெல்லத்திற்குத் தன்னுடைய ரசந் தன்னாலநுபவிக்கப்படா திருந்தாலும் அன்னியமாயிருக்கிற விந்திரியங்களினா லநுபவிக்கப்

[இதுமூலபாடம்.]

* மதுரசுபாவமா யன்னியங்கட்கு மதுரங்கொடுக்கும் வெல்ல த்திற்கு அன்னியங்களால் மதுரஞ் சம்பாதிக்கவேண்டுமென்னும் இச்சையின்றாம். அன்றியும் தனக்கு மதுரங்கொடுக்கும் மற்றோர் பொருளுமின்றாம். ஆயினும் வெல்லத்திற்கு மதுரம் சுபாவம்போல என்று மூலபாடம்.

பட்டது கொண்டு, மதுரஞ் சுபாவமென்றதுபோலச் சகலத்தையு மறிகின்ற ஆத்மாவிற்குத் தான் அறிவென்பதற்குச் சந்தேகந்தேவை யில்லையென் றுத்தரம்.

(சு) அறியப்பட்டது பிரமமோ அறியப்படாதது பிரமமோவெ ன்கிற சங்கைக்கு:—

இந்த விருவகையுமல்ல. இதற்கப்பாற்பட்டது பிரமமென் றுத் தரம்.

(எ) இப்படியிருந்தா லவனை யறிவ தெப்படி யென்கிற சங்கை க்கு:—

எனக்கு நாக்குண்டோ இல்லையோ வென்கிற சொற்போல அறிவாயிருந்தும், அறிவெப்படி யிருக்குமென்று கேட்டவுனக்கு லச் சையில்லையோ வென் றுத்தரம்.

(அ) அஞ்ஞானியா யிருக்கிறவனுக்குப் பிரமநிச்சயம் வர வழி யாடேதென்கிற சங்கைக்கு:—

அறிவினாற் காண்பித்தவெல்லாஞ் சடமாய்ப்போனாலும் நித்தி யபோதமாயிருக்கின்ற வறிவே, பிரமமென்று காணவேண்டு மென் றுத்தரம்.

(கூ) இந்த, அறிவாயிருக்கிற வாத்மாவே பிரமமானால் சச்சிதா நந்தமென்கிற லக்ஷணத்திலே சித்தில்லாத லக்ஷணத்தை யேன்சொ ல்லவில்லை யென்கிற சங்கைக்கு:—

இப்படி யறிவாயிருக்கிற தான் எப்போது முண்டென்றிருக்கை யினாலும், ஒருகாலத்தினுமில்லையென்று போகாதபடியினாலும் ஆத் மா சத்தென்பதுகூடும். மாயாகற்பிதமாயிருக்கிற காலதேசவஸ்துக் களை யாத்மா கடந்தபொருளானபடியினா லிந்தமூன்றினாலும் வாதை யற்றது ஆநந்தமென்பது கூடுமென் றுத்தரம்.

(கO) இப்படிக்கொத்த ஆத்மா வெப்படிக்கொத்தவரென்கிற சங்கைக்கு:—

இந்திரியங்கட்கு விஷயமாகாதபடியினலே இப்படிக்கொத்தவரென்று சொல்லக்கூடாது. தானக விருக்கிறபடியினலே அப்படிக்கொத்தவரென்று பரோக்ஷமாகவுஞ் சொல்லக்கூடாது. இப்படி யிருவகையினுலுஞ் சொல்லப்படாதவரே ஆத்மாவென் றுத்தரம்.

(கக) இப்படியே நிர்ணயமானல் இவன் சீவனென்றும், இவன் ஈசுரனென்றும், மஹாவாக்கியத்தின விருவகைக்கு மைக்கியம் வந்தால் மோக்ஷமென்றுசொன்ன வேதவாக்கியமெப்படிக் கூடுமென்கிற சங்கைக்கு:—

ஒரு புருஷனுக்குப் புத்திரபௌத்திராதிகளைக்குறித்துத் தகப்பன் பாட்டனென்றுவந்த இரண்டுநாமமும், அந்தவுபாதிக லில்லாவிட்டா லில்லாமற்போகின்றுற்போல மாயை யவித்தை யென்னப்பட்ட இரண் டுபாதியினுலும், ஈசுரனென்றுஞ், சீவனென்றுஞ் சொல்லப்பட்டது. ஒருபிரமத்தைத்தானே உபாதிமித்தையென் றறிந்தவுடனே சீவனுமல்ல, ஈசுரனுமல்ல, நாம்பிரமந்தானே யென்கிற வையம் வருமென் றுத்தரம்.

(கஉ) இப்படிக்கொத்தஞான்த்திற்குப்பலனேதென்கிறசங்கைக்கு:

இப்படி யாத்மாவே பிரமமென்று பஞ்சகோச விவேகத்தினற் பகுத்தறிகிறவன் தானகவிருக்கின்ற பிரமத்திற்குச் சம்சாரமில்லையென்கிற வேதவாக்கியப்படிக்கு முத்தனய்ப் பிரமமாகவே யிருப்பன். இவனைக் காலத்திரயத்திலும் சம்சாரந்தொடராது. இதுவே பலனென் றுத்தரம்.

எட்டாவது பஞ்சகோசவிவேகம் - முற்றிற்று.

ஆகச்சங்கை-கஉ.

சிவமயம்.

ஒன்பதாவது

துவிதவிவேகம்.

ஸ்ரீ வித்தியாரண்ணிய ஸ்வாமிகள் உலோகாநுக்கிரக நிமித்தமாய்த் துவிதவிவேகஞ் சொல்லும்படி.

(க) துவிதமெத்தனைவிதமா யிருக்குமென்னில்:—

ஈசுரனாற் சிருஷ்டிக்கப்பட்ட துவிதமென்றும், சீவனாற்சிருஷ்டிக்கப்பட்ட துவிதமென்றும், இரண்டுவிதமாக விருக்கும். இதனிற்பஞ்சீகரணம் பண்ணின ஸ்தூலபூத பௌதிகபரியந்த முண்டான தத்துவமெல்லாம் ஈசுரசிருஷ்டியென்று சொல்லப்படும். அதற்கு மேற்பட்ட சாக்கிரமுதல், சீவன் முத்திபரியந்த முள்ள அவஸ்தைகளுடைய கற்பனையும், அந்தந்த அவஸ்தையிலே யுள்ள ஜாதிவர்ணாச்சிரம லௌகீக முறைமைமுதலான சகலகற்பனைகளுஞ் சீவசிருஷ்டியென்று சொல்லப்படும்.

இவைகளும் ஈசுர கற்பனையாலும் பிதாவினா லுண்டாக்கப்பட்ட பெண், அன்னியனாய்வந்த போகபத்தாவுக்குப் போககற்பனைக் கிடமானாற்போல நல்லது பொல்லாததென்று போககற்பனைக்கே யிடமாயின ஆகையா லிவையெல்லாஞ் சீவசிருஷ்டியென்று சொல்லப்படும்.

(உ) ஈசுரகாரியமுஞ் சீவனுடையபோகமும், ஈசுரசிருஷ்டியென்றும், சொல்வதெப்படியென்னில்.

ஈசுரனாற் சிருஷ்டிக்கப்பட்ட மண், பொன், பெண் முதலான வைகளினால் இதுவெனக்ககப்பட்டதென்று ஒருவன்சந்தோஷிக்கி றான். இதுநமக்ககப்படாமற் போயிற்றென்று ஒருவன் கிலேசிக்கிறா ன். விரத்திவந்தவன் உபேக்ஷை§யாயிருக்கிறான், இப்படியும் அப்பி ரியம், உபேக்ஷையென்று மண்முதலானவைகளிலே காணப்படுகிற மூன் றகங்காரங்களுமற்றுத் தன் சுபாவத்திலிருந்ததே ஈசுரசிருஷ் டி. மாதா உடன்பிறந்தாள் பாரியென்று வெகுவிதாகாரமாகத் தோ ற்றுகிற ஒருபிண்டந்தானே ஈசுரசிருஷ்டி அதைக்குறித்துண்டான அநேகாகாரங்களும் அந்த வாகாரத்திற்கேற்க அவனவன் மனதிலே சங்கற்பித்த சமுசாரமுஞ் சீவசிருஷ்டியென் றறிக.

(ங) பிராந்தியினாலுஞ் சொப்பனத்தினாலும் மனோராச்சியமாக க்கற்பிக்கப்பட்ட அந்தக்கரண கற்பனையெல்லாஞ் சீவசிருஷ்டியா கட்டும் சாக்கிரத்தில் பிரமாணத்தினாற் பிரமாதாவினால் அறியப்பட் ட பிரமேயங்களெல்லாஞ் சீவசிருஷ்டியென்பது கூடாதென்கிற சங் கைக்கு:—

உலோகத்திலே சகலபதார்த்தங்களையுந் தோற்றுவிக்கின்ற வெ ய்யில் அந்தப் பதார்த்தத்தின்பேரிலே விழுந்து அவைகளை யாவரித் து அந்தப் பதார்த்தத்தையடைந்து அவைகளைத் தோற்றுவிக்கிறாற் போலச் சாக்கிரத்தில் ‡பிரமாதாவிடத்தி னின்று முண்டான பிர மாணபிரமேயத்தைத்தையடைந்து அவைகளினாகாரமாய் அவைகளினஞ் ஞானத்தைத்தள்ளி அவைகளைத் தோற்றுவிக்கையினா லிப்படிச் சங் கற்பிக்கப்பட்ட சித்தவிருத்திப் பிரபஞ்சமெல்லாஞ் சீவசிருஷ்டியே யல்லாமல் ஈசுரசிருஷ்டியென்று சொல்லக்கூடாது. இப்படிச் சித்

§ உபேட்க்ஷை-அசட்டை.

‡ பிரமாதா என்றது-அந்தக்கரணம். பிரமாணம்-என்றது-அந்த க்கரணத்தின்விருத்தி. பிரமேயம்என்றது-கடாதி.

தாந்தமாயுள்ளளவில் பார்க்கின்ற விஷயமெல்லாம் ஈசுரசிருஷ்டியும் சீவசிருஷ்டியுமாகக்கூடி இரண்டிரண்டாக விருக்கும். அதில் ஈசுர சிருஷ்டியான விஷயம், சிதாபாசனாலறியப்படும். சீவசிருஷ்டியான விஷயம், சாக்ஷிஞானத்தினாற் பிரகாசிக்கப்படும். இப்படி ஈசுரசிருஷ் டியும், சீவசிருஷ்டியும், பிரிபட்டுத் தோற்றினவுடனே சீவசிருஷ்டி யைத் துடைத்தடக்கவேண்டும். அதுவேமனோநாசமென்றும், வாச னக்ஷயமென்றும், சீவன் முத்தி வருகிறதற்குச் சாதனமாகவும் சொ ல்லப்படு மென் றுத்தரம்.

(ச) ஈசுரசிருஷ்டி சீவன்முத்தி வந்தாலும் நாசப்படாம லிருக் கிறாற்போலச் சீவசிருஷ்டியுமிருந்ததனாற் சாக்ஷியாயிருக்கிற நமக்கு ஹானியேதென்கிற சங்கைக்கு:—

சுகதுக்காதி சம்சாரமெல்லாஞ் சீவசிருஷ்டி மூலமேயல்லாமல் ஈசுரசிருஷ்டியினாற் சம்சாரம் அற்பமும் வருவதில்லையே இந்தவர்த் தத்திலே சம்சயமுண்டானால் அந்வயவெதிரேக யுத்தியினால் விளங் கச்செய்விக்கிறோம். அஃதெங்ஙனென்னில் ஈசுரசிருஷ்டியுண்டோ சம்சாரமில்லையென்கிறது வெதிரேக யுத்தி இரண்டும் ஒத்துவரவே ண்டும். ஒத்துவராமல் எங்கே தடைபட்டதென்றால், சமாதி, சுழு த்தி, முதலானவேளையிலே ஈசுரசிருஷ்டி யுண்டாயிருக்கையிலும், ஒருவருக்குஞ் சுகதுக்காதி சம்சாரமில்லை, ஆகையால் அந்வயயுத்தி தட்டுப்பட்டது. பிரளயத்தில் ஈசுரசிருஷ்டி யடங்கலும் வெதிரேகி த்துப்போயிருக்கையிலும் ஒருத்தருக்குஞ் சீவன்முத்தி வாராதபடியி னால் வெதிரேகயுத்தி தட்டுப்பட்டது. ஆகையால் ஈசுரசிருஷ்டி சம் சாரத்திற்கு மூலமென்னக்கூடாது. சீவசிருஷ்டியே சம்சாரத்திற்கு மூலமென்கிறது அந்வயம். சீவசிருஷ்டி யொழிந்தவிடத்திலே சம் சாரமில்லையென்கிறது வெதிரேகம். † இந்த விரண்டும் ஒத்துவந்த

---

† வெதிரேகம்-எதிர்மறை.

தே பிரமாணம். அஃதெங்ஙனமென்னில், ஈசுரசிருஷ்டியானவெளிப்பிரபஞ்ச மொழிந்திருக்கையிலும் சொப்பனத்தில் சீவசிருஷ்டி அந்வயித்ததுகொண்டு சுகதுக்காதிசம்சாரமும் அவ்விடத்திலே அந்வயிக்கக் + கண்டோம், சமாதிசுழுத்தி முதலானவேளையில் ஈசுரசிருஷ்டியான பிரபஞ்சமிருக்கையிலுஞ் சீவசிருஷ்டியான வந்தக்கரண கற்பனை வெதிரேகித்ததுகொண்டு சுகதுக்காதி சம்சாரமும் வெதிரேகித்துக்காணப்பட்டது. ஆகையால் சீவசிருஷ்டியே சகலசம்சாரத்திற்கு மூலமென் றுத்தரம்.

(ரு) இரண்டு சிருஷ்டியுங்கூடி விளங்குகிற சாக்கிராவஸ்தையில் சீவசிருஷ்டி யொழிந்தவனே சீவன்முத்தன். இன்னமொருயுத்தி யேதென்கிற சங்கைக்கு:—

தன்கண்ணிற் காணுமற் றூரதேசத்திலே நெடுங்காலந் தன் பிள்ளை யிறந்துபோயிருக்கையிலும், நம்முடைய பிள்ளையிருக்கிறானென்கிற சீவசிருஷ்டியிருந்து சுகத்தைக்கொடுத்தது. அந்தக்காலத்தில் ஒருவன்வந்து உன்பிள்ளைசெத்தானென்று சொல்லக்கேட்டுநம்முடையபிள்ளையை யிழந்தோமென்று சீவசிருஷ்டி மாறினவுடனே துக்கத்தைக்கொடுத்தது. அவன் செத்துப்போயிருக்கையிலும் அந்த வார்த்தையைக்கேளாம லிருந்தகாலமெல்லாஞ் சீவசிருஷ்டியிருந்து சுகத்தைக்கொடுத்தது. ஆகையினுற் சகலபிராணிகளுக்கும் பந்தப்படுத்துகிறது அந்தக்கரணப் பிரபஞ்சமே யல்லாமல் ஈசுரப்பிரபஞ்சமல்ல. ஆகையால் அந்தக்கரணப் பிரபஞ்சமாகிய சீவசிருஷ்டியைத் துடைத்தடக்கவேண்டுமென் றுத்தரம்.

(சு) ஆனுல், அந்தக்கரணப் பிரபஞ்சத்திற்கு முன்னிலையான மூலம், ஈசுரசிருஷ்டியானபடியினுல் ஈசுரசிருஷ்டியொழிந்தபின்பே அத்துவிதம்வரவேண்டுமென்கிற பரவாதி * சங்கைக்கு:—

---

* பரவாதி-அந்கியசமயி.

+ அந்வயிக்க-தோற்ற.

சீவர்களுடைய யுத்தியோகத்தினாலே ஈசுரப்பிரபஞ்சம் அழிப்பதுமல்ல. சிருஷ்டிப்பதுமல்ல, ஈசுர சங்கற்பத்தின்படியே உண்டாகிறது. அவருடைய சங்கற்பத்தின்படியே பிரளயத்திலே ஈசுரசிருஷ்டியெல்லா மொழிந்தவிடத்திலேயும் அத்துவிதமே ஒருவருக்குங் கூடாதபடியினாலே சாஸ்திரமுதலான யோகசாதனங்களைக்கொண்டு ஈசுரசிருஷ்டிநடக்கிறகாலத்திலே தானே அத்வைதஞானத்திற்கு விரோதியாயிருக்கிற சீவசிருஷ்டியைமாற்றி அத்துவிதம்பெறலாம். ஆனபடியினாலே அதுநமக்குச் சாதனமுமாம். அதுநம்மாலே அழிக்கப்படுகிறதுமல்ல. இப்படி ஈசுரத் துவிதத்திற்குஞ் சீவத்துவிதத்திற்கும் சொல்லப்பட்டது ஆகையால் ஈசுர சிருஷ்டி நம்மாலழிக்கப்படாதென் றுத்தரம்.

(எ) சீவத் துவிதம் பந்தப்படுத்துமென்கிறபடியினாற் சீவத்துவிதமின்னபடியென்றும், அதனையழிப்ப தின்னபடியென்றும், பிரமாணமாகச் சொல்லவேண்டுமென்கிற சங்கைக்கு:—

சாஸ்திரீயமென்றும் அசாஸ்திரீயமென்றும் சீவத்துவிதம் இரண்டுவிதமாகவிருக்கும். அதிலே சாஸ்திரீயமாவது, வேதாந்தசாஸ்திரஞ்சொன்னபடிகேட்டு மனதிலே நிர்ணயித்த தத்துவசித்தாந்தயுத்திக்கிரமமுதலான அந்தக்கரணப்பிரபஞ்சம். அசாஸ்திரீயமாவது, சாஸ்திரத்தைக்கடந்து பிரபஞ்சத்தைப் பிரமாணமாக வெண்ணி அந்தக்கட்டின்படியே நிர்ணயிக்கின்ற அந்தக்கரணப்பிரபஞ்சம். இது தீவிரமென்றும் மந்தமென்றும் இருவகையாகவிருக்கும். இதனிற் காரியபரியந்த நடக்கிற காமக்குரோதாதிப் பிரபஞ்சந் தீவிரமென்று சொல்லப்படும். பிரவிருத்தியற்றுப் பிரபஞ்சத்தைக்குறித்துச் சங்கற்பிக்கிற மனோராச்சியப் பிரபஞ்சமெல்லாம் மந்தமென்றும் சொல்லப்படும். இந்த விருவகையும் காணவேண்டுமென்கிறவன் சிரவணத்திற்குவருமுன்பே சாதனமப்பியாசிக்கிற காலத்திலேதானே தவிர்க்க

வேண்டும். இல்லையேல் கேள்வியில் சித்தம்ஒருமியாது. ஆனாற்கேள்விமுடியுமட்டுந் தவிர்ந்து திடமானபிற்பாடுதான் அசாஸ்திரீயப் பிரபஞ்சம்வரலாமோவென்னில், வரலாகாது. வந்தால் சீவன்முத்தி கூடாது ஆதியிலே தவிர்ந்ததுஞானம் வேண்டுமென்றும், அறிந்தபின் தவிருகிறது சீவன்முத்திக்காகவும், ஆகையால் ஞானம்வந்தபின் அந்தக்கரணப் பிரபஞ்சத்தைத் தவிராதிருந்தால் காமாதிப் பிரவிருத்தியிலே முயன்று சுகதுக்காதிகளிலே பந்தப்படுகிறவனுக்கு நிரந்தரம் நித்தியமுத்தனாய் நிரதிசயாநந்தமா யிருக்கிறவன் நானென்று நில்லாமல் மறைபடுகையினாலே சீவன்முத்திகூடாது. சீவன்முத்தி வேண்டாம் பிரமசொரூபமான அவஸ்தாத்திரய சாக்ஷியே நாமென்று பிரித்தறிந்ததே முத்தியென்கிற சாஸ்திரமே போதுமென்னில், இப்படிவந்ததுகொண்டு சந்தோஷிக்கிறவனானால் குருசந்நிதானத்திலே வேதாந்தசாஸ்திர சிரவணமாத்திரம் பண்ணினதுகொண்டு சுவர்க்கமுண்டென்கிற சாஸ்திரமே உனக்குப்போதுமென் றுத்தரம்.

(அ) அசுராதி பீடைகளும் புண்ணியட்சயம் வந் தெரிந்துவிழுகிறபோகங்களையுங்கண்டு சுவர்க்கத்தி லிச்சை யில்லையென்கிற சங்கைக்கு:—

எழுபத்தொரு சதுர்யுகம் ஆநந்தபோகம்புசிக்கிற சுவர்க்கத்திலொவ்வொரு காலத்திலே வருகிற அசுர பீடைகண்டதிலே வெறுப்புவந்து சுவர்க்கம் வேண்டாமென்கிற உனக்கு அனந்தகோடி செனனமரணாதி சம்சாரத்திற்கு மூலமான அந்தக்கரணப்பிரபஞ்சமுந் தவிர்ந்து சீவன்முத்தியப்பியாசிக்கவேண்டும். இற்றைவரைக்குங் கேட்டவேதாந்த சாஸ்திரங்களுக்கெல்லாந் தாற்பரியம், சாக்ஷியே நானென்று பற்றின புத்தி மாறாம லிருக்கவேண்டுமென்றும் சரீராதிகளிலே நானென்கிற புத்திவாராமல் மறிக்கவேண்டுமென்றும் அதைத்தொட் டபிமானத்திற் கிடமான அகிலப்பிரபஞ்சமும் மெய்யென்

றுபாராமற் பொய்யென்று திடம்பண்ணவேண்டுமென்றுங் குவிந்த படியினால், இப்படிக்கேட்ட வர்த்தத்தைவிட்டுப்போட்டு இதற்கு விபரீதமான அசுத்தபுத்தியைப் பண்ணிக்கொண்டு அசாஸ்திரீயப் பிரபஞ்சந் தவிரமாட்டேனென்றால் அப்பியாசித்த சாஸ்திரம் வாக்கிலே.பாத்திரங் கிளிப்பிள்ளைக்குச் சரியாய் அசுத்தப் பிரவிர்த்தியினாலே தத்துவஞானியும் நாயுஞ் சரியென்றுவரும். இம்மாத்திரமுமல்ல மூன்று விற்றைவரையுஞ் சம்சாரத்திலே பந்தப்படுத்தினது. தன்னந்தக்கரணதோஷமென்றே யுள்ளுவது. இப்போது தத்துவஞானமப்பியாசித்துஞ் சீவன்முத்திவேண்டாம் அந்தக்கரணப்பிரபஞ்சமே கைவிடப்படாதென்றால் இவன் கற்றஞானமென்ன, செய்கிற அக்கிரமமென்னவென் றெல்லாருடைய வந்தக்கரண தோஷத்தினாலும் பந்தப்படுவன் ஆகையால்; அந்தக்கரண கற்பனையை நன்றாய்த் தவிர்ந்து சாக்ஷியே நானென்று நின்று அந்தக்கரணத்தைச் சாக்ஷியிடத்திலூன்றிக்கொண்டு சரீராதிசகலசம்சாரத்தையுமறந்து சகலலோகத்திலும் பட்டினத்துப்பிள்ளையைப்போலப் பூசிதையடைந்து ஆநந்தாவரணத்தைத் தள்ளிச் சீவன்முத்தியான பரப்பிரம மாகலாமென் றுத்தரம்.

(கூ) இப்படிச் சீவசிருஷ்டி பந்தப்படுத்துமானாற் றீவிரப்பிரபஞ்சத்தைக் கைவிடுகிறோம் காரியத்திற்கு வாராதமந்தமிருந்தது கொண்டு ஹானியேதென்கிற சங்கைக்கு:—

மனோராச்சியம் சகல பிரபஞ்சவிருத்திக்குந் திடப்பட்டவதுசந்தானமான பீஜமானபடியினாற் ஜெனனமரணத்திற்கு மூலமென்றறிந்ததுமனோராச்சியத்தை முந்தித் தவிர்க்கவேண்டும். இப்படி இரும்பைக்கொண் டிரும்பை இராவுகிறாற்போலச் சாஸ்திரீயப் பிரபஞ்சத்தைக்கொண் டசாஸ்திரீயப் பிரபஞ்ச மிரண்டையுந் தள்ளிப் பின்பு பிணஞ்சுடுதடிபோலச் சாஸ்திரீயப்பிரபஞ்சத்தையுந் தவிர்ந்து தானே தானாய்த்திடப்பட்டதே சீவன்முத்தியென் றுத்தரம்.

இப்படிச் சாஸ்திரீய மசாஸ்திரீய மிரண்டையுந் தவிர்ந்து தானேதானாய் அலைச்சலறநின்றவிடஞ் சீவன்முத்தி. ஆதலா லிந்தப் பிரகரணத்தில் ஜீவசிருஷ்டியை ஈசுரசிருஷ்டியினின்றும் விவேசனம்பண்ணிக் காட்டப்பட்டதென்றறிக.

ஒன்பதாவது துவிதவிவேகம் - முற்றிற்று.

ஆகச்சங்கை-கூ.

சிவமயம்.

பத்தாவது

மஹாவாக்கிய விவேகம்.

ஸ்ரீ வித்தியாரண்ணிய ஸ்வாமிகள், லோகோபகாரமாய் மஹாவாக்கிய விவேகஞ் சொல்லும்படி.

(க) மஹாவாக்கியமென்பதெத்தனையென்கிற சங்கைக்கு:—

நாலு வேதங்களினும், முடிந்தபொருளையே சொல்லுகிற நாலு மஹாவாக்கியமென்று சொல்லப்படுமென் றுத்தரம்.

(உ) அதற்கர்த்த மெப்படி யென்கிற சங்கைக்கு:—

ஞானவடிவாயிருக்கிறதே பிரமமென்று இருக்குவேதஞ் சொல்லாநின்றது. நானே யந்தப்பிரமமென்று யசுர்வேதஞ் சொல்லாநின்றது. நீயதுவாகின்றாயென்று சாமவேதஞ் சொல்லாநின்றது. இந்தவாத்மாவே பிரமமென் றதர்வண வேதஞ்சொல்லாநின்ற தென் றுத்தரம்.

(ங) இருக்குவேதத்திற்சொன்ன வர்த்தமெங்கேயிருக்கிறதென்கிற சங்கைக்கு:—

யாதோரறிவினாற் சத்தமுதலான விஷயங்களையு மறியப்படுகிறது அந்தப்போதமே பிரமமென் றுத்தரம்.

(ச) இப்படிக்கொத்த பிரமமெத்தனை யுண்டென்கிற சங்கைக்கு:—

மும்மூர்த்திகண் முதலான தேவதைகளிடத்திலும், மநுடர் மிருகமுதலான விடங்களிலுஞ், சைதன்னிய மொன்றேயொழிய விரண்டில்லையென் றுத்தரம்.

(ரு) இப்படி முந்தின வாக்கியத்தினல் ஞானநிர்ணய மானல், மற்ற மூன்று வாக்கியத்திற்கு மர்த்தமேதென்கிற சங்கைக்கு:—

பரிபூரணமா யிருக்கிற பரமாத்மாவே, இந்தத்தேகத்திலே புத்திக்குச் சாக்ஷியாயிருக்கிற சைதன்னியம். இப்படித்தானக விருக்கிற பிரமமே அஹமென்று யசுர்வேதஞ் சொல்லாநின்றது. சீவனுடைய தேகேந்திரியாதிகட் கப்பாற் பட்டிருக்கிறவஸ்து, இந்தப்பிரமமானபடியினலே, நீயே சகத்காரணப் பிரமமென்று சாமவேதஞ் சொல்லாநின்றது. இப்படிச் சுயம்பிரகாசமாக விருக்கிற வாத்மா தானே பிரமமல்லாமல் வேறொன்றுமல்லவென் றதர்வண வேதஞ்சொல்லாநின்றதென் றுத்தரம்.

பத்தாவது மஹாவாக்கியவிவேகம் - முற்றிற்று.

ஆகச்சங்கை-ரு.

ௐ

சிவமயம்.

பதினோராவது.

யோகாநந்தம்.

ஸ்ரீ வித்தியாரண்ணியஸ்வாமிகள் தீபிகாபஞ்சகம், விவேகாபஞ்சகம் ஆகப் பத்துஞ்சொல்லி இந்தப்பத்திலுஞ் சொன்னபடி பிரமத்தைப் பகுத்தறிந்தவன் சகலதுக்கமும் போய்த் தடையற்ற வாநந்தத்தை யடைவனென்கிறதை ஆநந்தபஞ்சகத்தினாலே வெளிபண்ணும்படி.

(க) பிரமஞானத்தி லிந்த விருவகைப் பிரயோசனமு முண்டென்கிறதற்குப் பிரமாணமேது? அந்தஞானாநந்த மெத்தனைவிதம்? கெதமித்தையடைந்தவரார்? எப்படியடைந்தார்கள்? அந்தவடைகிற பிரமமெதனா லாநந்தமாயிருக்கும் என்கிற வைந்து சங்கைக்கு:—

பிரமவித்துப் பரத்தையடைவன். ஆத்மஞானி சகலசோகமுங் கடப்பன். பிரமரசம் புசித்தவனுக்கேயாநந்தம். மற்றவனுக்கில்லை. சகலத்தையுந் தானாய்க்கண்டவனுக்கே பயம்போம். தொய்த⁕மாய்க்கண்டவனுக்கே பயம். பிரமாநந்தத்தையறிந்தால், ஒருக்காலுமொன்று நிமித்தமாயும் பயமில்லை. ஞானியைக் கர்மாக்கினிகிட்டாது. பிரமத்தை யறிந்தவுடனே சகலபாசமு நசிக்கும். பரத்தையறிந்தால் இருதயக்கிரந்தியும் சகல சந்தேகங்களும் வெந்துபோம். ஞானிக்கொருக்காலும் ஜெனன மரணாதிகளில்லை. பிரமத்தை யறிந்தவன்

⁕ தொய்தம்-துவிதம்.

பிரமமே யாவனென் றிப்படி முழங்குகிற வேதபுராணங்க ளெல்லாம் பிரமாணம்.

பிரமாநந்தம், வித்தியாநந்தம், விஷயாநந்தம், என்று ஞானநந்த மூன்றுவிதமாயிருக்கும்.

முன் வருணனிடத்தில் பிருகுகேட்டுப்பெற்றார். சனற்குமாரரிடத்திலும் நாரதர் பெற்றார்.

சகலரும் ஆநந்தத்திலே பிறந்து ஆநந்தத்திலேயிருந்து ஆநந்தமாத்திரமாய் மிஞ்சுகையினாலே, நாமே அத்துவிதாநந்த மென்கிற வழியாக வடைந்தார்கள்.

திரிபுடியில்லாதபடியினால், பிரமமேயாநந்தமென்பதென் றுத்தரம்.

(உ) திரிபுடியாவதெது, திரிபுடியிலே யெப்படிச் சுகமில்லை யென்கிற சங்கைக்கு:—

விஞ்ஞான மயனென்கிற ஞாதுரு † வும், மனோமயனென்கிற ஞானமும், விஷயங்களென்கிற ஞேயமும் திரிபுடியென்பது. விஷங்கலந்த தேன்போல இந்தத்திரிபுடியிலேவருகிற விஷயசுகம், ஆயிரந் துக்கத்தோடே கூடினது கொண்டு சுகமல்லவென் றுத்தரம்.

(ந) அத்துவிதத்திலே யெப்படித் திரிபுடியில்லையென்கிற சங்கைக்கு:—

பூதோற்பத்திக்குமுன் அகண்ட ஆநந்தமானது சமாதி சுழுத்தி மூர்ச்சைபோலத் திரிபுடி யற்றிருக்குமென் றுத்தரம்.

---

† ஞாதுரு-காண்பான். ஞானம்-காட்சி. ஞேயம்-காணப்படு பொருப்பு.

(ச) இப்படியானுற் ஞெய்தத்திலே யாநந்தமில்லாததுபோல அத்துவிதத்திலும் ஆநந்தமில்லை. உண்டானு லநுபவிக்கவேண்டும் அதற் கங்கே திரிபுடியுமில்லையென்கிற சங்கைக்கு:—

திரிபுடியற்றவிடத்திலே அத்தொய்தமென்றும், அதிலாநந்த மென்றும் இரண்டில்லை. அத்தொய்தந்தானே ஆநந்தசொரூபமென் றுத்தரம்.

(ரு) அப்படிக்கொத்த வாநந்த முண்டென்கிறதற்குப் பிரமாண மேதென்கிற சங்கைக்கு:—

தானுகத்தோற்றின வஸ்துவிற்குப் பிரமாணந் தேவையில்லை யென் றுத்தரம்.

(சூ) அத்தொய்தாநந்தந் தானுய்த் தோற்றுமென்கிறது சொன் மாத்திரமே யொழியக் காணப்படாதோ வென்கிற சங்கைக்கு:—

சுழுத்திபோல அறிகவென் றுத்தரம்.

(எ) சுழுத்தியிலே யத்துவிதாநந்தந் தானுக விளங்குகிறதற்குப் பிரமாணமேதென்கிற சங்கைக்கு:—

சுழுத்தியிலே யிந்திரியமும் × திருஷ்டாந்தமும் இல்லாம லிரு க்கையிலும் நான்சுகமாயிருந்தே னென்கிற வுன்னுடைய வநுபவமே பிரமாணமென் றுத்தரம்.

(அ) சுழுத்தி யாநந்தமல்ல, விக்ஷேப துக்கமில்லாததுகொண்டு சுகமென் முரோபிக்கிறீ ரென்கிற சங்கைக்கு:—

சுழுத்தியிலே சுகமேயில்லாவிட்டால், பாய் தலையணை முதலா ன சாதனமேன் றேடுகிறார்களென் றுத்தரம்.

× திருஷ்டாந்தம் என்றது-அன்னியன் சுழுத்தி.

(கூ) துக்கம்போகத்தக்கனவாகப் பாய் தலையணை தேடுகிறதே யல்லாமல் சுழுத்தியிலே சுகமில்லை யென்கிற சங்கைக்கு:—

அப்படியானால் வியாதிக்காரருக்கும் பாய் தலையணையைக் கண்டவுடனே துக்கம்போகவேண்டும். அப்படியுங்காணோமே ஆகையினாலே நித்திரைக்குச் சாதனமேயல்லாம லாநந்தத்திற்குச் சாதனமல்லவென் றுத்தரம்.

(க0) ஆனால் சுழுத்தி யாநந்தத்திற்குச் சாதனமேதென்கிற சங்கைக்கு:—

ஜாக்கிர முதலான விக்ஷேபத்திலே † நொந்தமனது சுழுத்தியிலே ஆத்மாவை நாடினவுடனே அதிலேஆநந்தம் பிரதிவிம்பிக்கும்; அந்தவாநந்தத்தை யநுபவிக்கையினாலே ஒரு துக்கமுந் தோன்றாது ஆகையினாலே, சுழுத்தி யாநந்தமாகவேண்டும். இல்லாதிருந்தாற் சகலருக்கு நாட்டமாகாது. வேதத்திலே ஐந்து திருஷ்டாந்தமுஞ் சொல்லாதென் றுத்தரம்.

(கக) சுழுத்தி யாநந்தமென்கிறதற்குச் சுருதியிற்சொன்ன திருஷ்டாந்த மைந்துமேதென்கிற சங்கைக்கு:—

வல்லூறு, பருந்து, குழந்தை, மஹாராஜா, மஹாப்பிராமணனென் றுத்தரம்.

(க௨) இந்த வைந்து மெந்தவிதத்திலே திருஷ்டாந்தமென்கிற சங்கைக்கு:—

கயிற்றிலே கட்டுப்பட்ட வல்லூறு எந்தத்திக்கி லோடினாலுந் தன்னிலையிலேவந் திளைப்பாறு மதுபோல, ஜீவோபாதியான மனதும் புண்ணிய பாவங்களைப் புசிக்கச் சாக்கிரத்திலுஞ் சொப்பனத்தி

† விக்ஷேபம்-கலக்கம்.

னுஞ் சுழன்று சுழுத்தியிலே வந்து சுகமடையவேண்டும். பருந்தான து கூட்டிலே விழுகிறபோ ததிவேகமாய் விழுகிறாற்போலச் சீவனு ம், ஒன்றினாலு மறிபடாமற் சுழுத்திச்சுகத்தை நாடுகையினாலே சுழு த்தி ஆநந்தமாகவேண்டும். மூலையுண்டு மஞ்சத்திற்கிடக்கிறகுழந்தை ராகத்துவேஷ மில்லாதபடியினால் ஆநந்தமாயிருப்பதுபோல ராகத் துவேஷ மில்லாத சுழுத்தியும் ஆநந்தமாகவேண்டும். சகல பூமியுந் தன்வசம்பண்ணிக்கொண்ட விராஜா, பின்பு திருப்தனாயிருக்கிறாற் போல திருப்தியாயிருக்கிற சுழுத்தியும் ஆநந்தமாகவேண்டும். ஜீவன் முத்தனாயிருக்கிற மஹாப்பிராமணன், இனிக் கற்கவேண்டியதில்லை யென்று கவலை கெட்டிருக்கிறாற்போலக் கவலையில்லாத சுழுத்தியும் ஆநந்தமாகவேண்டு மென் றுத்தரம்.

(கரு) இப்படிச் சீவன் முத்தியடைந்து பந்தம்போனவனுக்குச் சுகமேயல்லாமல் மற்றப்பேருக்குச் சுகமில்லையோ வென்கிற சங்கை க்கு:—

நன்றாக விடுபட்டவனுக்கும் ‡ நன்றாகப் பந்தப்பட்டவனுக் குஞ் * சுகமுண்டு, நடுநாடனுக்குச் சுகமில்லையென் றுத்தரம்.

(கசா) சுழுத்தியிலே யிதர வியாபாரமேன் றெரியவில்லையென் கிற சங்கைக்கு:—

ஸ்திரீயாலே தழுவப்பட்டவனுக்கு வீட்டுக்காரியமும் வெளி யில் நடக்கிறகாரியமுந் தெரியாததுபோலச் சுழுத்தியாநந்தத்திலழுந் தினவனுக்கு நாடியிற்குட் சொப்பனமும் வெளியிற் சாக்கிரப் பிரப ஞ்சமும் இருவகையுந் தெரியாது. எழுந்திருந்தபின் சுகமாய்த் தூங் கினேன் ஒன்றுமறியே னென்கிறதினாலே அந்த வஞ்ஞானமும் ஆந

‡ விடுபட்டவன்-முத்தன்.

* பந்தப்பட்டவன்-பெத்தன்.

க்தமயமுங் காணப்படுகிறது. மனோமயனும் விஞ்ஞானமயனும் அஞ்ஞானத்திலே யமுந்தினவேளை ஆநந்தமயனென்று சொல்லப்படும். இப்படி அஞ்ஞானவிருத்தி சூக்ஷமமென்றும், மனோவிருத்தி ஸ்தூலமென்றும், வேதஞ்சொல்லுகிற தென் றுத்தரம்.

(கரு) இப்படிப் பிரமாநந்தத்திலேகமாயமுந்தியிருந்த ஜீவன் விக்ஷேபத்திலேன் விழிக்கிறனென்கிற சங்கைக்கு:—

சென்மாந்தர கர்மத்தினாலே விழிக்கிறன். விழித்தும்அவ்விடத்துப் பக்ஷபாதம்விடாமற் சற்றுப்போது நிர்விஷயமாயிருக்கிறன். பின்பு, கர்மங்க ளதைமறக்கடித் திழுத்துப்போகிறது. ஆகையினால், நித்திரைக்கு முன்றும் பின்னும் பக்ஷபாத மிருக்கிறபடியினாலே ஆநந்தமே பிரமமாகவேண்டுமென் றுத்தரம்.

(கசா) சும்மாவிருக்கிறதும் பிரமாநந்தமானால், சோம்பலும் பிரமாநந்தமாகவேண்டு மென்கிற சங்கைக்கு—:

வேதமறிந்தவனுக்குத் தானங்கொடுக்கிறர்க ளென்கிறதைக் கேட்டு வேதம் நானன்றறிவேன் எனக்குத் தானந்தா வென்கிறவன் போல நீயும் பரியாசஞ்செய்கிறாய். குருவையுஞ் சாஸ்திரத்தையுமன்றி யாராலே பிரம மறியப்படுமென் றுத்தரம்.

(கஎ) வேதாந்தமெல்லாம் படித்தாற் போதுமோவென்கிற சங்கைக்கு:—

அர்த்தமறிந்தாலொழியப் போதாதென் றுத்தரம்.

(கஅ) விற்பத்தியினாலே அர்த்தம் பார்த்துக்கொண்டாற் போதாதோ வென்கிற சங்கைக்கு:—

சாக்ஷாத்காரம் வந்தாலொழியப் போதாதென் றுத்தரம்.

(௧௯) இனி, எப்போது சாக்ஷாத்காரம் வருமென்கிற சங்கைக்கு:—

கிருதார்த்தனாகுமளவுங் குருவை யுபாசித்தால் வருமென் றுத்தரம்.

(௨0) குருவை யுபாசித்தா லெப்படி வருமென்கிற சங்கைக்கு:—

அவர் விஷயநிமித்தமன்றியிலே வருகிற வாசனானந்தத்தையும், விஷயம் லபித்து விஷயவாசை யொழிந்தபின், அந்தர்முகமனோ விருத்தியிலே பிரதிபலிக்கிற வானந்தங்களையும், உன்னுடைய சுபாவானந்த வாசனையல்லாமல் வேறல்லவென்று காணச்சொல்லி யுபதேசிப்பாரென் றுத்தரம்.

(௨௧) சுபாவானந்தமானது பிரதிவிம்பானந்தத்தையும், வாசனானந்தத்தையும், எப்படிச் செனிப்பிக்கிறதென்கிற சங்கைக்கு:—

சுருதி யுத்தி யநுபவத்தினாலே சுழுத்திகாலத்திலே தான் பிரமானந்தமென்கிறது சுபாவசித்தமாயிருந்தாலும் அவ்விடத்திலே பிரதிவிம்பானந்தமாகிய வானந்தம் இருதயத்தைவிட்டுக் கண்டத்திலே வந்து சொப்பனத்திலே விஞ்ஞானமயராவர். நேத்திரத்திலேவந்து சாக்கிரத்திலே காய்ச்சின விரும்பிலுண்டைபோலத் தேகமெல்லாங் கலந்துநின்று உதாசீனம், சுகி, துக்கி என்று மூவகையாகவிருப்பன். இதிற் சுகி, துக்கி, இரண்டும் கர்மகாரியம். உதாசீனம் தன்சுபாவமாயிருக்கிறதென் றுத்தரம்.

(௨௨) சுகதுக்க மெத்தனைவிதம். இரண்டுமெல்லாமற் சும்மாவிருக்கிற வேளையிலே யெது தோற்றுமென்கிற சங்கைக்கு:—

வாகியபோக ÷ மென்றும், மனோராச்சியமென்றும், சுகதுக்க மிரண்டுவிதமா யிருக்கும். இவைகளின் இடைகளி லெனக்கொரு சிந்தனையுமில்லை சுகமாயிருக்கிறேனென் றெல்லாருஞ் சொல்லுகை யினால், ஆத்மா சுபாவாநந்தமென்கிறதிலே சந்தேகமில்லையென் றுத் தரம்.

(உரு) தன்னுடைய சுபாவாநந்த மிதுதானேயோ வென்கிற சங்கைக்கு:—

நீரிருக்கிறகுடத்தைத் தொட்டவுடனே காணப்படுகிற குளிர்மை தண்ணீராகாவிட்டாலும், அதுகொண்டு குடத்திலே தண்ணீருண்டென் றறிகிறாற்போல, உதாசீனவேளையிலே காணப்படுகிற சுகமும், உள்ளே அகங்காரத்தினாலே மறைபட்டிருக்கிற சுபாவாநந்தத்தின் வாசனையென்றே யுத்தரம்.

(உச) இப்படியானாற் சுபாவாநந்த மெப்போது தோற்றுமென்கிற சங்கைக்கு:—

பிரமாப்பியாசத்தினாலே, அகங்காரத்தை மறக்கமறக்கப் பிரமாநந்தசுபாவம் வெட்டவெளியாம். அகங்காரத்தை நன்றாய்மறந்தாற் சித்தமிருக்கிறபடியினாலே நித்திரையுமல்ல. தேகமும்விழாது. இப்படித் தொய்தமுந் தோற்றாமல் நித்திரையுமல்லாம லிருக்கிற பிரமாநந்த நிலை வெளியாமென்றே யுத்தரம்.

(உரு) இப்படிக்கொத்தநிலை வரத்தக்கதாகப் பிரமாப்பியாசம் பண்ணுகிற வடைவெப்படி, அதற்குப் பிரமாணமேதென்கிற சங்கைக்கு:—

பிரபஞ்சவிஷயத்திலே விழாமற் புத்தியைத்திடம் பண்ணிக்கொண்டு பிரபஞ்சத்திலே நின்று மெள்ள மெள்ள வொழியவேண்

÷ வாகியபோகம்-பகிர்முகபோகம்.

டும். யாதொருவழியாலே புத்திபேதித்தது அந்தவழியையமறுக்கவேண்டும் சஞ்சலமான மனதை யாத்மாவினிடத்திலே யசையாமனிறுத்தவேண்டும். இப்படி நிறுத்திஞல், இந்த யோகத்திஞ லியாதொன்றில் மனதுநிற்கும். யாதொரு சுகத்திற் காதியு மந்தமுமில்லை. யாதொருநிலைபெற்ருல், இனி யில்லையென்னப்பட்ட கர்மபந்தங்களிஞலுமசைக்கப்படாது, அந்தப்பிரமாநந்த மிவனை யடையுமென்கிறதே யடைவு. இப்படிச்சொன்ன கீதாவசனமே பிரமாணமென் றுத்தரம்.

(உசு) இந்த வப்பியாச மெதற் கொக்குமென்கிற சங்கைக்கு:—

தெர்ப்பை நுனியாலே சிட்டுக்குருவி சமுத்திரத்தை யிறைத்தாற்போல மநோநிக்கிரகம் பண்ணுகிறதும் கிலேசப்படாமற் சிறுகச்சிறுகப் பண்ணவேண்டும். பிரபஞ்சவிருத்தி மறக்கிறபோ தெண்ணெயற்ற விளக்குப்போல வந்தக்கரணமுஞ் சின்மாத்திரமாக வழியுமென் றுத்தரம்.

(உள) சித்தம், ஆத்மாவில் லயித்ததுகொண்டு கர்மபந்த மெப்படி விடுபடுமென்கிற சங்கைக்கு:—

கர்ம சம்சாரங்களுக்குச் சித்தமே காரணமானபடியிஞல், அந்தச்சித்தத்தைத்தானே சோதிக்கிறபோது சகல கர்மமும் விட்டுப்போமென் றுத்தரம்.

(உஅ) சித்தத்தைச் சோதிக்கிற வடைவேது, இதைச்சோதித்தால் மோக்ஷமென்பதற்கும், சோதியாதிருந்தாற் பந்தமென்பதற்கும் பிரமாணமேதென்கிற சங்கைக்கு:—

அந்தக்கரணத்தை விஷயத்திற் பற்றுப்போலப் பிரமத்திற் பற்றுவைக்கிறதே சோதிக்கிறது. அந்தக்கரணம் விஷயத்திற் பற்றிஞலசுத்தம், பிரமத்திற் பற்றிஞற் சுத்தம் ஆகையிஞலே, மனதேபந்த

த்திற்கும் முத்திக்குங் காரணமென்கிற வேதம் பிரமாணமென்றே யுத்தரம்.

(உகூ) சமாதியிலே யாநந்த மெப்படியிருக்கும், சமாதியில்லாத வேளையி லெப்படியிருப்பன், இப்படி யோகத்திலே மனது மூண்டவனுக் கடையாளமேது, இந்திரியங்கள் பலம்பண்ணிப் பிரபஞ்சத்திலிழுத்தாற் செய்காரியமேது, இவனுக்கு விஷயாநந்த மெப்படித் தோற்றுமென்கிற விந்த வைந்து சங்கைக்கு:—

சமாதியில் நிர்மலாந்தக்கரணத்திற் கொரு சூசனைதெரியுமே யல்லாமல் வாக்காலே சொல்லப்போகாது. சமாதியிலே நிச்சயித்த படிக்கு மற்றவேளையிலும் நம்பிக்கையா யிருப்பன். பரபுருஷனை யடைகிற நாரிபோல, அநுசந்தானத்திலே கரிசன § மல்லாமற் பிரபஞ்சத்தினிடத்திலே கரிசனமற்றிருப்பன். சுமையெடுக்கிறவன் சற்றுச்சற்றுவைத் திளைப்பாறுகிறாற் போலச் சிறுகச்சிறுக மறித்திந்திரியங்களைச் சமாதியிலிளைப்பாற்றுவன். அநுசந்தானத்திற்கு விரோதியாய்வந்த விஷயாநந்தமும், நெருப்பிலே விழப்போகிறவனுக்கு அதற்குத் தாமதகாரணமாகச் செய்யும் அலங்காராதிகளைப்போலத் தோற்றுமென் றுத்தரம்.

(௩0) பிரமாநு சந்தானமும், பிரபஞ்ச வியாபாரமும், ஒரு மனதிற்குச் செய்யக்கூடாதென்கிற சங்கைக்கு:—

ஞானியினுடைய மனது காக்கைக்கண்போல விரண்டிலும் போக்குவரத்தாயிருக்குமென் றுத்தரம்.

---

§ கரிசனம்-அன்பு.

(௩௧) சமாதியிலேவருகிற பிரமாநந்தத்தையும், அதற்கு + அவிரோதியாய்வருகிற விஷயாநந்தத்தையும், அநுபவிக்கிறஞானி யெப்படி யிருப்பனென்கிற சங்கைக்கு:—

இரண்டுபொஷையு மறிந்தவன்போல விருவகையாநந்தத்தையுங் கண்டுபுசித்துக் களித்திருப்பனென் றுத்தரம்.

இதனல் பிரமாநந்த கிரந்தத்திலே யோகிக்குப் பிரத்தியக்ஷமாயிருக்கிற யோகாநந்தஞ் சொல்லப்பட்டது.

பதினேராவது யோகாநந்தம் - முற்றிற்று.

ஆகச்சங்கை-௩௧.

+ அவிரோதி என்றது-பகிர்முகமாதற் கேதுவல்லாத விடய சுகத்தை.

சிவமயம்.

பன்னிரண்டாவது.

ஆத்மாநந்தம்.

யாதொருத்தருடைய மூச்சுக்காற்றுத்தானே வேதமாய் விளங்காநின்றது, யாதொருத்தர் வேதத்தினாலே சகலசகத்தையு முண்டாக்கினார், அந்த ஈசுரனாகிய ஸ்ரீ வித்தியாரண்ணிய சுவாமியை நமஸ்காரம்பண்ணி ஆத்மாநந்தத்திற் கர்த்தஞ்சொல்லும்படி.

(க) யோகியானவன் யோகத்தினாலே தன்னுடைய சுபாவாநந்தத்தை யறிவன், இனி மூடனாயிருக்கிறவனுக்குக் கதி யேதென்கிற சங்கைக்கு:—

தர்மாதர்ம வசத்தினாலே லக்ஷஞ்சன்ம மெடுப்பன் என் றுத்தரம்.

(உ) இப்படித் தள்ளிவிடலாமோ,எல்லாரிடத்திலுந் தயவுபண்ணத் தேவையில்லையோ வென்கிற சங்கைக்கு:—

நாமையோவென்றதனாற் பிரயோசனமேது, அந்தமூடன் பகிர்முகனோ அந்தர் முகனோவென்று கண்டுகொண்டு அவனவனுக்கேற்ற வுபதேசம்பண்ணுகிறோமென் றுத்தரம்.

(ங) இந்த விருவகையிலே, எவனுக் கெதை யுபதேசம் பண்ணுகிற தென்கிற சங்கைக்கு:—

பகிர்முகனாயிருக்கிற மூடனுக்குக் கர்மவுபாசனைகளை யுபதேசிக்க, அந்தர்முகனாயிருக்கிற மூடனுக்கு ஆத்மாநந்த மார்க்கத்திலே ஞானத்தை யுபதேசிக்க வென்றுத்தரம்.

(ச) கெதம், இப்படி மூடருக்காத்மாநந்த முபதேசித்தபேருண்டோ, ஆத்மாநந்த வுபதேசமாகிற தேதென்கிற சங்கைக்கு:—

யாக்கியவல்கியர், தம்முடைய பெண்சாதி மைத்திரிக் குபதேசித்தார். ஆநந்தமாயிருக்கப்பட்ட வஸ்து ஆத்மாவென்று காட்டுகிற துபதேசமென் றுத்தரம்.

(ரு) இப்படியானால், விஷயங்களெல்லா மாத்மாவல்லவோ வென்கிற சங்கைக்கு:—

பெண்சாதி, புருஷன், பிள்ளை, தனம், பசு, பிராமணச்சாதி, உலோகங்கள், தேவதைகள், வேதங்கள், பூதங்கள் சகலமும் ஆத்மாவைக்குறித்துப் பிரியமல்லாமல், இவைகளாநந்தமல்லவென்று வேதஞ்சொல்லுகிறதென் றுத்தரம்.

(சு) ஆநந்தமா யிருக்கிற விவைகளை யாநந்தமல்லவென்ப தெப்படி யென்கிற சங்கைக்கு:—

பெண்சாதிக்குப் புருஷனிடத்திலே விருப்பம்பிறந்தவேளையிலே வியாதி பசியினாலே யவனிவளை யிச்சியாததுகொண்டு பர்த்தாவைக் குறித்துவந்த வாநந்தம் இவளுடைய சுபாவமேயல்லாமல் அவனை யாநந்த மென்னக்கூடாது. புருஷனுக்குப் பெண்சாதி யாநந்தமாய்த் தோற்றுகிறபோது வியாதியினாலே யவளிவனை நத்தாதபடியினா லிந்தவாநந்தமிவனுடைய சுபாவமேயல்லாமல் அவள்பிரியவஸ்துவென்பதல்ல. முள்ளுப்போல மீசை தைத்து அழுகினுங் குழந்தையை முத்தமிட்டுக்கொள்ளுகிற வாநந்தம் பிதாவுக்குத் தன்னுடைய வாநந்தமேயல்லாமற் குழந்தையாநந்தமல்ல. சந்தோஷப்படவறியாத, இரத்னகனகாதிகளைச் சாவதானமாய் ரட்சித்துக்கொண்டு மகிழுகிறது, இவனுடைய வாநந்தமேயல்லாமல் ஐசுவரியமாநந்தமல்ல. காளைக ளிச்சியாவிட்டாலும் அதிலே பொதியெடுப்பிக்கிற சந்தோஷஞ் செட்டிக்கேயல்லாமற் காளையின்பொருட்டல்ல. நான்பிரா

மணனென்று சபையிலே பூஜையடைகிற சந்தோஷந் தனக்கே யல்லாமல் அசேதனமான ஜாதிக்கல்ல. சுவர்க்கலோகம், பிரமலோகம், நமக்குவேண்டுமென்கிற வாஞ்சை தன்னுடைய சந்தோஷமே யல்லாமல் அந்தலோகத்திற் குபகாரமாக வல்ல. சிவன் முதலான தேவர்களைப் பாவம்போகவேண்டுமென்று பூஜிக்கிறது தான் பிழைக்கும் பொருட்டே யல்லாமற் றேவர்களுக்காகவல்ல. வேதங்களை யோதுகிறது தனக்காகவேயல்லாமல் வேதங்களுக்காகவல்ல. இடம், தாகம் பாகம், உலர்த்தல், அவகாசங்களுக்காகப் பஞ்சபூதங்களை நத்துகிற சந்தோஷந் தனக்காகவேயல்லாமற் பூதங்களுக்காகவல்ல. இப்படி, ஆண்டவனடியானென்கிறது முதலானவைகளுந் தனக்காகவே யல்லாமற் பரத்துக்காகவல்ல. ஆகையினாற், சகலவிஷயத்தையுங் குறித்துத்தானே பிரியவஸ்துவல்லாமல் விஷயங்கள் பிரியவஸ்துவல்ல. ஆகையால், ஆத்மாவே யாநந்தமென்கிறதற்குச் சந்தேக மில்லையென் றுத்தரம்.

(எ) இப்படிவருகிற சந்தோஷ மெத்தனை விதமாய்ச்சொல்லப் படுமென்கிற சங்கைக்கு:—

பொன்முதலான விஷயத்திலே ஆசையென்றும், கர்மவுபாசனையிலே சிரத்தையென்றும், கிடையாதவஸ்துவிலே இச்சையென்றும், குருதேவதைகளிடத்திலே பத்தியென்றும் நான்குவிதமாய்ச் சொல்லப்படுமென் றுத்தரம்.

(அ) இந்த விஷயங்களிலிருக்கிற பிரீதிபோல, ஆத்மாவினிடத்திலு மொரு பிரீதியிருக்கிறது. அதுகொண்டு விஷயம் பிரியமல்லவென்பானே னென்கிற சங்கைக்கு:—

ஒரு விஷயத்தைவிட் டொருவிஷயத்தை நாடுகிறாற்போல, ஆத்மாவைக் கைவிடப்படாதபடியினாலே ஆத்மாவே யாநந்தம் மற்றவெல்லா மாநந்த மல்லவென் றுத்தரம்.

(கூ) வாஞ்சை துவேஷமிரண்டிற்கு மிடமற்றவரேயாத்மாவா ஞ லோட்டாங்கிளிஞ்சில்போல வுபேக்ஷைக்கிடமாஞ ரென்கிற சங் கைக்கு:—

உபேக்ஷிக்கிறவனுடைய சொரூபமானபடியினு லுபேக்ஷைக்கு விஷயமல்ல வாத்மாவென் றுத்தரம்.

(கo) வியாதி, சோபங்களாலே மூடப்பட்டவன், ஆத்மத்தியா கம்பண்ண நினைக்கிறபடியினுலே ஆத்மா, துவேஷத்திற்கு விஷய மாகட்டுமென்கிற சங்கைக்கு:—

தியாகம்பண்ண யோக்கியமான தேகத்தைத் தியாகம் பண்ணு கிருனேயல்லாமற் றியாகம்பண்ணுகிறவஞயிருக்கிறதன்னைத் தியா கம் பண்ணவில்லையென் றுத்தரம்.

(கக) இப்படி யிருவகைக்கும் விஷயமாகாத வாத்மாப்பிரியத் திற்குத்தான் விஷயமாகட்டுமென்கிற சங்கைக்கு:—

பிதாவுக்குப் புத்திரன்தானே சகல பந்துக்களைக் காட்டிலும் பிரியவஸ்துவா யிருக்கிறூற்போல வாத்மாவைக்குறித்தே சகலவிஷ யமும் பிரியமானபடியினுல், அதிகப்பிரியமானவஸ்துவே யாத்மா வல்லாமல் விஷய மல்லவென்றே றுத்தரம்.

(கஉ) இப்படி, அதிகப்பிரியவஸ்துவே யாத்மாவானுல் ஆத்மா தானே பிள்ளையாஞனென்கிற வேதத்திலும், இவன்பண்ணின புண் ணியத்தினுலே ஆத்மா தானே பிள்ளையாஞனென்றும், பிள்ளையில் லாதவனுக்குக் கதியில்லையென்றும் வேதஞ்சொல்லுகையினுலே,புத் திரன்ருனே யாத்மாவாகட்டு மென்கிற சங்கைக்கு:—

கௌணுத்மா வென்றும், மித்தை யாத்மாவென்றும், முக்கிய வாத்மாவென்று மிப்படி மூன்ருத்மா வுண்டு. ஓரோர்வகையி லோ

ரோராத்மா பிரதானமாயிருக்கும். புத்திரனே யாத்மாவென்கிற திந் தழூவகையி லொருவகையிலே யல்லாமல் முக்கியமல்ல வென்றே யுத்தரம்.

(கங) இந்தமூவகை யாத்மாவாகச் சொல்லப்பட்டதேது, இதி லெந்தவாத்மாமுக்கியம், இவைகளை வகையுடனே சொல்லு மென் கிற சங்கைக்கு:—

இந்தப்புருஷனைச் சிங்கமென்கிறதுபோலப் பிள்ளையை யாத் மாவென்கிறது கௌணம். கட்டையைக் கள்ளனென்கிறதுபோலப் பஞ்சகோசத்தைத் தானென்கிறதுமித்தை. கட்டையைக் கட்டை யென்கிறதுபோலச் சாக்ஷியைத் தானென்கிறது முக்கியம். தான் செத்தாலும் பிள்ளைகள் பிழைத்தாற்போது மென்கிறதினாலுங் குடு ம்பத்தை ரக்ஷிக்கிறதினாலுங் கௌணாத்மாவா யிருக்கிற புத்திரனே முக்கியம். நான் பருத்தேன் சிறுத்தே னென்னுமிடத்திற் றேகமே முக்கியமாய்க் கண்டாற்போல சுவர்க்கலோகம் வேண்டுமென்று கா யக் கிலேசமான தவசுபண்ணுமிடத்தில் மித்தை யாத்மாவான வக ங்காரமே முக்கியம். நான் சுயம்பிரகாசன் நிர்விகாரியென்னுமிடத் தில் முக்கியாத்மாவான சாக்ஷியே முக்கியம். ஆகையினாலே, பஞ்ச கோசங்களைத் தள்ளினாலுந் தள்ளப்படாத வாத்மாவே யாநந்தசொ ரூபரென் றுத்தரம்.

(கச) இவரைப் பிரித்தறிகிறவடை வெப்படி, தள்ளப்பட்ட பஞ்சகோசாதிகளும், ஒவ்வொருக்கா லாநந்தமாய்த் தோற்றுவானே னென்கிற சங்கைக்கு:—

தினம் மூன்றவத்தைகளுடைய போக்குவரவைக் காண்கின்ற சுயம்பிரகாச சைதன்னியமே தானென் றறியவேண்டும். மற்றப் புத் திராதி பிராண பரியந்தங்களெல்லாம், ஆத்மாவைக் கிட்டினதற்குத் தக்க வாநந்த தாரதன்மியங் காண்கிறதென் றுத்தரம்.

(கரு) ஆத்மாவைக் கிட்டக்கிட்ட வாநந்த தாரதன்மியங் காணு கிற வகை யெப்படி யென்கிற சங்கைக்கு:—

உலோகத்திலே, ஐசுவரியஞ் சுகசாதனமான படியினாலே கை விடப்படாத வாநந்தமென்று சொல்லப்படும். புத்திராதிகளுக்குப் பீடைவந்தபோ தைசுவரியத்தைக் கைவிட்டாகிலும் பிள்ளையை யிர க்ஷிக்கையினால் ஐசுவரியத்தைக்காட்டிலும் பிள்ளையே யாநந்தமாக வேண்டும். தீப்பற்றினவீட்டிலும் புத்திரனைக் கைவிட்டாகிலுந் தா னோடிப்போகையினாலே புத்திரனைக்காட்டிலுஞ் சரீரமே யாநந்தமா கவேண்டும். கொசு தூளிக்காற்றடிக்கும்போது சரீரத்தையுபேக்ஷி த்து ‡ இந்திரியங்களைப் பதனம் பண்ணுகையினாலே சரீரத்தைக் காட்டிலு மிந்திரியமே யாநந்தமாகவேண்டும். வெட்டக்கொண்டு போகிறபோது, இந்திரியங்களை யுபேக்ஷித்தாலும் பிராணாதிகளை ரக்ஷிக்கையினா லிந்திரியங்களைக் காட்டிலும் பிராணாதிகளே யாநந்த மாகவேண்டும். பிராணன்போகிறபோ திந்தப்பிராணாதிகளெல்லா மினி நமக்குத் தகாதென்று நிச்சயித்துக் கைவிட்டுப் பிராணாதிகளு ண்டாகிறபோது கூடவுமுண்டாகாமல் பிராணாதிக ணசிக்கிறபோது கூடவுநசியாமல், அசங்க சைதன்னியமாயிருக்கிற தான்றானே யொ ருக்காலுங் கைவிடப்படாத பரமாநந்த சொரூபரென் றுத்தரம்.

(கசுா) தகப்பனுக்குப்பின் அந்தவாதீனத்திலே யிருந்து புசிக்க மாட்டாத சாக்ஷியை யாத்மாவென்கிறது ஒப்பத்தகுந்ததல்ல;பாடும், பழியும், இரணமும், தன்னதாக வொப்புக்கொண்டு புசிக்கிற புத்திர னே யாத்மா வாகவேண்டும். இவனுக்குமேற் பிரியவஸ்துவு மில்லை யென்கிற சங்கைக்கு:—

முன்சொன்ன விவேகமெல்லாம் விட்டுப்போட்டுத் திரும்பவும் இப்படிச் சங்கித்தவன் சிஷ்யனோ பிரதிவாதியோ வென்றறிந்து,

---

‡ உபேக்ஷை-வெறுப்பு.

இருவகைக்கேற்ற வுத்தரஞ் சொல்லவேண்டும்,அஃதெப்படியென்று ல், சிஷ்யனுக்குச் சொல்லுகிற வுத்தரம்: பிள்ளை வருகிறதற்கு முன் னும் பிள்ளையில்லையென்கிற துக்கம். கர்ப்பத்திலே வந்தாலும் நசித் துபோமென்கிறதுக்கம். நிர்ணயப்பட்டாலும் பெற்றுப் பிழைத்த போதல்லவோ வென்கிறதுக்கம். பிறந்தபின்பு கணங்கள், பறவை தோஷ முதலானவைகளாற்றுக்கம். குமாரனானால் மூர்க்கத்தனத்தி னாலே துக்கம். பூணு நூலிட்டாற் படிக்கிறானில்லையென்கிற துக்க ம். வித்துவானானால் வேட்பிக்கவேண்டுமென்று துக்கம். எவ்வனம் வந்தாற் பரதாரகமனம் பண்ணுகிறானென்கிறதுக்கம். குடும்பியானா ற்றரித்திரப்படுகிறானென்கின்ற துக்கம். அவன்றனவானானால் நாம் காணாமற் செத்துப்போகிறோமோவென்கிற துக்கம். இப்படிப்புத்தி ரன் முதலானவைகளிலே பகுத்துப்பார்க்கிற்றுக்கந்தானே பிரதிபா திக்கிறது சுபாவந்தானேயென் றுத்தரம்.

பிரதிவாதிக்குச் சொல்லுவது: குதர்க்கசங்கையினால் இகபரம் இரண்டுமில்லாமற் கெட்டுப் போவாயென்கிற சாபந்தானென் றுத் தரம்.

(கஎ) இவர் கோபித்ததினாலே பிரதிவாதிக்கு ஹானி யேதெ ன்கிற சங்கைக்கு:—

பிரமவித்தாயிருக்கிறவன் பிரமசொரூபமானபடியினாற் சிஷ்ய னுக்கும் பிரதிவாதிக்கும் அவன்பண்ணினவநுக்கிரகமும் நிக்கிர கமு மந்தப்படியே பலிக்குமென்கிறதினாலும், பிரமவித்துக்களை விஷம ⁘ சங்கைபண்ணினவன் ஆயிரஞ் சதுர்யுகம் இரௌரவ நரக த்திலே கிடப்பனென்கிற புராணவசனத்தினாலும் பிரதிவாதிக் கநர் த்தம்வருமென் றுத்தரம்.

⁘ விஷமம்-தொந்திரவு.

(கஅ) இப்பாற்சித்தாந்த மேதாயிற்றென்கிற சங்கைக்கு:—

இப்போது சொன்னபடி பகுத்தறிந்து சாக்ஷியாயிருக்கிற தானே சகலத்திலும் பிரியவஸ்துவென் றாத்மாநந்தத்திலென்னேரமுங் களித்திருக்கிறவனுக்கே முத்தியென்பது சித்தாந்த மென் றுத்தரம்.

(கக) இந்த வாத்மாவுக்குச் சைதன்னியம்போலச் சுகமுஞ் சுபாவமேயானு லந்தக்கரணவிருத்திகளிலே சித்துமாத்திரந் தோன்றியாநந்தந்தோன்று திருப்பானேனென்கிற சங்கைக்கு:—

உஷ்ணமும் பிரகாசமுஞ் சுபாவமா யிருக்கிற அக்கினியினுடைய உஷ்ணந்தண்ணீரிலும் பிரபைவீட்டிலும் பிரிந்துகாண்கிறாற் போலவுந் தாமரைப்பூவிற்குச் சுபாவமாயிருக்கிற ரூபரசகந்தங்கள் ஒவ்வொரு விந்திரியத்தினு லொவ்வொருகுணந் தோற்றுகிறாற்போலவும் ஆத்மாவினுடைய சிதாநந்தங்களும் ஒவ்வொரு விருத்தியிலொவ்வொரு சுபாவமாய்த் தோற்றுமென் றுத்தரம்.

(உ0) எந்தவிருத்தியி லெந்தச்சுபாவந் தோற்றுமென்கிற சங்கைக்கு:—

நிர்மலமாயிருக்கிற சாத்வீகவிருத்தியி லாத்மாவினுடைய சித்துமாநந்தமுந்தோற்றும். மலினமாயிருக்கிற ராஜசவிருத்தியி லாநந்தாம்ஸந் தோற்றாதென் றுத்தரம்.

(உக) இப்படிக்கொத்த ஆத்மாநந்தத்தை முந்தின வத்தியாயத்திலே சொன்ன யோகமன்றியிலே இந்தவத்தியாயத்திலே சொன்ன விவேகத்தினுற்றானே சாதிக்கப்படுமோ இதற்குப்பிரமாண மேதென்கிற சங்கைக்கு:—

யோகத்தினு லியாதொரு பிரம மடையப்படுகிறதோ ஞானத்தினுலும் அதுவே யாத்மாநந்தமாக வெளிப்பட்டது. இதற்குச் சாங்கி

யத்தினு லடையப்படுகிற பதமே யோகத்தினுலு மடையலாமென்கிற கீதாவசனம் பிரமாணமென் றுத்தரம்.

(உஉ) சாங்கியம் யோகமென் றிரண்டுவழியாய்ப் பகுத்துச்சொல்வானேன், இரண்டுபேருக்கும் பலன் சரியாய்வருவானே னென்கிற சங்கைக்கு:—

ஒருத்தனுக்கு யோக மெளிதாய்வரும், ஒருத்தனுக்கு ஞானநிச்சய மெளிதாய் வருமென்கிறதை மனதிலே கண்டுகொண்டு கிருஷ்ணபகவான் இரண்டுவழியுஞ்சொன்னுர். யோகி, ஞானியென்கிற விருவருக்குஞ் சின்மாத்திரமென்கிற ஞானமும், இராகத்துவேஷமில்லாமையும், விஷயத்தை வற்சிக்கிறதும், பிரதியோகியாயிருக்கிற தேகாதிகளி லத்தியாசந் தவிருகிறதும், சரியானபடியினுலே மோக்ஷமுஞ் சரியாகவருகிறதென் றுத்தரம்.

(உங) தொய்தமெல்லாந் தோற்றுகையினு லஃதெப்படிப் புத்தியிலே படாமலிருக்குமென்கிற சங்கைக்கு:—

புத்திக்கேற்கத் தொய்தமேயில்லையென்று போகத்தக்கனவாக, அத்துவிதாநந்தமென்கிற பிரகரணத்திலே வெளிபண்ணுகிருேமென் றுத்தரம்.

(உச) எந்நேரமு மிந்த வாத்மாநந்தத்தை யநுசந்தானம் † பண்ணிக்கொண்டு பிரபஞ்சத்தைப் பாராமலிருக்கிறவன் காரியத்தினல் யோகியுமாவன். எளிதாகவும் மோக்ஷங்கிடைக்குமென்று மந்தனுக்கும் அநுக்கிரகம் பண்ணினேம்.

பன்னிரண்டாவது ஆத்மாநந்தம் - முற்றிற்று.

ஆகச்சங்கை-உச.

---

† அநுசந்தானம்-ஆராய்வு.

சிவமயம்.

பதின்மூன்றவது

அத்துவிதாநந்தம்.

(க) முந்திச்சொல்லப்பட்ட யோகாநந்தந்தானே, ஆத்மாநந்தமாகட்டும், தொய்தத்தோடே கூடியிருக்கிறவனுக்குப் பிரமத்துவமெப்படிச் சித்திக்குமென்கிற சங்கைக்கு:—

ஆகாசமுதலாகத் தன்னுடைய தேகபரியந்தமுள்ள ஜகத்தெல்லாம். தனக்குபாதானகாரணமாயிருக்கிற ஆநந்தத்திலே தோன்றியாநந்தத்திலே யிருந்து ஆநந்தத்திலே லயமாகிறபடியினாலே மண்ணைத்தவிரக் கடமில்லையென்கிறாற்போல, ஆநந்தத்தைத்தவிர வேறல்லவென்று வேதஞ்சொன்னபடியினால், அத்தொய்தம் பிரமமென்கிறது கூடுமென் றுத்தரம்.

(உ) குயவனாலுண்டாக்கப்பட்ட கடங் குயவனாலேயுடைந்ததென்கிறாற்போலச் சகத்திற்குப் பிரமம் நிமித்தகாரண மாகட்டுமென்கிற சங்கைக்கு:—

மண்ணைவிட்டுக் கடங்காணாததுபோலப் பிரமத்தைவிட்டுச் சகத்திராதபடியினாலே நிமித்தகாரண மெனக்கூடாது. உபாதானகாரணமாக வேண்டுமென் றுத்தரம்.

(ந) காரணத்தில் நின்று சகத்துண்டானது, ஆரம்பமாகவோ, பரிணாமமாகவோ, விவர்த்த மாகவோ என்கிற சங்கைக்கு:—

பிதாவும் புத்திரனும் வேறுபட்டிருக்கக் கண்டாற்போலக் காரணத்தைவிட்டுக் காரியம் வேறுபட்டுக்காணாதபடியினாலே நிரம்ஸவஸ்

துவிலே ஆரம்பபக்ஷங்கூடாது. பால் தயிரானாற்போலக் காரணந் தன்னுருக்கெட்டு வேறுரு வாகாதபடியினாலே பரிணாம பக்ஷமுங் கூடாது. பழுதையே பாம்பாகத் தோற்றுகிறாற்போல இங்குந் தன்னுருக்கெடாமல் வேறுருப்போலே தோற்றுகையினாலே விவர்த்த பக்ஷமே சித்தாந்தமென் றுத்தரம்.

(ச) நிரம்ஸ † வஸ்துவிலே விவர்த்தந்தானுங் கூடாதென்கிற சங்கைக்கு:—

நிரம்ஸமாயிருக்கிற வாகாசத்திலே தலம் நீலாதிகளைக் கற்பிக்கிறாற்போல நிரம்ஸமாயிருக்கிற பிரமத்திலும் ஜகத்துவிவர்த்த மென்பது கூடுமென் றுத்தரம்.

(ரு) அசங்கமாயிருக்கிற பிரமம் சகத்தை யெப்படிச் சிருஷ்டிக்குமென்கிற சங்கைக்கு:—

இந்திர ஜாலக்கார னிடத்திலிருக்கிற மாயை, இந்திரஜாலத்தைக் கற்பிக்கிறாற்போலப் பிரமத்தினிடத்தில் ஒருமாயாசத்தியுண்டு அதுவே சகத்தைக்கற்பிக்கிறது. பிரம மல்லவென் றுத்தரம்.

(சூ) மாயாசத்தி யொன்றுண்டென்கிறதுடன் அத்வைதங் கெட்டதென்கிற சங்கைக்கு:—

அந்தச்சத்தியும் பிரமத்தைத்தவிர வேறல்ல வாகையினால், அத்வைதத்துக்கு ஹானியில்லையென் றுத்தரம்.

(எ) அப்படியானால், அந்தச் சத்தியு மில்லை யென்கிற சங்கைக்கு:—

† நிரம்ஸம்-அபின்னம்.

காரியங் கண்டபடியினு லந்தச்சத்தியுண்டென் றுத்தரம்.

(அ) இந்த வசங்கதமெங்கேயாகிலுங் கண்டதுண்டோ வென்கிற சங்கைக்கு:—

அக்கினியிலிருக்கிற தாபசத்தி, அக்கினிதானுகவும் மணி மந்திரங்களினு லக்கினிக் கன்னியமாகவுங் காணவில்லையோவென் றுத்தரம்.

(கூ) இப்படிப் பிரமமுமல்ல, பிரமத்தைத் தவிரவேறல்லவென்கிற மாயாசத்தி யுண்டென்கிறதற்குப் பிரமாண மேதென்கிற சங்கைக்கு:—

அநந்தசத்தியுண்டு பிரமத்துக்கென்கிற வேதமும், வாசிட்டமும் பிரமாணமென் றுத்தரம்.

(கo) வாசிட்டத்தி லெப்படிச் சொல்லியிருக்கிற தென்கிற சங்கைக்கு:—

வாரீர் இரகுநாதரே! பிரமத்திலே அநந்தசத்தியுண்டு. அந்த அநந்த சத்தியினுலே பிரமந்தானே, பிரபஞ்சமாய்த் தோற்றுகிறது சரீரங்களிலே சிற்சத்தியும், ஆகாசத்திலே நிரவயவசத்தியும், வாயுவிலே சலனசத்தியும், கல்லிலே கடினசத்தியும், சலத்திலே சீதசத்தியும், அக்கினியிலே உஷ்ணசத்தியும், இவைமுதலான வநந்தசத்தியும் பிரமத்தினிடத்திலே காரியத்தினுலே காணப்படுகிறதென்றும்; சிருஷ்டிக்குமுன் னிந்தச்சத்தி, முட்டையிலே சூக்ஷமமாய்ப் பாம்பிருக்கிறுற்போலவும், விதையிலே மரமிருக்கிறுற்போலவும், காணப்படாமற் பிரமத்திலே யிருந்ததென்றும்; தேசகால விசித்திரத்தினுலே பூமியிலே பயிர்கள் முளைக்கிறுற்போலப் பிரமத்திலே சத்தியும், ஒவ்வொருக்காற் சகத்தென்கிற ரூபமாய் விளங்குமென்றும்; ஆதியி

லே மனதுண்டாயிற்று. பின்பு பந்தமோக்ஷமுண்டாயிற்று. பின்பு ஆகாசாதி சிருஷ்டியுண்டாயிற்றென்கிற கிரமமெல்லாம் பாலகாக் ஞாயிகை × போல மூடனுக்குச் சொன்னதேயல்லாம லுண்மை யல்லவென்று சொன்னாரென் றுத்தரம்.

(கக) பாலகாக் ஞாயிகையாவ தேதென்று கேட்ட விராமருடைய சங்கைக்கு:—

அசத்தென்கிற பட்டணத்திலே மூன்று இராஜகுமாரர்களுண்டு இரண்டுபே ரினிமேற் பிறக்கப்போகிறார்கள். ஒருத்த னினிகர்ப்பத்திலே வரப்போகிறான். புண்ணியவான்களா யிருக்கிறவிந்தமூன்று இராஜகுமாரர்களும் வேட்டைக்குப்போனவிடத்திலே ஆகாசத்தில் நல்ல தோப்பிருக்கிறதென் றாமைகள் சொல்லக்கேட் டாகாசத்திலேபோய்த் தோப்பைக்கண்டார்கள் அவ்விடத்திலே முயற்கொம்பைவெட்டிச் சிங்கநாதமா யூதிக்கொண் டினிமேல் வரப்போகிற பட்டணத்தி லின்றைக்குப் பிரவேசித்தாரென்று மூலத்தாதி சொன்ன கதையைக்கேட்டு விசாரமற்ற குழந்தையும் மெய்யென்றே நம்பினான். இந்தச் சம்சார கற்பனையும் விசாரமில்லாத மூடனுக்குண்மைபோலச் சொல்லியிருக்கிறதென் றிதுமுதலான வுபகதைகளோடே மாயாசத்தியினுடைய விஸ்தாரத்தை வசிஷ்டர் இரகுநாதருக்குச்சொன்னார். அந்த மாயாசத்தியைத்தானே நாமும் நிரூபிக்கிறோமென் றுத்தரம்.

(கஉ) மாயாசத்திக்கு இலக்ஷணமேதென்கிற சங்கைக்கு:—

காரியத்திற்கும் ஆதாரத்திற்கும் விலக்ஷணமா யிருக்குமென் றுத்தரம்.

× பாலகாக்ஞாயிகை-பொய்க்கதை.

(கங) காரியமென்பதேது, ஆதாரமென்பதேது, சத்தி இவைக்கு விலக்ஷணமென்ப தெப்படி, இம்மூன்றையு மொரு திருஷ்டாந்தத்திலே பகுத்துக் காட்டுமென்கிற சங்கைக்கு:—

வாய் குவிந்து பண்டியுண்டாயிருக்கிற கடமே காரியமென்பது. ஐந்து குணமுடைய மண்டானே யாதார மென்பது கடசத்தி. இந்தவிரண்டிலக்ஷணமு மில்லாததாயிருக்குமென் றுத்தரம்.

(கச) இந்த விரண்டிலக்ஷணமு மில்லாதசத்தி யெப்படியிருக்குமென் றறிகிற தென்கிற சங்கைக்கு:—

அநிர்வசநீயமென்றே றுத்தரம்.

(கரு) இந்தக்கடசத்தி, இன்னபடியென்று கூற்றறுக்கப்படாதபடியினாலே அதுவே யில்லை யென்கிற சங்கைக்கு:—

காரியவுற்பத்திக்கு முன்னிந்தச்சத்தி தனக்காதாரமாயிருக்கிற மண்ணிற்குள்ளே யொளித்திருந்தது நிமித்தகாரணமா யிருக்கிற குலாலாதிகள் சகாயமாய்வந்து கூடினவுடனே விகாரமாயிருக்கிற கடவடிவையடைந்து தனக்காதாரமாயிருக்கிற மண்ணிற்கு மண்ணென்கிற பேரையுமாற்றிக் கடமென்கிறதினாலே சத்தியில்லையென்னக்கூடாதென் றுத்தரம்.

(கசு) மண்ணிற்சத்தி காரியமாகிறதற்குக் குலாலன் வேண்டினாற்போலப் பிரமத்திற் சத்தி சகத்தாகிறதற்கு நிமித்தகாரணம் ஆர் என்கிற சங்கைக்கு:—

கடசத்தியுடைத்தானமண், சுயஞ்சடமான படியினாலே சைதன்னியமாயிருக்கிற குலாலன் வேண்டிற்று. மாயாசத்தியுடைத்தான பிரமம், சுயஞ்சுத்தசைதன்னிய மானபடியினாலே வேறே நிமித்தகாரணந் தேவையில்லையென் றுத்தரம்.

(கஎ) மண்ணென்றும், சத்தியென்றும், அதன்விகாரங்கடமெ ன்றும், உலோகத்தி லொருவருஞ் சொல்லக்காணேம் எல்லாவற்றை யுங்கூட்டிக் கடமென்றே சொல்லுகிறூர்கள் இதிலேகாரணமேதெ ன்கிற சங்கைக்கு:—

விசாரியாத வஞ்ஞானமே காரணமென் றுத்தரம்.

(கஅ) விசாரமாவதேது விசாரித்தவ னெதைக் கடம் என் பன் என்கிற சங்கைக்கு:—

குலாலவியாபாரத்திற்கு முன் மண்ணென்கிற பெயரே வழங் குகிறபடியினூலே கடசத்திற்கு மண்ணர்த்தமல்ல. குலாலவியாபார த்திற்குப் பின்கடமென்று வழங்கினபாண்டமும் மண்ணைத்தவிரவு மல்லவென்று பார்க்கிறதேவிசாரம். இப்படி விசாரித்தவன் கடமுஞ் சத்தியைப்போலே அநிர்வசநீயமானபடியினூலே அந்தச்சத்தியின் காரியமென் றறிவனென் றுத்தரம்.

(கக) அநிர்வசநீயத்தைச் சத்தியென்று சொல்லவேண்டுமே யல்லாமற் கடமென்று நிருவகிக்கிற தெப்படியென்கிற சங்கை க்கு:—

இந்திரஜாலக்காரனிடத்திற் சத்தி காண்பியாதபோது மாயை யென்றுங், காண்பிக்கிறபோது கந்தர்வ சேனையென்றுஞ் சொல்ல ப்படுகிறூற்போல் மண்ணிற் சத்தி காரியமாய்க் காண்பியாதபோது சத்தியென்றுங் காண்பித்தபோது கடமென்றுஞ் சொல்லப்படுமெ ன் றுத்தரம்.

(உ0) இந்த யுத்திக்குப் பிரமாண முண்டோ வென்கிற சங்கை க்கு:—

இப்படி மாயாமயமா யிருக்கிறதெல்லாம் வாக்கினலே சொல்லுமாத்திரமே யல்லாம லர்த்தமில்லையென்றும், அவிகாரமாயிருக்கிற மண்மாத்திரமே பொருளென்றும், வேதஞ் சொல்லுகிறதென் றுத்தரம்.

(உக) ஒருகாலத்திலே சத்தியென்றும், ஒருகாலத்திலே காரியமென்றும் காணப்படுகிற கடஞ் சத்தியமென் றங்கீகரியாவிட்டால் விவகாரமெப்படிக் கூடுமென்கிற சங்கைக்கு:—

இருவகைக்கு மாதாரமாயிருக்கிற மண்ணைவிடாதிருந்தபடியினலே விவகாரங் கூடும். மண்ணைவிட்டுப்பார்த்தால் வாக்குமாத்திரமே யல்லாம லிரண்டுகாலத்தினு மொருபடித்தாயிருக்கிற மண்போலே பொருளாகாதென் றுத்தரம்.

(உஉ) விகாரமென்றுங் கடமென்றுஞ் சொல்லப்பட்டபொருளே பொய்யானல் மண்ணென்றறிந்தவுடனே ஏன் காணமற்போகவில்லை யென்கிற சங்கைக்கு:—

விகாரம் பொருளுமல்ல வுண்மையு மல்லவென்று காணப்பட்டதே தோற்றமற்போனதென் றுத்தரம்.

(உங) காரியம் பொய்யென் றறிந்தது கொண்டு பிரயோசனமேது காணமற் போகவேண்டாமோ வென்கிற சங்கைக்கு:—

புருஷனிழற் றண்ணீரிற்குள்ளே தலைகீழாய்த்தோற்றினலு மவனில்லை பொய்யென் றறிகிறதுபோலக் காரியந்தோற்றினலும், பொய்யென் றறிகிறதே யில்லையென்று போனது. காணமற் போகி

றதல்ல. அத்சொய்த வாதிகளுக் கிப்படிக்கொத்த வறிவுதானே புருஷார்த்தமென் றுத்தரம்.

(உசு) இந்தத் திருஷ்டார்ந்தப்படிக்குச் சகத்தையும் பொய்யென்றூன்றிப்பார்த்துக் கொள்ளச்சொல்லி யெங்கேயாகிலுஞ் சொல்லியிருக்கிறதோ வென்கிற சங்கைக்கு:—

மண், பொன், இரும்பென்று மூன்று திருஷ்டாந்தமும் காரியமெல்லாம் பொய்யென்று பகுத்தறிகிறதும், சாமவேதத்திலே சொல்லியிருக்கிறதென் றுத்தரம்.

(உரு) கடம் பூஷணங் கத்தியென்று பரிணமித்ததுவே விவர்த்தத்திற்கெப்படித் திருஷ்டாந்தமாமென்கிற சங்கைக்கு:—

பால் தயிரானாற் போலே பரிபாகப் பட்டுப் போகாமல் மண்முதலியவற்றின் விகாரமழிந்தாற் காரணரூபமா யிருக்கையினாலே விவர்த்தத்திற்குத் திருஷ்டாந்தமாய்ச் சொல்லலாமென் றுத்தரம்.

(உசு) இந்தப்படிக்குச் சகத்தை யேதாய்க்காண வேண்டுமென்கிற சங்கைக்கு:—

காரியமெல்லாங் காரணமாகவே காணவேண்டுமென் றுத்தரம்.

(உஎ) சத்தியத்தை யறிகிறவிடத்திலே அசத்தியமென்கிற வறிவெப்படி வருமென்கிற சங்கைக்கு:—

மண்ணென்றறிகிறவிடத்திலே, விகாரம் அசத்தியமென்றறிகிறாப்போலவென் றுத்தரம்.

(உஅ) மண்ணெனன் றேதுக்காக வறியவேண்டும் விகாரத்தையே ன் மறுக்கவேண்டுமென்கிற சங்கைக்கு:—

உள்ளதையுள்ளபடி பார்க்கிறதே புருஷார்த்தம், இல்லாததை யுண்டென்று பார்க்கிறதே அநர்த்தமென் றுத்தரம்.

(உகூ) ஆனால், சகல பிரபஞ்சத்தையும் சோதித்துப் பார்க்கவே ண்டுமே யென்கிற சங்கைக்கு:—

ஒருகடத்தை மண்ணென்றறிந்ததுகொண்டு உலோகத்திலே யுண்டான பாண்டமெல்லாம் மண்ணென்று வகுப்பற்றுற்போல, ஒருவிஷயத்தை யூன்றிப்பார்த்துப் பிரமமென் றறிந்தாற் சகல பிர பஞ்சமும் பிரமமென்று வகுப்பறுமென் றுத்தரம்.

(௩0) பிரமத்திற்கு இலக்ஷணமேது, சகத்திற்கு இலக்ஷணமே தென்கிற சங்கைக்கு:—

சத்துச்சித்தாநந்த மூன்றும் பிரமலக்ஷணம். நாமரூப மிரண்டும் சகத்துலக்ஷணமென் றுத்தரம்.

(௩க) கடதிருஷ்டாந்தத்தைப்போல் எவிடத்திலும் சத்தியின் னது சத்திக்காதாரமின்னது சத்தியின் காரியமான விகாரமின்ன தென்கிறதைப் பகுத்துக்காட்டுமென்கிற சங்கைக்கு:—

இன்னபடியென்று நிரூபிக்கப்படாத மாயைதானே சத்தி. பிர மந்தானே சத்திக்காதாரம். நிர்விகாரமாயிருக்கிற பிரமத்தினிடத்தி லே கற்பிக்கப்பட்ட நாமரூபந்தானே சத்தியின் காரியமான விகார மென் றுத்தரம்.

(௩உ) இந்த மாயை யெந்த வடைவிலே விகாரத்தை யடைந்த தென்கிற சங்கைக்கு:—

சிருஷ்டிக்குமுன், இன்னதென்றுகாணப்படாயல் அவ்வியாகிருதமாக விருந்த விந்தமாயை, முந்தமுந்த வாகாசமென்கிற விகாரத்தை யடைந்ததென் றுத்தரம்.

(௩௩) கடவிகாரத்திற்கு மண்ணே சொரூபமாய்க் காணப்பட்டாற்போல வாகாசவிகாரத்திற்கும்பிரமமே சொரூபமென்கிறதைப் பகுத்துக் காட்டவேண்டுமென்கிற சங்கைக்கு:—

அஸ்திபாதிப் பிரியத்தைத்தவிர அவகாசமென்கிற சொரூபத்திற்கும் ஆகாசமென்கிற நாமத்திற்குஞ் சொரூபமில்லாதபடியினுலே நாமரூபம் சிருஷ்டியிலே யுண்டாய்ப் பிரளயத்திலே அழிகிறதுகொண் டிந்தவிரண்டும் மித்தையென்றும், மண்போலே சச்சிதானந்தமெப்போதும் நிலைபெற்றிருக்கையினுலே பிரமமே சத்தியமென்றும் பகுத்தறியென் றுத்தரம்.

(௩௪) ஆகாசத்திற்குப் பிந்தினவிகாரங்களேது, அவைகளிலே சச்சிதாநந்தத்தை காண்கிறதெப்படியென்கிற சங்கைக்கு:—

வாயு, அக்கினி, அப்பு, பிருதுவி, ஓஷதிகள், அன்னம், புருஷன், மிருகாதிகளெல்லாம் விகாரமென்பன. இப்படி வெகு விதமாயிருக்கப்பட்ட நாமரூபங்களெல்லாம், சச்சிதாநந்தத்தைவிட்டுக் காணுதபடியினுலே யித்தனையுஞ் சச்சிதாநந்தமென்கிறதிலே சந்தேகமில்லையென் றுத்தரம்.

(௩௫) சச்சிதாநந்தத்தை விடாதிருக்கிறபடியினுலே நாமரூபமும் நித்திய மாகட்டுமென்கிற சங்கைக்கு:—

உற்றுப்பார்த்தா லில்லாத நாமரூபங்கள் சத்தியமாயிராமற் பிரமத்தினிடத்திலே தோன்றி யழிந்துபோகிறதை விவேகம்பண்ணி யநுபவித்துக்கொள்ளென் றுத்தரம்.

(௩௬) விவேகம்பண்ணிப் பார்க்கிறதெப்படியென்கிற சங்கைக்கு:—

அலை நுரைகள் சமுத்திரத்திலேயுண்டாய் சமுத்திரத்திலே யிருந்து சமுத்திரத்திலே லயமாகின்றவைபோல வென் றுத்தரம்.

(௩௭) எப்படிப்பார்த்தாலும் நாமரூபமே முன்னிற்கின்றன, அவைபோகிறதற்குபாயமேதென்கிற சங்கைக்கு:—

வழியிற்றுரும்பு போல நாமரூபத்தைக் கூர்மையாய்ப் பாராமல் அசட்டைசெய்து பார்க்குந் திசையெல்லாம் சச்சிதானந்தமா யாதரவோடே கூட வப்பியாசிக்கிறபோது நாமரூப மின்னவிடமென்று காணமற்போய் அத்துவிதநிலை திடப்பட்டுச் சீவன்முத்தனுவனென் றுத்தரம்.

(௩௮) நாமரூபம் பொய்யென்கிற வுரம் எதனாலே திடப்படுமென்கிற சங்கைக்கு:—

நாமரூபத்தைக்கண்டவுடனே மண்ணிற் சத்தி யநேகம்பொய்களைச் சிருஷ்டித்தாற்போலவும் நித்திராசத்தி யானது கூடாத சொப்பனங்களைச் சிருஷ்டித்தாற்போலவும் பிரமத்தினிடத்திலே மாயை சிருஷ்டித்த பொய்யல்லவோ வித்தனையுமென் றெந்நேரமும்பார்த்ததிசயப்படாமலிருக்கில் நாமரூபம் பொய்யென்று திடப்படுமென் றுத்தரம்.

(௩௯) நித்திராசத்தி எங்ஙனம் கூடாத சொப்பனத்தைச் சிருஷ்டிக்கு மென்கிற சங்கைக்கு:—

சொப்பனத்திலே தான் ஆகாசத்திலே பறக்கவுந் தன்தலையை வெட்டித் தன்கையிலே தூக்கிப்போகவும் ஒரு நாழிகைக்குள்ளே யநேகவருஷம் வந்துபோகவும் செத்துப்போன புத்திராதிகள் திரும்ப வந்திருக்கவுங் காண்கிறதெல்லாங் கூடாதகாரியமல்லவோவென் றுத்தரம்.

(௪0) இதனாலே பிரமவிசாரமே தாயிற்றென்கிற சங்கைக்கு:—

நித்திராசத்திக்கேயித்தனை சத்தியுண்டானால், மாயைசத்தியானது நிர்விகாரமாயிருக்கிற பிரமத்தினிடத்திலே சடங்களையுஞ்சிதாபாசர்களென்கிற விகாரங்களையுங் கற்பிக்கிற ததிசயமல்லவென் றுத்தரம்.

(௪க) இந்த விகாரமும் பிரமமுங்கலந்து தோற்றுகிறவிடத்திலே, ஒன்று சத்தியமும், ஒன்று மித்தையுமாகப் பார்க்கிற தெப்படியென்கிற சங்கைக்கு:—

எங்குஞ் சரியாயிருக்கிற புடவை சத்தியமென்றும், அதிலே தனித்தனியே காணப்படுகிற சித்திர மித்தையென்றும் அறிகிறாற்போல, எங்குஞ் சரியாய்த்தோற்றுகிற சச்சிதானந்தத்தைச் சத்தியமென்றும், அதிலே தனித்தனியே தோற்றுகிற நாமரூபத்தை மித்தையென்றுங் கண்டு உபேக்ஷிக்கவேண்டுமென் றுத்தரம்.

(௪௨) தொழிலுடன்பட்டவனே, தானாகத்தோற்றுகையினாலே தன்னை யசங்கனென்றறிகிற தெப்படியென்கிற சங்கைக்கு:—

கிணற்றிலே தலைகீழாய்த் தோற்றினாலும், அதைத்தானல்லவென்று தள்ளிக் கரைமேலேயிருக்கிற தன்னைத்தானென்று சந்தே

கமற விருக்கிறாற்போல, மூன்றவஸ்தையினுங் கர்த்தாவா யோடித் திரிகிற தன்னைத் தானல்லவென் றுபேக்ஷித்துச் சாக்ஷியாயிருக் கிற சித்தைத்தானென்று சந்தேகமறக் கண்டிருக்க வேண்டுமென் றுத்தரம்.

(சங) மனதிலே ஆவசியமாய் மூண்டிருக்கிற பிரபஞ்சகாரியத் தை யுபேக்ஷைபண்ணுகிற தெப்படி யென்கிற சங்கைக்கு:—

க்ஷணத்திற்கொருக்கால் வெவ்வேறாய்வருகிற மனோராச்சியத் தைச் சகலரும், அம்மட்டிலே யுபேக்ஷிக்கிறாற்போல வாலிபத்தி லே யெவ்வனம் வேண்டுமென்றாலும் வாராமல், எவ்வனத்திலே வார்த்தீகம் வேண்டுமென்றாலும் வாராமல், நேற்றுச் செத்தவனை யின்றைக்கு வேண்டுமென்றாலும் வாராமல், நேற்றைத்தின மின் றைக்கு வேண்டுமென்றாலும் வாராமல், மனோராச்சியம்போலே யங்ஙனே கண்ட தங்ஙனே யழிந்து போகிற படியினாலே நாம ரூபந் தோற்றினாலும் பொய்யென் றுபேக்ஷிக்க வேண்டுமென் றுத் தரம்.

(சச) இப்படிச் சர்வாத்மனாய்ப் பிரபஞ்சத்தை யுபேக்ஷிக் கச் சொன்னார் சரீர நிருவாகமெப்படி நடக்குமென்கிற சங்கை க்கு:—

கூத்தாடிபோலே வாசனை தானே நிருபவிக்கு மென் றுத்தரம்.

(சரு) ஒருக்காற் பாலனென்றும் ஒருக்காற் கிழவனென்றும், நா னாவிதமாக வழங்குகிறதே தானாகக் காணப்படுகையினாலே, தான் ஏகரீதியாயிருக்கிற சைதன்னிய மென்கிறது மனதிலெப்படித் திட ப்படுமென்கிற சங்கைக்கு:—

வெவ்வேறே ஜலப்பிரவாகங்க ளெடுத்தாலும் நடுவிலிருக்கிற பருங்கல் லசையாததுபோல நாமரூபங்கள் வெவ்வேறே பரிபாகப் பட்டாலும், ஏகரீதியாயிருக்கிற சின்மாத்திரமே நாமென்றறிகவென் றுத்தரம்.

(சுசு) இந்தப் பாவனை முதிர்ந்தால் நிலையெப்படி யிருக்குமென் கிற சங்கைக்கு:—

கண்ணாடியிலே தோற்றின பட்டணம்போலே சச்சிதாநந்தத்தி லே சகம்காணுமென் றுத்தரம்.

(சஎ) நாமரூபமல்லவோ முந்தித்தோற்றுகிறது அதையெப்படி யுபேக்ஷிக்கிற தென்கிற சங்கைக்கு:—

கண்ணாடியைக் காணமற் பிரதிவிம்பந் தோற்றாததுபோலச் சச்சிதாநந்தந் தோற்றாமற் பிரதிவிம்பந் தோற்றமாட்டாது. ஆகை யாலே முந்தித்தோற்றுகிற சச்சிதாநந்தத்தைப் பார்த்து மேல் நாம ரூபத்திலே புத்தி நாடாமல் நிறுத்தினாற் றடைப்பட்டது தொய்த மாக வத்துவிதப் பிரமநிலை தானாகவே மிஞ்சும். இந்தநிலையிலே தா னே யெல்லாரு நின்றினைப்பாறக் கடவர்களென் றுத்தரம்.

பதின்மூன்றவது அத்துவிதாநந்தம்-முற்றிற்று.

ஆகச்சங்கை-சஎ.

சிவமயம்.

பதினைன்காவது

வித்தியா நந்தம்.

யோகத்தினுலும், ஆத்மாநந்தவிவேகத்தினுலும், தொய்தமித்தையென்கிற சிந்தனையினுலும், பிரமாநந்தங் கண்டவனுடைய வித்தியாநந்தத்தை நிரூபிக்கிறோம்.

(க) வித்தியாநந்தமேது, அஃதெத்தனைவிதமா யிருக்குமென்கிற சங்கைக்கு:—

விஷயாநந்தம்போல வித்தியாநந்தமும், அந்தக்கரண விருத்திரூபமா யிருக்கும். அது, துக்கநிவிருத்தி யென்றும், காமியலாபமென்றும், கிருதகிருத்திய மென்றும், அடையவேண்டியதெல்லாமடைந்த சந்தோஷ மென்றும், நான்குவிதமா யிருக்குமென் றுத்தரம்.

(உ) துக்கமெத்தனைவிதம், அவை ஞானத்தினு லெப்படிப்போயின. காமியமெத்தனைவிதம், அவை ஞானத்தினு லெப்படி யடையப்பட்டன. கிருத்திய மெத்தனைவிதம், அவை ஞானம்வந்ததுகொண்டெப்படிச்செய்து முடிந்ததாயின. அடையப்போகிற புருஷார்த்தமேது, அது ஞானத்தினு லெப்படி யடையப்பட்டதென்கிற எண்வகைச் சங்கைக்கு:—

இகலோக துக்கமென்றும், பரலோக துக்கமென்றுந், துக்கமிரண்டுவிதமா யிருக்கும். ஆத்மாவே நாமென் றறிந்தாற் புசிக்கிறவனில்லாமற் போகிறபடியினுலும், நாமரூபம் பொய்யென்றறிந்தாற் போக்கியமில்லாதபடியினுலும் போக போக்கியங்களைக் குறித்து

வருகிற விகலோக துக்கம் போயிற்று. தாமரையிலையிற் றண்ணீ ரொட்டாததுபோல ஞானியை ஆகாமியகர்மம் பற்றாதபடியினாலும் அக்கினியி லிட்ட பஞ்சுபோல ஞானிக்குச் சஞ்சிதகர்மம் வெந்து போனபடியினாலும், புண்ணியபாவசிந்தனையாய் வருகிற பரலோக துக்கம்போயிற்றென்று துக்கநிவிருத்தி சொல்லப்பட்டது. காமியம் பதினொருவிதமுண்டு. அவையாவன:—அழகிளமையுடையவனாய் அரோகதிடகாத்திரனாய்ப் பஞ்சாசத்கோடி பூமண்டலமு மொருகுடைக்கீழாண்டு புசிக்கிற தொரு மநுடாநந்தம். இந்தக்கற்பத்திலே புண்ணியபலத்தினாலே கந்தர்வனானவன் மநுடகந்தர்வன்; இவனாநந்தம்: மநுடாநந்தத்திலும் நூறத்தனையதிகம். பூர்வகற்பத்துப் புண்ணியத்தினாலே கந்தர்வபதத்தை யடைந்தவன் தேவகந்தர்வன்; இவனாநந்தம்: மநுடகந்தர்வ னாநந்தத்திலும் நூறத்தனை யதிகம். இதிலும் நூறத்தனையதிகம் பிதுர்லோகத்தி லொருவ னாநந்தம். கற்பாதியிலே தேவனாய்ப் பிறந்தவன் ஆசானதேவன். இவனாநந்தம்:பிதிர்லோகத்தி லொருவனாநந்தத்திலும்நூறத்தனையதிகம். இந்தக்கற்பத்திலே அசுவமேத முதலானவைகள் பண்ணி உந்நதபதத்தை யடைந்தவன் கர்மதேவன்; இவனாநந்தம்: ஆசானதேவாநந்தத்திலும் நூறத்தனையதிகம். இதிலும் நூறத்தனை யதிகம் முக்கிய தேவாநந்தம். இதிலும் நூறுகொண்டது இந்திராநந்தம். இதிலும் நூறுகொண்டது பிரகஸ்பதியாநந்தம். இதிலும் நூறுகொண்டது விராட் புருடாநந்தம். இதிலும் நூறுகொண்டது ஒரு * சூத்திராத்மாநந்தம். ஆக இந்தப்படி வாக்குக்கும் மனதிற்கு மெட்டினவாநந்தம் பதினொன்று சொல்லப்பட்டன. வாக்குக்குமனதிற்கு மெட்டப்படாத ஆத்மாநந்தத்தையடைந்த ஞானி இராகத்துவேஷாதிகளோடே கூடியிருக்கிற விந்தப் பதினொருவகை யாநந்தத்தையும்

* சூத்திராத்மா என்றது-பிரம்மா.

நாய்கக்கினசோறுபோலே தோஷங்கண்டு வெறுத்தபடியினாலும், இத்தனையு மிந்திரஜாலமாய்க் காண்கையினாலும், இத்தனை பேராயிருந்து புசிக்கிறது நாமொருவன்றானேயென்கிற வநுசந்தானத்தினாலும், அவர்களைப்போலே கிரமமின்றி ஞானிக்குச் சகலபோகங்களுமொருமிக்கவந்தன. இகலோகத்தைக் குறித்தும், பரலோகத்தைக் குறித்தும், கிருத்தியம் மூன்றுவிதமுண்டென்றும், இஃதெல்லாம், ஞானிக்குத் தீர்ந்தமுறியாகப் பண்ணிமுடிந்ததென்றும், அடையப்போகிற புருஷார்த்தம் பிரமமென்றும், அஃது, அபரோக்ஷக்ஞானத்தினாலடைந்து வருப்பற்றதென்றும், இப்படி யிந்த நான்கு வகையுந் திருப்தி தீபத்திலே வெட்டவெளியாகச் சொல்லப்பட்டுள்ளன. அவைகளையும் இவ்விடத்திலே கண்டுகொள்ள வேண்டுமென்றுத்தரம்.

இப்படி விருத்தியாநந்தஞ் சொல்லப்பட்டது. இந்தநிலை வருமளவும், பிரமாப்பியாசம் பண்ணவேண்டியது.

பதினான்காவது வித்தியாநந்தம் - முற்றிற்று.

ஆகச்சங்கை-உ.

உ

சிவமயம்.

பதினைந்தாவது

விஷயாநந்தம்.

பிரமாநந்தத்தி லேகதேசமாய்ப் பிரமாநந்தத்திற்கு வழியாயிருக்கிற விஷயாநந்தத்தை நிரூபிக்கிறோம்.

(௧) விஷயாநந்தமாவதேது, அஃதெந்தவிதத்திலே காணலாமென்கிற சங்கைக்கு:—

விருத்தியிலே பிரதிவிம்பித்த வாநந்தம் விஷயாநந்தம். அதை விவேகத்தினாலே காணலாமென் றுத்தரம்.

(௨) எல்லாவிருத்தியிலும் ஆநந்தமேன் பிரதிவிம்பிக்க வில்லையென்கிற சங்கைக்கு:—

ஜலத்திலே பிரதிவிம்பித்த சந்திரன் குழம்பின ஜலத்திலே சாமான்யமாகத் தோற்றுகிறாற்போலவும், நிர்மலஜலத்திலே தெளிவாய்த் தோற்றுகிறாற்போலவும், சிறிது விருத்திகளி லாநந்தந் தோற்றும். சிறிது விருத்திகளிற் றோற்றாதென் றுத்தரம்.

(௩) ஆனால், அந்தக்கரணவிருத்தி யெத்தனைவிதம், அந்தவிருத்திக்கு இலக்ஷணமேதென்கிற சங்கைக்கு:—

அந்தக்கரணத்திற்குச் சாந்தவிருத்தியென்றும், கோரவிருத்தியென்றும், மூடவிருத்தியென்றும், விருத்திமூன்று விதமாகவிருக்கும். வைராக்கியம், பொறுமை, உதாரமுதலானவை சாந்தவிருத்தி. காமக்குரோதலோப முதலானவை கோரவிருத்தி. மயக்கங் கலக்கம் பயமுதலானவை மூடவிருத்தியென் றுத்தரம்.

(ச) பிரமம், இந்தவிருத்தியிலெப்படிப் பிரதிவிம்பிக்குமென்கிற சங்கைக்கு:—

கோரவிருத்தி, மூடவிருத்தி, இரண்டும் கலங்கின விருத்தியானபடியினாலே, சித்துமாத்திரம் பிரதிவிம்பிக்குமேயல்லாமல், ஆநந்தம் பிரதிவிம்பிக்க மாட்டாது. சாந்தவிருத்தி, நிர்மலமானபடியினால், அதிலே சித்தோடேகூட வாநந்தமும் பிரதிவிம்பிக்குமென்றுத்தரம்.

(ரு) இதற்குப்பிரமாண மேதென்கிற சங்கைக்கு:—

கோரமூடவிருத்திகளில், ஆநந்தாநுபவங் காணப்படவில்லை. சாந்தவிருத்தியில், ஒருசுகாதிசயங் காணப்படுகிறதென் றுத்தரம்.

(சு) கோரமூடவிருத்திகளிலே சுகாநுபவமில்லையென்கிறதெப்படி யென்கிற சங்கைக்கு:—

கிரகக்ஷேத்ராதி விஷயத்திலே யாசைமூள்கிறபோது இதுநமக்குக் கிடைக்குமோ கிடையாதோவென்கிற துக்கங் கூடவருகையினாலுங், கிடையாமற்போனாற் றுக்கமதிகமானபடியினாலுங், கெடுத்தவன்பேரில் வயிரம் உண்டாகிறதினாலும், அவனை நிக்கிரகிக்கக்கூடாவிட்டா லழுகையாய் முடிகையினாலுங் கோரமூடவிருத்தியிலே துக்கமேயல்லாமற் சுகம் லேசமுமில்லையென் றுத்தரம்.

(எ) சாந்தவிருத்தியிலே சுகாதிசயமெப்படி யென்கிற சங்கைக்கு:—

காமியம் லபித்தவுடனே சாந்தமானவிருத்தியிலே சுகப்பிரதிவிம்பம் மிகுந்து போகத்திலும் விருத்திசாந்தமான படியினாலே சுகாதிசயந்தோற்றுகிறது. இப்படிவிஷயங்கிடைத்ததற்குத் தக்கன வாநந்தம் பிரதிவிம்பிக்கிறது. ஆகையினாலே சாந்தவிருத்தியுள்ள விடமெல்லாம் ஆநந்தந் தோற்றுகிறதிலே சந்தேகந் தேவையில்லையென் றுத்தரம்.

(அ) இப்படிப் பிரதிவிம்பிக்கிற பிரமத்திற்குச் சுபாவமெத்தனை விதமாயிருக்கும், எந்தவுபாதியி லெந்தச்சுபாவங் காணப்படுமென்கிற சங்கைக்கு:—

சத்தென்றும், சித்தென்றும், ஆநந்தமென்றும், பிரமத்திற்கு மூன்று சுபாவமுண்டு. மண், கல், முதலான ஜடங்களிலே சத்துமாத்திரந் தோற்றுமேயல்லாமல், மற்றவிரண்டுந் தோற்ருது. கோரமூடவிருத்திகளிலே சத்துஞ் சித்துந்தோற்றும். ஆநந்தந் தோற்ருது. சாந்தவிருத்தியிலே சச்சிதாநந்த மூன்றுந் தோற்றுமென்றுத்தரம்.

(கூ) மாயைக்கெத்தனை சுபாவமுண்டு, எந்தச்சுபாவமெதிலே தோற்றுமென்கிற சங்கைக்கு:—

அசத்தென்றும், ஜடமென்றும், துக்கமென்றும், மாயாசொரூபம் மூன்றுவிதமாயிருக்கும். அசத்து மநுடக்கொம்பு முயற்கொம்பிலே காணப்படும். மண், கல், முதலானவைகளிலே ஜடங்காணப்படும். கோரமூட விருத்திகளிலே, துக்கங்காணப்படும். சாந்தவிருத்தியிலே ஜடமும் போதமு மிருக்கிறபடியினுலே மாயை பிரமத்தோடே கலந்து காண்பிக்குமென் றுத்தரம்.

(க0) இப்படித் தோற்றுகிற மாயைசொரூபங்களைப் பிரமமாகக் காண்கிற தெப்படியென்கிற சங்கைக்கு:—

அசத்தை, முயற்கொம்பை மநுடக்கொம்பைப்போலே யுபேக்ஷிக்க, சடங்களை நாம ரூபத்தைவிட்டுச் சத்துமாத்திரமாய்ப் பார்க்க, கோரமூடவிருத்திகளைத் துக்கத்தைத்தள்ளிச் சத்துஞ் சித்துமாய்ப்பார்க்க, சாந்தவிருத்திகளைச் சச்சிதாநந்தமாய்க்காண, இப்படி விஷயாநந்தத்தின் வழியே மூடனுக்கும் பிரமாநந்தத்தை யடையலாமென் றுத்தரம்.

(கக) மாயாரூபத்தை யிப்படிப் பகுத்துத் தியானித்ததுகொண்டு பிரமாநந்த மெப்படிக் கிடைக்குமென்கிற சங்கைக்கு:—

இந்தத் தியானத்திலே சித்தமேகாக்கிரமானவுடனே பிரமவித்தை திடப்படும். இந்தப்பிரமவித்தையிலே பேதமாயிருக்கிற வுபாதிகளெல்லாந் துடைப்பட்டபடியினாலே சச்சிதாநந்த அகண்டாகாசமாகத் தோற்றுமென் றுத்தரம்.

(கஉ) பேதத்திற் குபாதிகளேது, அந்தவுபாதிகளெதனாற் றுடைபட்டன, பிரமம், நிரூபாதியாய்த் தோற்றுகிறதெதனா லென்கிற சங்கைக்கு:—

சாந்தவிருத்தி கோரமூடவிருத்தி முதலான ஜடங்கள் இவைகளெல்லாம் பேதத்திற்குபாதி. யோகத்தினாலும் விவேகத்தினாலும் இந்த வுபாதிகளெல்லாந் தள்ளப்படும். பின்னைத் திரிபுடியில்லாதபடியினாலே நிரூபாதியாய்ச் சுயம்பிரகாசமாயிருக்கிற பிரமத்துவம் அகண்டாநந்தவடிவாய்த் தானாகவே விளங்குமென் றுத்தரம்.

இப்படிப்பிரமாநந்தத்திற்கு வழிபாடாகத்தானே விஷயாநந்தத்தை நிரூபித்தோம். இந்தவழியே எல்லாரு மோக்ஷமடையைக் கடவர்கள் என்பதாம்.

பதினைந்தாவது விஷயாநந்தம்-முற்றிற்று.

ஆகச்சங்கை—கஉ.

ஆகப்பிரகரணம். கரு-க்குக் கூடிய சங்கை கூ0ரு.

பஞ்சதசப்பிரகரணம் சமாப்தம்.